797

குண்டூசி

மே. 1958 . . . . 75 சதம்



மே
23
முதல்
B.A.S. புரொடக்ஷன்ஸ்
செஞ்சுலக்ஷ்மி
-தமிழ்-
தயாரிப்பு & டைரக்ஷன்
B.A. சுப்பாராவ்
சங்கீதம்
S. ராஜேஸ்வரராவ்
உரிமையாளாகள
மஹாலக்ஷ்மி பிக்சர்ஸ். 183, பிராட்வே, மதராஸ்-1

L. R. SWAMI

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 MAY 1958
MADRAS



சூறாவளி வேகம், மின்னல் வேகம் இவை எல்லாம் வில்லன் வீரப்பா, சொந்தப் படம் எடுத்து வரும் வேகத்துக்கு இணையாக முடியாது! அவ்வளவு விரைவாக 'பிள்ளைக் கனியமுது'வைப் பேசும் பொற்சித்திர மாகப் படமாக்கி வருகிறார்.

ஒரு ஜமீன்தாரின் வெளிவேடம், ஓர் ஆடலழகியின் ஆசைப் புயல், அழகு ஆரணங்கு ஒருத்தியின் பிள்ளைப் பாசம் எல்லாம் அடங்கிய நெஞ்சுருகும் எத்தனையோ சம்பவங்களுடன் உன்னதச் சித்திரமாக உருவாகி வரும் படம் இது.

முதன் முதலாக ஈ. வி. சரோஜாவைத் துணிந்து கதாநாயகியாக ஏற்பாடு செய்து நன்றாக நடிக்க வைத்திருக்கும் பெருமையையும் தேடிக் கொண்டிருக்கிறார்கள் பி. எஸ். வி. பிக்சர்ஸார்.

பல விதங்களிலும் சிறப்பான முறையில் தயாராகி வரும் இப்படம் சில நாட்களில் வெளிவர இருக்கிறது.

இந்த ஊசியில்

மே- '58

மாலை - 1] [மலர் - 4

கேஸ்கர் கவனிக்கட்டும் ... 3
உண்மையே பேசினால் ... 6
சினிமா உலகில் ... 7
கலைக் கூடங்களில் கடந்த மாதம் ... 10
எனக்குப் பிடித்த வேஷங்கள் ... 16
வட நாட்டில் ... 21
அபவாதம் ... 24
இப்படிப் பேசுவார்களா? 30
நாடோடி மன்னன் (பட அனுபந்தம்) ... 41
கேளுங்கள் ... 45
பூகைலாஸ் (பட அனுபந்தம்) ... 48
மல்லிகையின் மணம் ... 51
பொதுஜனம் பேசுகிறார் ... 57
பிலிம் பக்கடா ... 61
வலம்புரி முத்து ... 62
வாழ்க்கை (வி)சித்திரம் ... 71
நுனிப்புல் ... 74
நட்சத்திரத்துடன் ஒரு நாள்–சாவித்திரி ... 79
இது செய்தி ... 87
வளரும் படங்கள் ... 92
கடன் வாங்கிக் கல்யாணம் 95
செஞ்சு லக்ஷ்மி (பட அனுபந்தங்கள்) ... 99
நிருபர் படம் பார்க்கிறார் ... 103
பொம்மை கல்யாணம் (திரைக் கதை வசனம்) ... 107

★

வர்ணப் படங்கள் :

லம்பாடி, பார்ஸி, பூக்காரி, சைனைக்காரி எல்லாம் சௌகார் ஜானகியே.

இளம் நடனமணிகளான சாருபாலா — இந்துபாலாவுக்கு மத்தியில் பத்மினி.

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. யாரையும் குறிப்பிடுபவன அல்ல.

கேஸ்கர் கவனிக்கட்டும்

தென்னவர்களுக்குத் துரோகம் செய்வது, அவர்களை மதிக்காமல் இருப்பது என்பது இப்போது புது டில்லி சர்க்காருக்கு வழக்கமாகி விட்டது!

அதுவும் கலைத்துறையில் இந்தத் துரோக மனப்பான்மையை வெற்றிகரமாகக் காட்டிவிடுவது என்று கனம் கேஸ்கர் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார் என்றே கருதுகிறோம்.

முன்பு 'சுதந்திர உதயம்' என்ற முழு நீளச் செய்திப்படம் ஒன்றைப் பல மூளைகள் சேர்ந்து உருவகப்படுத்தினார்களே, அப்போது நடந்த அநீதியை - துரோகத்தை - அக்கிரமத்தை - அலட்சியத்தை இப்பொழுது நினைவு படுத்துகிறோம்.

அந்தச் செய்திப் படத்தில், சுதந்திரத்துக்காகப் பாடுபட்டவர்களில் தென்னிந்தியர்களில் ஒருவரைக்கூடக் காட்டவில்லை.

சரித்திரம் மறவாத தியாக புருஷர்களை, தென்னிந்திய அரும்பெரும் தலைவர்களை அந்த அதிமேதாவிப் படத்தயாரிப்பாளர்கள் மறந்துவிடவில்லை! வேண்டுமென்றே விட்டுவிட்டார்கள்.

அதைக் கண்டுவிட்டுத் தென்னவர்கள் கொதித்து எழுந்து, அந்தக் குறையை - நீங்காக் குறையைக் குறிப்பிட்டுச் சொன்னபோது, ஒன்றுமே அறியாதவர்களைப்போல 'அடடா, அப்படியா?' என்று கேட்டுக் கொள்வதுபோல் பாவனை செய்தார்கள். வருந்துவதுபோல் நடித்தார்கள். தென்னகத்துத் தலைவர்கள் சிலரையும் சேர்த்துவிடுவதாகப் பெயர் பண்ணினார்கள்.

இதெல்லாம் எப்பொழுது? இங்கே எதிர்ப்புக் குரல் கிளம்பிய பிறகுதான்! பாராளும் மன்றத்திலே இதுபற்றிக் கேள்வி கேட்ட பின்னர்தான்!

தெற்கே இருப்பவர்கள் விழித்துக்கொண்டு விட்டார்கள் என்று அறிந்த பிறகுதான்!

அந்த அலட்சிய மனோபாவ நிகழ்ச்சி நடந்து அதிக நாட்களாகவும் இல்லை. கேஸ்கர் அண்ட் கம்பெனி இப்படிச் செய்யலாமா என்று தென்னாட்டிலுள்ள ஒவ்வொரு உள்ளமும் உறுமிக் கொண்டுதான் இருக்கிறது.

அது அடங்கும் முன்னரே இப்பொழுது இரண்டாவது அநீதி ஒன்று நடந்திருப்பதைக் குறிப்பிடுகிறோம்.

சமீபத்தில் சிறந்த சினிமாப் படங்களுக்குப் பரிசளிப்பு விழா புது டில்லியில் நடந்ததே, அப்போது எடுக்கப்பட்ட செய்திப் படத்தை இப்போது நாடெங்கும் காட்டுகிறார்கள். அதில் நம்மவர்களான முதல் பரிசு பெற்ற ஒரு ஏவி. எம். பரிசு பெறும் காட்சியையோ, பாராட்டுப் பத்திரம் பெறும் எம். ஏ. வேணு அவர்களைப்பற்றிய பகுதியையோ காட்டவில்லை!

அந்த இரு தென்னவர்களைத் தவிர வடக்கே பரிசும் பாராட்டும் பெற்றவர்கள் ஒருவரைக்கூட விட்டுவிடாமல் செய்திப் படத்தில் நன்றாகத் தெளிவாகக் காட்டுகிறார்கள்!

ஏன் இந்த அநீதி? இப்படி ஒரு தலைப்பட்சமாகத் திரை மறைவு செய்து செய்திப்படம் திரையிடவா செய்திப்பட இலாகா என்று ஒன்று இருக்கிறது?

அந்த இலாகாவி லுள்ளவர்க ளெல்லாம் வடநாட்டு வெறியர்களா? தென்னவர்களைக் கண்டால், அவர்களின் திறமையைக் கண்டால் வெறுக்கிற வெறியர்களா என்று கேட்கிறோம்.

இந்தத் துரோகத்துக்குப் பொறுப்புள்ள மந்திரி கேஸ்கர் உடனே அவசர நடவடிக்கை எடுத்து, ஆவன செய்து அந்தத் திரை மறைவு இருளை விரட்டி அடிக்க முன் வருவாரா?

இப்படி எல்லாம் சர்க்காரின் நிழலிலேயே வேற்றுமைக் குழி பறிக்க ஆதரவு கிடைக்குமானால் அதைவிட மகத்தான துரோகம் வேறு ஒன்றும் இருக்க முடியாது.

'இது பற்றி இப்போதுதான் தெரியும்' என்று அறிக்கை விடுவதை விட, இதுபோல இனி எப்பொழுதும் நடக்காமல் இருக்க கனம் கேஸ்கர் ஏற்பாடு செய்தால்தான் அவரது உள்ளம் எப்படிப்பட்டது என்று புரிந்து கொள்ள முடியும். இல்லை யென்றால் 'கேஸ்கர் களங்கம்' இருந்து கொண்டேதான் இருக்கும்.

வெட்டின் படிப்பினை

சினிமாப்பட உற்பத்தியாளர்களைக் கதிகலங்க வைத்த ஓர் உத்தரவை இந்திய சர்க்கார் வாபஸ் பெற்றுவிட்டார்கள்.

கச்சா பிலிம் இறக்குமதியில் 40 சதவிகிதம் சென்ற வருஷம் குறைக்கப் பட்டது. ஆயினும், மார்க்கட்டில் ஏராளமான கச்சா பிலிம் இருந்ததால் இந்தக் கட்டுப்பாட்டின் கடுமை படத்தொழிலை அவ்வளவாக பாதிக்கவில்லை. ஆனால், கைவசமுள்ள ஸ்டாக் சீக்கிரத்திலேயே தீர்ந்து விட்டது.

இந்தச் சமயத்தில் இந்திய சர்க்கார் மற்றொரு உத்தரவைத் திடீரென்று பிறப்பித்தார்கள்! அதாவது, ஏப்ரல் 1-ந் தேதி முதல் கச்சா பிலிம் இறக்குமதி மேற்கொண்டு 20 சதவிகிதம் குறைக்கப்படும் என்று அறிவித்தார்கள்! இதனால் மொத்த இறக்குமதி 'வெட்டு' நாற்பதிலிருந்து அறுபது சதவிகித மாக உயர்ந்திருக்கிறது.

சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட வரையில் இந்த வருஷத்தில் புதுப்படத் தயாரிப்புகள் அதிகமாகியிருந்தன. உற்பத்தி பெருகிக் கொண்டிருந்த காலத்தில், மூலப் பொருளான கச்சா பிலிம் இறக்குமதியைப் பாதிக்கு மேல் குறைத்தது, அத்தொழிலையே ஸ்தம்பிக்க வைத்துவிட்டது! 'வெட்டு' ரத்து செய்யப் படாவிட்டால் படத்தொழிலில் பெரிய நெருக்கடி ஏற்பட்டு விடுமென்பதைத் தகுந்த புள்ளி விவரங்களுடன் உற்பத்தியாளர்கள் எடுத்துக் காட்டினார்கள். சினிமாத் தொழில் ராஜ்ய சர்க்கார்களுக்குப் பெரிய வருமானம் அளிக்கும் ஒரு இனமாகும். அத்துடன், மட்டுமில்லாமல் படத் தயாரிப்பிலும், அதனையொட்டிய பல தொழில்களிலும் லட்சக்கணக்கானவர்கள் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களெல்லாம் வேலைகளை இழந்து, வேலையில்லாதார் பட்டாளத்தைப் பெருக்கியிருப்பார்கள். அத்தகைய விபரீதம் ஏற்படுவதற்கு முன்பே நிலைமை சீர்படுத்தப்பட்டது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். ஏப்ரல் 1-ந் தேதி முதல் அமுலுக்கு வந்த 20 சதவிகித 'வெட்டை' சர்க்கார் ரத்து செய்துவிட்டார்கள். இதற்காக முழு மூச்சுடன் பாடுபட்டு அணுகுண்டு போன்ற அறிக்கைகளை விட்டு வெற்றிபெற்ற விஜயாவின் அதிபர் நாகிரெட்டி அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறோம். இது உடனடியான ஆபத்தைத் தவிர்த்திருக்கிறதென்பது உண்மையே. ஆயினும், படத்தொழில் 'நித்தியகண்டம் பூர்ணாயுசு' என்ற நிலைமையிலிருந்து தப்ப வேண்டுமானால் சென்ற வருஷம் விதிக்கப்பட்ட 'வெட்டும்' ரத்து செய்யப்பட வேண்டும்.

இந்தச் சம்பவங்கள் படத்தொழிலுக்கு ஒரு பெரிய அதிர்ச்சியை விளைவித்தன வென்றாலும், இவற்றினால் உற்பத்தியாளர்கள் ஒரு படிப்பினையைக் கற்றுக் கொண்டிருப்பார்களென்று நம்புகிறோம். படத்தின் நீளத்தை நாமாகவே குறைத்துக்கொள்ள முன்வந்தாலொழிய அவ்வப்போது இம்மாதிரி நெருக்கடிகள் ஏற்பட்டுக்கொண்டு தானிருக்கும்.

இரண்டரை மணி நேரத்துக்குள் ஓடும் படங்களையே எடுப்பது என்று நம் படாதிபதிகள் ஏகோபித்து முடிவு செய்து கொண்டாலொழிய அவர்களுக்கு விமோசனம் பிறக்கப் போவதில்லை.

அடிக்கடி திடீர் ஆபத்துகளுக்கு ஆளாகாமல் சினிமாத் தொழில் சீரானதும், நிலையானதுமான முன்னேற்றம் பெறவேண்டுமென்ற விருப்பம் காரணமாகவே, நம்மிடமுள்ள குறைபாடுகளையும் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கூறுகிறோம்.

உண்மையே பேசினல்!

கதாநாயகன் :

காற்றையும் மழையையுமே ஆகார மாகக் கொண்டிருந்த நாட்கள் மாறி 'ஓவலில்' குளித்துக் கொண்டிருக்கும் காலத்துக்கு வந்ததை 'குருட்டு அதிர்ஷ்டம்' என்று தான் சொல்ல வேண்டும். என்னுடன் பல படங்களில் கதாநாயகியாக நடித்து வருகிற..........க்கும் எனக்கும் காதல் என பொதுஜனம் நம்புவது தவறு. அதோடு 'அவளையே மனைவியாக்கிக் கொள்ளுங்கள்' என சில ரசிகர்கள் ஆலோசனை கூடக் கூறுகிறார்கள். அப்படிச் செய்ய இயலாது. ஏனெனில் அவளை 'மேக்கப்' இல்லாமல் பார்த்து பழக்கப்பட்டவன் நான்.

கதாநாயகி :

பீடி விளம்பரத்திலிருந்து பள்ளிக்கூடப் பையனின் நோட் புத்தகத்து அட்டை வரை என்னுடைய 'கவர்ச்சி போஸ்'கள் ரசிக மகா ஜனங்கள் கண்ணில் படுகின்றன. அழகுக்கு ஒரு இலக்கணமே நான் தான் எனப் பலர் எண்ணி வருகிறார்கள். எல்லாப் பெருமையும் மேக்கப் நிபுணர்களுக்குச் சேர வேண்டியதுதான்.

வசன கர்த்தா :

கதை எங்கே நான் எழுதுகிறேன்? பழைய புத்தகக் கடைக்காரன் உதவியால்தானே நான் பிழைத்து வருகிறேன்? காப்பி என்றாலே எனக்கு உயிர் சார்! கதை எழுதுவதற்கும், சாப்பிடுவதற்கும்!

பாடல் இயற்றியவர் :

எதுகை, மோனை என்றால் வீசை என்ன விலை என்று கேட்கக் கூடியவன் நான். வாயில் வருவதை எல்லாம் பாட்டாகப் போடுகிறேன். அது பின்னணி சங்கீதத்தின் பக்க பலத்தால் உயிர் பெற்று விடுகிறது; அவ்வளவுதான்!

சங்கீத டைரக்டர் :

ட்யூன் அமைப்பதற்கு எனக்கு சிரமமே ஏற்பட்டது கிடையாது. ஹிந்திப் பட சங்கீதம் உள்ளவரையில் எனக்கு என்ன கவலை? ஒவ்வொரு பாட்டிலிருந்தும் ஒரு அடி, அவ்வளவுதானே?

டைரக்டர் :

'கட்', 'ஸ்டார்ட்' சொல்லத் தெரிந்து கொண்டு விட்டேன். அது போதாதா இந்தப் பதவிக்கு? முதலாளி ரொம்பத் தங்கமானவர். நான் சொல்லுவதற் கெல்லாம் தலையாட்டுகிறார். அவ்வளவுதானே எனக்கு வேண்டியது?

படாதிபதி :

ஒழுங்கா செஞ்சுகிட்டு இருந்த வியாபாரம், பெண்டாட்டி, பிள்ளை எல்லாத்தையும் விட்டுட்டு, என்னமோ இந்தத் தொழில் ஏராளமாக லாபம் தரும்னு சொன்னாங்களேன்னு பணத்தை தண்ணி மாதிரி செலவளிச்சுகிட்டு டைரக்டர் பய மாதிரி வேதாளங்களைக் கட்டிகிட்டு அழுவரேன்! பொழுது என்னமோ நல்லாத்தான் போவுது; அதனால் செலவைப் பார்த்தால் முடியுமா?

சினிமா உலகில்



[நமது நிருபர் சரடு]

புது டில்லியில் சிறந்த சினிமாப் படங்களுக்குப் பரிசளிப்பு விழா என்று கேள்விப்பட்டவுடன் எனக்குத் தரையில் கால்கள் பாவவில்லை! தாவினேன் புது டில்லிக்கு.

ஒலிபரப்பு மந்திரி கேஸ்கர் கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு நெற்றி நரம்பு புடைக்க உலாவிக் கொண்டிருந்தார்.

''நமஸ்தே கேஸ்கர்ஜி! ஆழ்ந்த யோசனையில் இருக்கிறீர்கள்போல் இருக்கிறது. இந்தப் பரிசளிப்பு விழாவில் முதல் பரிசை ஒரு தமிழருக்கு வழங்கவேண்டியிருக்கிறதே என்று தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா? என்ன செய்வது? தமிழர்களுக்குக் கூடச் சிறந்த முறையில் ஹிந்திப் படங்கள் எடுக்கத்தெரிந்துவிட்டது''! என்றேன், முன்னால் தாவி அவர் முகத்தைப் பார்த்தபடி.

''அட போக்கிரி, என் உள்ளத்திலுள்ளதை நீ படம் பிடித்துவிட்டாயே? ம்... அதைப்பற்றி மட்டுமல்ல, திருவையாறு பிஸினஸையும் நினைத்துப் பார்த்தால் வருத்தமாக இருக்கிறது'' என்றார் கேஸ்கர்.

''ஓ, திருவையாறு உத்சவ அஞ்சல் விவகாரமா? அஞ்சேல் கேஸ்கர்ஜி. இப்போது கர்னாடிக் மியூசிக்கை எவருமே விரும்பிக் கேட்பது இல்லை. விட்டுத்தள்ளுங்கள்'' என்று அவருக்கு ஆறுதல் சொல்லிவிட்டு, ''அதிருக்கட்டும், இப்படித் திடீரென்று சினிமாவிஷயத்தில் விசேஷ அக்கறை கரை புரளுவானேன்? ஒரு பக்கம் சினிமா பிலிம் இறக்குமதியில் வெட்டு என்று கையில் கத்தரிக்கோலைத் தூக்கிக் கொள்கிறீர்கள்! இன்னொரு பக்கம் சினிமாப் படங்களுக்குப் பரிசு கொடுக்க அதே கைகள்...''

''நீயே சொல்லு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப்படி அன்னிய இறக்குமதிப் பொருள்களைக் கட்டுப்பாடு செய்ய வேண்டாமா? அதற்காகத்தான் கட்டுப்பாடு செய்ய முயன்றேன். அதற்குள் ஒரேயடியாக் கூச்சல்! 'ஸௌத்' என்றால் எதற்கும் கூச்சல்தான்! கடைசியாகப் புதுக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி விட்டேனே. இதையெல்லாம் எண்ணித்தான் உங்கள் 'ஸௌத்'திலே, உதகமண்டலத்திலே கச்சா பிலிம் தொழிற்சாலையைத் தொடங்க ஆதரவு அளித்திருக்கிறேன்.''

''அதெல்லாம் சரிதான். எங்கள் பகுதியிலே ஒரு பழமொழி உண்டு. 'பிள்ளையில்லாதவள் அரசமரத்'தைச் சுற்றிவிட்டு அடி வயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாளாம். அதுபோல் கச்சா பிலிம் தொழிற் சாலைக்குப் பிள்ளையார் சுழி போட்டவுடனேயே இப்படிக் கட்டுப்பாடு செய்யக் கிளம்பி விட்டீர்களே?'' என்று நான் சிரித்துக் கொண்டே அவரைக் கேட்டேன்.

கனம் கேஸ்கர் அதற்கு மறு மொழி ஒன்றும் சொல்லாமல் மணியைப் பார்த்து விட்டு விழாப் பந்தலுக்கு விரைந்தார் நானும் தொடர்ந்து சென்றேன்.

ஜனாதிபதி மாளிகையில் பல பிரபல சினிமா நடிக நடிகையர்களும் படவுலகப் பிரமுகர்களும் கூடியிருந்தார்கள். அவர்களுக்கு நடுவே ஜனாதிபதி ராஜன்பாபு அடிக்கடி இருமிக் கொண்டிருந்தார். சர்வதேச விவகாரங்களில் தன் சிந்தனையைச் சுற்றவிட்டபடி காணப்பட்டார் பண்டிதர் நேருஜி. ஆனால் டெயிஸி இரானி என்ற சினிமாப் படுசுட்டிச் சிறுமி டக்கென்று பண்டிதரின் கவனத்தை இங்கே திருப்பினாள். நின்ற இடத்திலிருந்தே சிறிது எழும்பி நேருஜியின் கோட்டில் செருகியிருந்த ஒற்றை ரோஜாவை அவள் உதடுகளினால் பற்றி இழுப்பதைக் கண்டதும் நேருஜி செல்லமாக அவளைத் தட்டினார்.

நேருஜிக்கு அருகே நின்ற ஏ. வி. எம், 'ஹம் பஞ்சி ஏக் டால்கே' என்ற ஹிந்திப் படத்தை இணையற்ற முறையில் உருவாக்கிய படாதிபதியை டெய்ஸி கவனித்து விட்டு அவரை நோக்கி ஒரு விரலைக் காட்டினாள்! நான் இரண்டு விரல்களைக் காட்டினேன்! சட்டென்று ஏ. வி. எம். என்னைக் கவனித்து விட்டு மெல்ல என் செவியில், "இதென்ன விரல் விரிக்கும் விஷயம்?" என்று கேட்டார்.

"ஹிந்தியில் மட்டும் குழந்தைகளுக் குரிய படத்தை ஏன் எடுத்தீர்கள்? அதனால் உங்களுக்கு ஒரு பரிசு தான்' என்ற கருத்தோடு டெய்ஸி ஒரு விரலை உங்களிடம் காட்டினாள் என்று எனக்குத் தோன்றியது. நான், 'தமிழ் நாட்டுக்கு பரிசு ஒன்று தான் என்றாலும் பாராட்டுதல்கள் இரண்டு' என்ற கருத்தோடு இரு விரல்களைக் காட்டினேன்! 'முதலாளி'க்காக எம். ஏ. வேணு வந்திருக்கிறாரே! அவரையும் சேர்த்து இரண்டாக இல்லையா?" என்றேன்.

ஏ. வி. எம். முகமலர்ச்சியோடு பெருமை ஒளி காட்டிச் சிரித்தார். தமிழர்களுக்குத்தான் மனம் விட்டு, வாய்விட்டு, வஞ்சனை இல்லாமல் ரஸித்துச் சிரிக்கத் தெரியும் என்பதை எடுத்துக் காட்டியது அவருடைய அந்தச் சிரிப்பு.

ஒவ்வொரு மொழிப் படத்தின் பெயராகச் சொல்லிப் பரிசு வழங்கத் தொடங்கியதும் முன் வரிசையில் உட்கார்ந்திருந்த வட நாட்டுக்காரர்கள் உற்சாகமாகக் கை தட்டினார்கள். ஆனால் தமிழர்கள் பரிசு வாங்கிய பொழுது கைதட்ட ஆட்களேஇல்லை. ஏனெனில் தமிழகத்திலிருந்து விழாவுக்கு வந்திருந்தவர்கள் வெகு சிலரே. அவர்கள் எல்லாரும் சேர்ந்து கை தட்டினாலும் ஓசை அவ்வளவாகக் கேட்காது. அத்துடன் தமிழர்கள் பரிசு வாங்கும் பொழுது கை தட்டக்கூடாது என்று கட்டுப்பாடாக வடநாட்டுக்காரர்கள் கைகளை வைத்துக்கொண்ட காட்சியையும் கண்டேன்!

அருகிலிருந்த ஏ. வி. எம்மிடம் காதோடு காதாகச் சொன்னேன்: "அடுத்த தடவை தமிழர்கள் பரிசு வாங்க வரும் பொழுது கை தட்டி ரிகார்டு செய்த டேப் ரிகார்டுஒன்றை இங்கே கையோடு கொண்டு வந்து விடவேண்டியதுதான். இல்லையென்றால் பெரிய குறையாகவே இருக்கும்!"

'முதலாளி'ப் படத்திற்குப் பாராட்டுப் பரிசு வாங்கிய எம். ஏ. வி,

அதிபர் வேணுவை ஊருக்குத் திரும்பும் பொழுது பார்த்தேன்.

''பம்பாயில் ஒரு விழாவில் பேசும் பொழுது கேஸ்கர் என்ன சொல்லியிருக்கிறார் கவனித்தீர்களா?'' என்றேன்.

"அவர் நேரில் பேசும் பொழுது சினிமாவைப் பற்றி அக்கறையோடு பேசுகிறார். அறிக்கை விடும்பொழுது அடியோடு மாறிவிடுகிறார்! இப்பொழுது என்ன பேசி யிருக்கிறார்'' என்று வேணு கேட்டார்.

''சினிமாப் படங்களின் நீளத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும்'' என்று பேசி யிருக்கிறார். நீங்கள் என்னவென்றால் சம்பூர்ண ராமாயணத்திற்குப் பிறகு ''சிவலீலா''வைப் படமாக்கலாமா, என்று தீவிரமாக எண்ணமிடுகிறீர்கள்!''

'' கேஸ்கருக்குத் தென்னாட்டுப் படம் பார்ப்பவர்களின் மனோபாவம் தெரியாது. தெற்கே கொடுத்த காசுக்குப் படம் 'சம்தி' யாக இல்லையென்றால் படம் ஓடாது, படம் பார்ப்பவர்களுக்கும் திருப்தியாக இராது. 'பிளாட்' இல்லாமல் சிறிய படங்களாக எடுத்தால் படமெடுப்பவர்கள் தான் படப் பெட்டியைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஓட வேண்டும்!'' என்று சொல்லிவிட்டு வேணு விமானம் ஏறினார்!

"தெற்கே ஒரு ஏ. வி. எம்மும் ஒரு எம். ஏ. வியும் இருக்கும் வரையில் படம் பார்ப்பவர்களுக்குக் கவலையே இல்லை. கேஸ்கர் போன்றவர்கள் என்ன சொன்னாலும் கவலை இல்லை'' என்று எண்ணிக்கொண்டே நானும் விமானத்தில் தொத்தினேன்.

மதுரையில் ஜவுளி மாளிகை

ஸ்ரீ ராதாகிருஷ்ணா ஸ்டோர்ஸ்

உயர்ந்த ரக வேலைப்பாடுகள் அமைந்த பட்டு சேலைகள், ஜார்ஜெட், கிரேப், பனாரஸ் பட்டுதினுசுகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் மற்றும் எல்லா விதமான மில் ஜவுளி தினுசுகளும் எம்மிடம் ஏராளமாய் எப்பொழுதும் கிடைக்கும்.

ஒரே விலை விற்பனை

காட்சி சாலை:

6/8, மேல கோபுர வீதி, மதுரை.



"போதி மரத்துப் புத்தனே, ஆண் பெண் தவிர சாதி வேறு இல்லை என மேதினிக்குச் சாற்றிய புத்துலக சித்தனே! எனக்கு உன் அன்பு வேண்டும், அறம் வேண்டும் என்னை ஏற்றுக்கொள்" என உள்ளம் உருகப் பேசும் குரல் கேட்டது. தவறிப்போய் எங்கேயாவது பௌத்த மடத்துக்குத்தான் வந்துவிட்டேனோ என்ற ஐயமே ஏற்பட்டது. திரும்பிப் பார்த்தபோதுதான் பாரகன் பிக்சர்ஸ் படஸ்தாபனம் சம்பந்தப் பட்டவர்கள் என் கண்களில் பட உண்மை விளங்கியது.

யுத்தம் - அதன் கொடுமைகளை உணர்ந்த சக்கரவர்த்தி அசோகன் போர்க்களத்திலிருந்து ஓடோடிவருகிறான். புத்தர்சிலை முன் மனமுருகக் கதறி கண்ணீர் வடிக்கிறான். இந்த கட்டத்தில் அசோகனை சிவாஜி கணேசன் நடித்துப் பேசியது அப்படியே உள்ளத்தை உருக்கி விட்டது. அன்னையின் ஆணையில் இடம்பெறப்போகும் "அசோகன்" குட்டி நாடகத்தில் ஒரு ரஸமான காட்சிதான் அன்று ஸி. எச். நாராயண ராவ் டைரெக்ஷனில் விஜயா ஸ்டுடியோவில் படமாகியது.

★ ★ ★

சாப்பாட்டுக்குப் பிறகு கணவன் கொட்டாவி விட்டபடி கட்டிலில் வந்து உட்காருகிறேன். கையில் படுக்கையுடன் வருகிறாள் அவர் மனைவி: வரும்போதே "அப்பப்பா ஏண்டி, தோண்டி ... கோண்டி ... கேட்டுக் கேட்டுப் புளிச்சுப்போச்சு" என்று அலுத்துக்கொண்டே வந்து படுக்கையைக் கட்டில் மீது விரிக்கிறாள்.

"அப்படின்னா உன்னை எப்படிக் கூப்பிடலாம்டி?" என்று கணவன்

கொஞ்சுதலாகக் கேட்கிறான்.

"அந்த டி யைத்தான் வெட்டி எறியச் சொல்றேன்." இது மனைவியின் கட்டளை.

இந்த ரஸமான கட்டம் ஜயந்தி புரொடக்ஷன்ஸின் பெயரிடப்படாத அவர்கள் முதல் தயாரிப்புக்கென விஜயாவில் படமாகியது. கணவராக கே. சாரங்கபாணியும் மனைவியாக டி. பி. முத்து லட்சுமியும் மேற்படி காட்சியில் நடித்தார்கள். இந்தக் காட்சியை டைரெக்டர் கே. வி. ரெட்டி பல முறை ஒத்திகைக்குப் பின் படமாக்கினர். படத் தயாரிப்பாளர் பி. எஸ். ரெட்டி கூட இருந்து படப்பிடிப்பை கவனித்து வருகிறார்.

★ ★ ★

எல்லோருமே சோகமே உருவாகக் காட்சி அளித்தார்கள். கோழிப்பண்ணை வைத்து நடத்தும் அந்த மனிதன் தன் பெண் சுமதியை உயிரோடு பறிகொடுத்துவிட்டுத் தவிக்கிறான். தங்கை மறைவால் முகம்வாடி நிற்கிறான் கதா நாயகன். சுமதியைத் தேடிப் போன கௌரியும் பலன் இல்லாது ஏமாற்றத்துடன் திரும்பி விட்டாள்.

தான் காதலிக்கும் சாரங்கதரனை எதிர்பார்த்து நிற்கும் சித்ராங்கி (பானுமதி) டைரெக்டர் ரேவதி ஸ்ரீனிவாசராகவன், வசனகர்த்த எஸ். டி. சுந்தரம் —" சாரங்கதரா " படப்பிடிப்பில்.

மனம் ஒடிந்துபோன நிலையில் கதா நாயகனின் நண்பன் ஒரு யோசனை கூறுகிறான். அந்த யோசனையை உடனடியாக நிறைவேற்றவும் அவனே கிளம்பிப் போகிறான்.

அன்று ஒரு தமாஷ் நடந்தது. பலமுறை இந்தக் காட்சியை சுட வேண்டியதாகி விட்டது. கடைசியில் டைரெக்டர் டி. ஆர். ரகுநாத் "நான் கிளாப் தட்டிப் பார்க்கிறேன், அப்போதாவது சரியாக முடிகிறதா பார்ப்போம்'' என்று முன் வந்தார். அவர் சொன்னபடி அவர் 'கிளாப்' தட்டிய பிறகுதான் அக்காட்சி அன்று திருப்திகரமாக படமாகியது.

அந்தக் காட்சியில் கதா நாயகனின் நண்பனாக வந்த புது நடிகர் பக்கிரி நாணிக் கோணி ஆடி நடந்ததைக் கண்டு தனக்கு வந்த சிரிப்பை ராகினி கஷ்டப்பட்டு அடக்கிக்கொள்ள வேண்டிய தாயிற்று. ஒளிப்பதிவாளர் சம்பத் அன்று நல்ல முறையில் அக் காட்சியைப் படமாக்கினர். கிருஷ்ணு பிக்சர்ஸின் மின்னல் வேகத் தயாரிப்பான மாங்கல்ய பாக்யத்தில் வரும் காட்சி இது.

★ ★ ★

அது ஒரு களத்துமேடு. விவசாயிகள் பாடுபட்டுப் பயிரிட்ட நெற்

"நாடோடி மன்னன்" படப்பிடிப்பின் இடையே...சென்னை வானொலி நிலையத்தைச் சேர்ந்த ஏ. எம். ரஷீத், எம். ஜி. ராமச்சந்திரன், சந்திரபாபு ஆகியோர்.

கதிர்களை அறுத்து சேகரித்துக் கொண்டிருந்தார்கள்! எமகிங்கரர்கள்போல் வந்து குதித்தார்கள் குட்டிவில்லனும், அவன் தோழனும் ஒரு டஜன் ஜமீன்தாரின் ஆட்களும்.

"டேய், போய் நீங்க எல்லாவற்றையும் கைப்பற்றுங்கடா" என்று சத்தம் போட்டான் குட்டி வில்லன்.

ஆயுதபாணிகளான அந்த குண்டர்களுக்கு முன்னால் பாவம், இந்த விவசாயிகள் என்ன செய்ய முடியும். பாய்ந்து வந்த வீரர்கள் முன் மண்டியிட்டுக் கெஞ்சிப் பார்த்தார்கள். கல் நெஞ்சனின் ஆட்களின் மனம் என்ன 'ஐஸ்' கட்டியா கரைவவற்கு? களத்து மேட்டிலிருந்த நெல் குவியல் மீது ஜமீன் ஆட்கள் கை வைத்ததுதான் தாமதம், விழுந்தது சுளீர் சுளீரென சவுக்கடி.

துடி துடித்துப்போன ஆட்கள் திரும்பிப் பார்த்தனர். முகமூடி வீரனைக் கண்டதும், எடுத்தார்கள் ஓட்டம். அவர்களுக்கு முன்பே அவர்களை ஏவிய குட்டி வில்லன் ஓடிவிட்டான். சமயத்தில் வந்து தங்களுக்கு உதவிய அந்த முகமூடியை விவசாயிகள் வாழ்த்திப் பணிந்தார்கள்.

முகமூடியாக வந்தது ஒரு பெண் என்பது அவர்கள் யாருக்குமே அப்போது தெரியாது. முகமூடியாக வந்த (ஜி. வரலக்ஷ்மி) வள் ஒரு ஏழை விவசாயியின் மகள் தான்.

உங்களுக்கு ஒரு
அரிய சந்தர்ப்பம்!

நீங்கள் சினிமாவில் நடிக்க விரும்புகிறீர்களா? நாடக நடிகராக விருப்பமா?

உங்களிடம் சினிமா, நாடகம் இவைகளுக்கு ஏற்ற கதைகள் இருக்கின்றனவா?

விபரங்களுக்கு 25 நயா பைசா ஸ்டாம்பு அனுப்பித் தெரிந்து கொள்ளவும்.

★

ஸினி இன்பர்மேஷன் ஸென்டர்.
14, நல்லதம்பி முதலி தெரு,
சென்னை - 5.

தன் தந்தைக்கு வில்லன் இழைத்த கொடுமைக்குப் பதிலாக அவனைப் பழிவாங்கவேண்டியே 'முகமூடி' யாகத் திரிந்தாள். இந்தக் காட்சி பிலிம் சென்டரில் பி. என். ஆர். டைரெக்ஷனில் ஒரு வயல் வெளியில் படமாக்கப்பட்டது. குட்டி வில்லனாக டி. கே. ராமச்சந்திரனும், தோழனாக காகா ராதாகிருஷ்ணனும் நடித்தார்கள்.

★ ★ ★

முற்றிலும் ஆங்கிலப் பாணியில் இருந்தது அந்த ஹோட்டல். ஒரு பக்கத்தில் 'யுனிபாரம்' அணிந்த பாண்டு கோஷ்டியினர் வாத்தியம் முழங்கிக் கொண்டிருந்தனர். பல தரப்பட்ட மக்கள் சந்தோஷமாகப் பேசியபடி ஹோட்டலில் தயாரான பதார்த்தங்களைக் காலி பண்ணிக் கொண்டிருந்தனர். நடன மாது ஒருத்தி மக்களிடையே புகுந்து புகுந்து விசாலமான அந்த ஹாலில் பம்பரம் போல் சுழன்று சுழன்று ஆடிக்கொண்டிருந்தாள்.

"இல்லறமே நல்லறம்" படப்பிடிப்பு முடிந்து வந்த ஜெமினி கணேசனிடம் "மாங்கல்ய பாக்கியம்" படப்பிடிப்புக்கு வந்த பாலாஜி 'ஹலோ டார்லிங்' எனக் கொஞ்சுகிறார்.

"திருடர்கள் ஜாக்கிரதை"யில் குட்டி வில்லன் டி. கே. ராமச்சந்திரன் காகா ராதாகிருஷ்ணன் மற்றும் படம் சம்மந்தப்பட்டவர்கள்.





டைரெக்டர் கே. வி. ரெட்டி, முத்துலட்சுமி, தயாரிப்பாளர் பி. எஸ். ரெட்டி, கே. சாரங்கபாணி ஒளிப்பதிவாளர் கே. எஸ். பிரஸாத் —ஜெயந்திபிலிம்ஸின் முதல் தயாரிப்பின் படப்பிடிப்பு சமயம் காமிராவில் சிக்கினர்.

"என்ன மேன் முழுச்சப் பாக்றே ?" — பிரபு பிலிம்ஸ் "உலகம் சிரிக்கிற" தில் எம். ஆர். ராதா.

அந்தஹோட்டலில் கதாநாயகன் அப்போது இருந்ததை அறிந்த வில்லனும்—அவனது கோஷ்டியினரும் ஹோட்டலுக்குள் புகுந்து விட்டார்கள். பிறகு கேட்பானேன், ஒரே ரகளைதான், குழப்பம்தான்!

சதர்ன் மூவீஸ் தயாரித்து வரும் **மாய மனிதன்** படத்தில் வரும் இந்தக் காட்சியில் நடன மாதாக வந்து ஹெலன் மிகவும் கவர்ச்சிகரமான நடனம் ஒன்றை அன்று ஆடினர்.

பல கோணங்களிலிருந்தும் இந்த நடனக் காட்சியை, பட்டுவின் உதவியுடன் டைரெக்டர் டி. பி. சுந்தரம் மிகச் சிறப்பாகப் படமாக்கினர்.

படத்திற்கென ஸெட் போடப்பட்டது போல் இல்லாமல் உண்மையான ஒரு ஹோட்டலே இங்கு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

* * *

விஜயா ஸ்டுடியோவில் தகிக்கும் வெய்யலில் ஒரு ஸெட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன். "ஒங்குக" "ஒழிக" என்ற கோஷங்கள் வந்து காதைத் துளைத்தன.

'நாகிரெட்டியின் ஸ்டுடியோவிலா இந்த அவலக் குரல்?' என்று திகைத்து கோஷம் வந்த திசையில் திரும்பினேன்.

இரண்டு கைகளையும் சங்கிலியால் பிணைத்து ஒரு வீரனையும் அவனுடைய நண்பனையும் இழுத்துக் கொண்டு போனார்கள் சில சிப்பாய்கள் அவர்களுக்குக் காவலாக சில குதிரை வீரர்கள் முன்னே சென்றனர்.

இழுத்துச் செல்லப்பட்ட வீரனுக்குப் பின்னால் ஆணும் பெண்ணுமாகப் பலர் அக்கிரம ஆட்சி ஒழிய வேண்டுமென கோஷங்கள் தீட்டிய அட்டைகளைச் சுமந்து, கோஷங்கள் போட்டபடி கூட்டமாக வந்தனர்.

முன்னே சென்ற வீரன் திரும்பி அமைதியாகத் திரும்பிப் போகும்படி கையை அமர்த்திக் காட்டியதும், மந்தி சக்திக்குக் கட்டுப்பட்ட நாகம் போல் கூட்டத்தினர் அமைதியாகத் திரும்பி நடந்துபோனார்கள். வீரன் விலங்குடன் சிப்பாய்களைத் தொடர்ந்து போனான். நாடோடி வீரனை நண்பன் கோமாளித்தனம் செய்தபடி பின்னே சென்றான்.

"**நாடோடி மன்னனி**"ல் வரும் இந்தக் காட்சியில் கைதான வீரனாக எம். ஜி. ராமச்சந்திரனும், அவனுடைய நண்பனாக சந்திரபாபுவும் நடித்தார்கள். கொளுத்தும் வெய்யிலையும் லட்சியம் செய்யாது, அக்காட்சியை டைரெக்ட்டும் செய்து பல ஒத்திகைகளுக்குப் பின் படமாக்கினார் எம். ஜி. ராமச்சந்திரன்.

எனக்குப் பிடித்த வேஷங்கள்

சௌகார் ஜானகி

விதம் விதமாக வண்ண உடைகள் தரித்து வேஷம் போட்டுக் கொள்ளும்போது அவைகளுக்கு ஈடு கொடுப்பது நாம்தானா என்ற வியப்பு எப்போதுமே எனக்கு வந்துவிடுகிறது!

அந்த வேஷங்கள் எப்பொழுதாவது எனக்குப் பொருத்தமாக அமைந்து விடுமானால் அதைவிட மகிழ்ச்சி அளிப்பது என்ன இருக்கிறது. ஆனந்தமே ஆனந்தம்தான்!

இதோ லம்பாடி உடைகளுடன் ஒரு வேஷம் போட்டுக்கொண்டிருக்கிறேன். கட்டையான கங்கணங்கள் பலவற்றை மாட்டிக் கொண்டு தலை அலங்காரம் செய்துகொள்வதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. ஆனால் சிரமப் பட்டதற்குப் பலன் இல்லாது போகவில்லை. வேஷம் வெகு கச்சிதமாகப் பொருந்தி விட்டது. ஒரே ஒரு குறை, லம்பாடி 'அயிலியோ பக்கிரியாமா' போன்ற பாஷை மட்டும் எனக்குத் தெரியாது!

ஏகாந்தமான இடத்தில் எந்தக் கவலையுமின்றிக் காற்று வாங்கிக் கொண்டிருக்கிற தனிமை என்னைப் போன்றவர்களுக்கு எப்பவாவதுதான் கிடைக்கும். பார்ஸி உடையிலே நான் இதோ அந்த இன்பத்தை அனுபவிக்கிறேன்! இந்தத் தோற்றத்தை 'வேஷம்' என்று மட்டும் ஒத்துக் கொள்ள மாட்டேன்! என் தனிமைக்கு உதவும் உடைகள் என்றே கூறலாம்.

குறத்தி வேஷத்துக்கும் சினிமா நடிகைகளுக்கும் எப்பொழுதும் நெருங்கிய உறவு உண்டு. நான்—இந்தக் குறத்தி சாமான்யப் பட்டவளல்ல. ராஜாங்கக் குறத்தியாக்கும் ஆடை, ஆபரணங்களைப் பாருங்களேன்!

சீனக்காரியைப் போல வேஷம் போட்டுக் கொள்ளவேண்டும் என்ற ஆசை நீண்ட நாட்களாக எனக்கு உண்டு. அதற்கு என்று பொருத்தமாக நானே சொந்தத்தில் உடைகள் கூடத் தைத்து வைத்திருக்கிறேன். அவைகளைப் பக்குவமாக மாட்டிக் கொண்டது மட்டுமல்ல, கண்களைக்கூடச் சுருக்கி அசல் சீனப் பெண்ணைப் போல மாற எப்படி எல்லாம் பாடுபட்டேன் தெரியுமா?

என் ஆர்வத்துக்கு வெற்றிதானா என்று என்னுடைய வேஷங்களைக் கண்டுவிட்டுத் தீர்மானிப்பது, உங்களிடமே இருக்கிறது.

சௌக்கார் ஜானகிக்கு தனகோடி மேக்கப் செய்கிறார்.

என்னுடைய வேஷங்கள் அனைத்தும் பொருத்தம் என்று பாராட்டுகிறீர்களே, அந்தப் பெருமையின் பெரும் பங்கு மேக்கப் தனகோடிக்கு உரியது.

வர்ணப் போட்டோக்கள் :
வி. கோபாலகிருஷ்ணன்.

பிளாக்குகள் :
கிளான் அண்டு பெர்ல், சென்னை.

வட நாட்டில்

குரங்கோடு போராட்டம்

ஸிப்பி பில்ம்ஸார், ஆஷா ஸ்டுடியோவில் பிளாக் கேட் (கறுப்புப் பூனை) என்ற படத்தைத் தயாரித்து வருகின்றனர். இந்தப் படத்தில் துப்பறிவாளராக நடிக்கும் பால் ராஜ் சஹானி ஒரு மனிதக் குரங்குடன் சண்டை போடும் காட்சி சென்ற மாதம் படமாக்கப்பட்டது. வில்லனின் கையில் சிக்கிய தன் சகோதரியை (ஷீலா காஷ்மீரி) மீட்டுவரத் துப்பறிவாளர் போகிறார். அங்கு மாட்டிக்கொண்ட, தப்பி வெளியேற வில்லனால் காவலுக்கு வைக்கப்பட்ட மனிதக் குரங்குடன் போராடி வெற்றி காண்கிறார்.

கலைஞரின் அஞ்சலி

சங்கீத நாடக அகாடமியின் பரிசைப் பெற தில்லிக்குச் சென்ற சங்கீத டைரக்டர் எஸ். டி பர்மன், தம் குடும்பத்தாருடன் ராஜ்காட்டிற்குச் சென்று, தேச பிதா காந்திஜியின் சமாதிக்கு மலர் மாலை சூட்டி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டார்.

நீச்சல் காட்சிகள்

ஸைகால் பிரதர்ஸின் தயாரிப்பான க்கோர்பதி (கோடீஸ்வரன்) க்காக நீச்சல் வேடிக்கைக் காட்சிகள் சிலவற்றை மூன்று நாட்கள் படமாக்கினார்கள். பம்பாயிலுள்ள மகாத்மா காந்தி நீச்சல் குளத்தில் நடைபெற்ற இந்தப் படப் பிடிப்பில், பம்பாயிலுள்ள அமெரிக்கப் பெண்கள் கலந்து கொண்டு நீச்சல் விளையாட்டில் பலவித பிரமிக்கத்தக்க சாதனைகளைச் செய்து காட்டினர்.

யானைக்கு வைத்தியம்

ராஜ் கமால் கலா மந்தரின் அடுத்த கலர்ப் படத்தில் நடிக்கவென ராமச்சந்திரா என்ற ஒரு யானைக் குட்டியை டைரக்டர்—படாதிபதி சாந்தாராம் வாங்கிப் பழக்கி வருகிறார். குளுமையான கேரளாவிலிருந்து வெய்யில் தகிக்கும் பம்பாய்க்குக் கொண்டுவரப்பட்ட காரணத்தினால் அதற்கு வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டு விட்டது. சிறந்த கால்நடை வைத்தியர் ஒருவர் தருவிக்கப்பட்டு அதற்கு வைத்தியம் செய்யப்பட்டது.

நேருவைச் சூழ்ந்தனர்

தில்லியில் நடைபெற்ற படப் பரிசளிப்பு விழாவின் போது இந்தியப் பிரதமர் நேருஜியை விழாவுக்கு வந்திருந்த பட உலகப் பிரமுகர்கள் பலரும் சூழ்ந்து கொண்டார்கள். நேருஜி அனைவரிடமும் அன்பாகப் பேசிப் பலருக்குத் தம் கையெழுத்தைப் போட்டுக் கொடுத்தார். படாதிபதி ஏவி. எம். தாம் பெற்ற நேருஜியின் கையெழுத்தைப் பலரிடமும் பெருமையாகக் காட்டி மகிழ்ந்தார்.

தேவிகா—சந்தியா சந்திப்பு

தில்லி நகரில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த நட்சத்திரங்களில் ஒருவர் சந்தியா. அது சமயம் சந்தியாவும் தேவிகா ராணியும் சந்தித்துப் பேசினார்கள். தேவிகா ராணியின் மேற்பார்வையில் பம்பாய் டாக்கீஸ் அதன் உச்ச நிலையில் இருந்த சமயம், சிறுமியாக இருந்த சந்தியா, தேவிகா ராணியிடம் போய்த் தனக்கு நடிக்கச் சந்தர்ப்பம் அளிக்கும்படி கேட்டாராம். அப்போது தேவிகா ராணி, “நீ ரொம்பச் சின்னவள். நடனமும் இந்தியும் கற்றுக் கொள். நீ சிறந்த நடிகையாக அவை

குழந்தைப்பட பரிசளிப்பு விழா





ஹம் பஞ்சி ஏக் டால்கேயை எடுத்த ஏவி. மெய்யப்பன் ஜனதிபதியிடம் பரிசைப் பெறுகிறார்.

உதவும்" என்று புத்திமதி கூறி அனுப்பினராம். அந்தச் சம்பவத்தை தேவிகாவுக்கு ஞாபகமூட்டி ராணிக்கு "உங்கள் புத்திமதிதான் எனக்கு ஊக்கமளித்து உற்சாக மூட்டியது" என்று தெரிவித்தார் சந்தியா.

டாக்டர் சைத்தான்

ராம்குமார் தயாரிக்கும் டாக்டர் சைத்தானின் முதல் படப் பிடிப்பு சென்ற 18ந் தேதி செட்ரல் ஸ்டுடியோவில் ஆரம்பமாயிற்று. படத்தில் பிரதம பாகங்களில் நடிக்கும் பிரேம் நாத், ஷகிலா, திவாரி, ஹெலன், நஸ்ரீன் ஆகியோர் சம்பந்தப்பட்ட காட்சிகள் அன்று படமாயின. திரைக் கதையை எழுதியுள்ள ஸ்ரீராம் போஹ்ராவே இந்தப் படத்தை டைரக்ட் செய்தும் வருகிறார். போஹ்ரா பிரதர்ஸின் தயாரிப்பாகும் இது.

நான்காவது வெற்றி

பிரதி ஆண்டும் படத் தேர்தல் ஒன்றை "பிலிம் பேர்" பத்திரிகை நடத்துவது வாசகர்கள் அறிந்ததே. இந்த வருடம் அது நடத்திய போட்டியில் சிறந்த நடிகைக்கான பரிசை நர்கீஸும் சிறந்த நடிகருக்கான பரிசை திலீப் குமாரும் பெற்றனர். இப்பத்திரிகை ஐந்து வருஷங்களாகப் போட்டி நடத்தி வருகிறது. திலீப் குமார் பரிசு பெறுவது நான்காவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

பம்பாயில் சாவித்திரி கணேசன்

எம். வி. ராமன் கேவாக் கலரில் எடுத்து வரும் கொஞ்சும் சலங்கை' யில் நடிப்பதற்காக பம்பாய் ராமன் ஸ்டூடியோவுக்குச் சென்றிருந்த சாவித்திரி கணேசன் ஜோடிக்கு எம். வி. ராமன் விருந்து வைத்தார்.

ஸ்தாபிதம் 1920

உலகமெங்கும் புகழ் பெற்றது. பல எக்ஸிபிஷன்களில் மெடல்கள் பரிசு பெற்றது.

P.V. RAJAN'S SUPERIOR MADRAS SNUFF

தந்தி: நஸ்யம் மதருஸ்

நெ. 1 எக்ஸ்ட்ரு ஸ்பெஷல் பட்டணம் பொடி ஒரு தோலா டின்களிலும் கிடைக்கும்.

பி. வி. ராஜன் & கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி

& R. S. சுகந்த மூக்குத்தூள் பாக்டரி

அரக்கோணம் & மதருஸ்

(மற்ற பொடி தினுசுகளுக்கும், விவரங்களுக்கும் எழுதவும்.)

அபவாதம்

ஏ. எஸ். ராகவன்

ஆவலும் துடிப்பும் அவிந்து விட்டன. பானுவுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. மேஜை மீது கிடந்த பேனவை ஜன்னலை நோக்கி எறிந்தாள். ஜன்னலில் கிடந்த புத்தகத்தைக் கூடத்திற்கு வீசினுள். தலையைக் கலைத்துக் கொண்டு, படுக்கையில் விழுந்து, ஒரு குரல் அழவேண்டும் போலிருந்தது. ஆனல் அப்படி அழுவதால் மட்டும் என்ன லாபம்? மாடியிலிருக்கிற முனிபுங்கவரின் மனம் மாறியாவிடப் போகிறது?

எத்தனை திட்டங்கள்! அவற்றை எவ்வளவு ஆசையோடு நிர்மாணித்தாள்! வாரத்தில் எல்லா நாட்களுமா ஞாயிற்றுக்கிழமை? இருந்திருந்து ஒரு நாள்; அந்த நாளில் விச்ராந்தியாக ஒரு பீச்சு, சினிமா, கச்சேரி என்று கிளாம்பாவிட்டால் என்ன ஜன்மம்?

கிளம்பாவிட்டாலும் போகிறது. 'ஏதடா, ஒருத்தி ஆசையோடு எதிரில் வந்து நிற்கிருளே, அவளை ஏறெடுத்துப் பார்த்து நாலு வார்த்தை பேசுவோம்' என்கிற விதரணை வேண்டாமோ!

இந்தச் சமயம் பார்த்து அம்மா அறை வாயிலில் வந்து நின்ருள். பெண்ணின் அழகை இப்போது தான் புதிதாகப் பார்க்கிறவள் மாதிரி, "இந்த ரோஸ் கலர் எடுப்பா இருக்குடி பானு...அகலக் கரை அப்படி ஒன்றும் குறையாக இல்லை. பிரமாதமாத்தான் இருக்கு," என்ருள்.

"போறுமே" என்ருள் பானு. ரசிக்க வேண்டியவன் அல்லவா இதைச் சொல்ல வேண்டும்?

"நீல ஸாட்டின் ஜாக்கட்டைப் போட்டுக் கொள்வதுதானே?"

"அது இல்லாமல் தான் எனக்குக் குறையா இருக்கு!"

"நல்ல பொண்ணுடி நீ..."

அம்மா போய்விட்டாள்.

மாடி அறையிலிருந்து முண முணுப்பது போல் அவன் குரல் கேட்டது. என்ன ஆனாலும் சரி, இரண்டிலொன்று தெரிய வேண் டும். பானு வேகமாக மாடிக்குப் போனாள். அவள் வந்ததை அவன் கவனிக்கவில்லை.

மெல்லக் கனைத்தாள் அவள்.

ஊஹூம், தலை ஏன் நிமிர்கிறது? புத்தகத்திற்கும் கண்ணுக்கும் முடிச் சல்லவா போட்டிருக்கிறது!

''உங்களைத்தான்...''

"உம்..."

''இப்போது கிளம்பப் போகிறீர் களா இல்லையா?''

தலையை நிமிர்த்தினான் அவன். ஒரு புன்னகை இழையோடியது உதட்டில். பொல்லாத புன்னகை! அதன் சுழற்சி ஒரு கணம் அவளை மயக்கியது.

'வருவதாக இருந்தால் வாருங் கள். இல்லாவிட்டால் நானே புறப் படுகிறேன்.''

''உம்...உம்...''

"வாயைத் திறந்துதான் பேசுங் களேன், முத்து உதிர்ந்து விடுமோ?''

''என்ன செய்யச் சொல்றே பானு?'' என்று கேட்டு விட்டுச் சிரித்தான் அவன்.

''உங்கள் சிரிப்பும் நீங்களும்!... ஒரேடியாக ஜம்பம் செய்தால் எனக் கென்ன?''

"இதோ பார்...என்னால் எங்கே யும் வரமுடியாது...படிப்பு தலைக்கு மேல் கிடக்கிறது."

முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்து அழகு காண்பித்து விட்டு விர்ரென்று கீழே வந்தாள் பானு. மனது பொருமியது. என்ன அலட் சியம்! என்ன அலட்சியம்!

யோசித்துக் கொண்டு உட் கார்ந்திருக்க நேரமில்லை. போட்ட திட்டத்தை நிறைவேற்றாமல் விடுவ

எப்பொழுதும்
இந்த லேபிலை
கவனித்து
வாங்குங்கள்

flamS
AERATED WATERS

ஆம்!

ஆம்ஸ்

சோடா, கலர்
பானங்கள்
சோர்வை நீக்கி
உற்சாகம் தருகின்றன

சினிமா
ஸ்டூடியோக்களிலும்
திருமண
விழாக்களிலும்
பிக்னிக்,
டீ பார்ட்டிகளிலும்
ஆம்ஸ் பானங்கள்
முதல் இடம்
பெறுகின்றன

ஆம்ஸ் ஹவுஸ்
34, பாண்டி பஜார்
தி.நகர், சென்னை-17

தை பிறந்ததும் எனக்கும் வழி பிறந்தது! இனி 'பெரிய கோயி' லும் பாக்கிறேன் ஒரு கை என்று பிரேம் நஸீர், எம். என். ராஜத்தி னிடம் சொல்கிருரா?

தில்லை. இப்போது பணிந்து போனல் அந்தச் சிரிப்புக்கும் அமுத் தலுக்கும் ஓய்வே இராது. அவளைப் பற்றி என்ன தான் எண்ணிக் கொண்டிருக்கிருன் அவன்! பூனை கண் மூடினல் உலகமே அஸ்தமித்து விடுமோ! அதைத்தான் இனிமேல் பார்த்து விடுவோமே?

சொல்லி வைத்தாற் போல் நாணு வந்து சேர்ந்தான். சாதாரண சமயமாக இருந் தால் அவன் தலையைக் கண் டதுமே பானுவின் முகம் சுண் டிவிடும். இப்போதோ சமய சஞ்சீவிபோலத் தோற்றமளித் தான் அவன்.

''என்ன டிரஸ் பலமாக இருக்கு? வெளியே பயணமா?.. தியேட்டருக்கா? எந்தப் படம்?'' என்றுன் அவன்.

''நாணு, உனக்கு இப்போது வேற அவசர ஜோலி இருக்கா?'' என்று கேட்டாள் அவள்.

''அவசர ஜோலியா? எப் போதுமே கிடையாதே!''

''கிளம்பு...''

''எங்கே?''

''அதை எல்லாம் கேட்காதே... கிளம்பு என்ருல் கிளப் பணும்.''

நாணுவுக்கு உற்சாகம் பிடிபட வில்லை. பானுவே அவன் மீது கருணைகாட்டுகிருள் என்பதுஅதிசய

உங்கள் அதிருஷ்டம் 1958 க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது

ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப் புங்கள். ரூ. 1.25-க்கு (தபால் செலவு தனி) வரப் போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிருேம். வியாபாரத் தில், லாப நஷ்டம், உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிருேம்.

Shree Swami **SATNARAIN JYOTISH ASHRAM**
(A-1) JULLUNDUR CITY (Pb.)

மில்லையா? வழி நெடுக ஏதேதோ பேசியபடி வந்தான். நாணாவின் குணம் அது. அவனுக்கு வாயை மூடத் தெரியாது. ஆனாவில் ஆரம்பித்து அக்கன்னாவரை ஒரு சுற்றுச் சுற்றி வருவான்.

"உன்னை ஒன்று கேட்கணுமே, பானு...அந்தச் சுந்தரம் பயலுக்கு இதுதான் கடைசி வருஷமோ?"

"ஆமாம்."

"வீட்டில் ஆளைக் காணோமே!"

"இல்லாமலென்ன? சதா படிப்பு. மாடியைவிட்டு இறங்குவதில்லை."

"அதானே கேட்டேன். புத்தகப் புழுவாச்சே அவன்!... உன் போக்குக்கும் அவன் போக்குக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது."

"தெரிந்த விஷயம்தானே இது!"

"படிப்பு வேண்டியது தான்... ஆனாலும் இந்தமாதிரியா?"

"அதை ஏன் கேட்கிறே? ஆயிரம் தடவை சொல்லியாச்சு."

"இன்னும் பத்தாயிரம் தடவை சொல்லு, அவன் மாறமாட்டான்."

நாணா சூட்சுமத்தைப் புரிந்து கொண்டு விட்டான். பானுவுக்கும் அவன் பேச்சு இதமாக இருந்தது. இது தான் சமயமென்று சுந்தரத்தின் மீது தன் வஞ்சத்தை மனமாரத் தீர்த்துக் கொண்டான் நாணா. இப்படி அக்கறையாக ஒருவன் நடந்து கொள்வதை அங்கீகரிக்காமல் இருக்க முடியவில்லை பானுவால்.

"மாடிக்குப்போய் அந்த மகரிஷியைத் தரிசித்து விட்டுப் போகிறேன்" என்று சிரித்தான் நாணா.

"சுடச் சுட நாலு வார்த்தை சொல்லி விட்டு வா" என்றாள் அவள் ஆத்திரமாக.

அவன் மாடிக்குப் போனான். உள்ளூறச் சந்தோஷம் பானுவுக்கு. தன் திட்டங்கள் வீணாகவில்லை என்பதிலும், பெண்மையின் வெற்றியை

நவீன ரக

பட்டாடைகள்

உயர்ந்த வேலைப்பாடுகள் அமைந்த பட்டுச் சேலைகள், ஜார்ஜெட், கிரேப் சேலைகள், சோளி பீஸ்கள், சேலை அகலமுள்ள பாவாடைகள், வேஷ்டிகள் முதலிய பட்டு & நூல் ஜவுளிகளுக்கு கீர்த்தி பெற்ற நாணயமான இடம்.

ராதா ஸில்க் எம்போரியம்

பெரிய தெரு, கும்பகோணம்

ஆர்யமாலாவின் கதைதான் காத்தவராயன் கதை. ஆனால் சிவாஜி கணேசன் காத்தவராயனாக நடிப்பதால் பல சிறப்பான அம்சங்களை நிச்சயமாக எதிர்பார்க்க முடியுமே? இது ஓர் ஆர். ஆர். பிக்சர்ஸ் எடுத்து வரும் அரிய தயாரிப்பு.

ஸ்தாபித்ததிலும் பெருமை. நாணா பெரிய வாயாடி. சும்மா விட மாட்டான். சுந்தரத்துக்குப் புத்தி கற்பித்து விட்டுத் தான் வருவான். அந்தக் காட்சியைக் காண வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

''என்னப்பா சுந்தரம்?...படிப்பு மும்முரம் போலிருக்கு?''

''உம்.''

''நல்ல ஆளப்பா நீ. இப்படியே தலையைக் கவிழ்த்துக் கொண்டிருந்தால், முக்கியமான விஷயத்தில் கோட்டை விட்டுவிடுவாய்.''

''உம்.''

''நானும் பானுவும் சினிமாவுக்குப் போயிருந்தோம், படம் தமாஷாக இருந்தது. பானு படத்தை ரொம்ப ரசித்தாள்.''

''நல்லது, வேறு ஏதாவது உண்டா?''

''இல்லாமல் வருவேனா?... உனக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்.'' நாணா சிரித்தான்.

''எதற்காக?''

''இந்தப் பானு இருக்கிறாளே, அவளுடைய குணம் உனக்குத் தெரியாது. படபடப்பும் துடிப்புமாய்ச் சதா ஆயிரம் கனவுகள் காண்பவள். உன்னைப் பற்றி அவள் என்னென்ன சொன்னாள் தெரியுமா?''

சுந்தரம் அவனை அலட்சியமாகப் பார்த்தான். ''நாணா, அநாவசியமாய்ப் பிறர் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்கிற ஞானம் இன்னமும் உனக்கு வரவில்லையே.! சரி...சரி போய் வா. எனக்குப் படிப்பு நிறைய இருக்கிறது.''

நாணா அட்டகாசமாகச் சிரித்தான். "பிறர் விவகாரம் அல்ல, இது! என் சொந்த விவகாரம்.

பானு என்னிடம் எத்தனை பிரியமாக இருந்தாள் தெரியுமா!''

எத்தகைய அபவாதம்!

சுந்தரம் துள்ளி எழுந்து நாணு வின் சட்டையைப் பற்றிக் கொண்டான். "அவளைப் பற்றிப் பேச உனக்கு யோக்கியதை இல்லை... இங்கிருந்து மரியாதையாகப் போய் விடு'' என்ருன்.

"அட சட்டையை விடப்பா... உம்மணு மூஞ்சிக்கு இத்தனை ரோஷமா!''

"நான் உம்மணு மூஞ்சிதான். பேச மாட்டேன். தெரிந்ததா?... ஏதோ ஒரு துணை இருக்கட்டு மென்று, கள்ளம் இல்லாமல் உன்னிடம் பானு புறப்பட்டதை, இப்படி விகல்பமாகப் பேசுகிருயே! அவள் மீது அபவாதம் கூறுகிருயே? நல்ல வேளை, இது அவள் காதில் விழ வில்லை... ஓடு இங்கிருந்து..."

நாணு அறைக்கு வெளியே வந்து விழுந்தான். எழுந்து வேகமாக இறங்கினன்,

அறை வாயிலில் மறைவாக நின்று இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த பானுவின் கண்களில் பிரவாகமாகக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. சுந்தரத்தின் பேசாத பேச்சிலும் பார்வையிலும் எத்தனை அன்பும் கௌரவமும் பொதிந்திருந்தன என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

''அத்தான்!" அவன் முன் நின்று விம்மினுள் அவள்.

"என்ன, பானு?... அடடே, ஏன் அழறே?... படிக்கவேண்டியது நிறைய இருக்கு. இல்லாவிட்டால் வராமல் இருப்பேனு?... நாணு வந்து சொன்னன்... சினிமாவை நீ ரொம்ப ரசித்தாயாம்... அது வரையில் எனக்குத் திருப்தி...''

"அத்தான்!..."

"அழாதே அசடு!'' ஆதூரமாக நெளிந்த அவனது கரம் நெஞ்சைத் தொட்டது. கருத்தைத் தொட்டது. அவள் தலை நிமிர்ந்து சிரித்தாள். ''படிக்கும் போது இடைஞ்சல் பண்பக்கூடாது. இல்லையா, அத்தான்?." இருங்கள். காப்பி போட்டுக் கொண்டு வரேன்'' என்று துள்ளிக் கொண்டு ஓடினுள் பானு.

இங்கே 'ஓடிவிளையாட பாப்பா' இல்லை! ஜெகத்ஜோதி பில்ம்ஸ் தேடிப்பிடித்த ராஜேந்திரன், ராகவன், சரோஜாதேவி போன்ற நடிகமணிகளெல்லாம் இருக்கிருர்கள்.



இப்படிப் பேசுவார்களா?

[நகைச்சுவையோடு இரண்டு உள்ளங்கள் உறவாடுவதை எடுத்துக் காட்டுவது தான் இப்பகுதியின் நோக்கம். எவர் மனமும் புண்படுவதற்காக எழுதப்பட்டது அல்ல என்பதே உண்மை.]

[விசால வாஹினி ஸ்டுடியோவுக்குள் எம். ஜி. ராமச்சந்திரனும் எம். ஆர். ராதாவும் சந்தித்துக் கொள்கிறார்கள். 'நாடோடி மன்னன்' மேக்-அப்பைக் கலைத்துவிட்டு வெளியே வந்த எம். ஜி. ஆர், எம். ஆர். ஆரை நேருக்கு நேராகக் கண்டுவிடுகிறார்.]

எம். ஜி. ஆர்: (முழுக்கைச் சட்டையை முழங்கை வரையில் ஏற்றி விட்டுக் கொண்டு) வணக்கம் அண்ணே!

எம். ஆர். ஆர்: (நீல வண்ண மேல் துண்டை அலட்சியமாக இழுத்துப் போர்த்துக் கொண்டு) தம்பி ராமச்சந்திரனு? வ...ண...க்...க...

ராம: தம்பியான்னு கேட்கிறீங்களே, என்னை அடையாளந்தெரியல்லியா? அப்படியேதான் இருக்கேன் ராதா அண்ணே! ஆனல் என் இலட்சியம் வளந்திருக்கு, கொள்கை கோபுரம்போல வளர்ந்திருக்கு...

ராதா: உன் கிருப்புக் கூடத்தான் வளர்ந்திருக்கு! அதெல்லாம் இருக்கட்டும் தம்பி 'ரியல் ஆர்ட்டு'க்காக என்ன மேன்', செஞ்சு இருக்கே?

ராம: அண்ணே, இப்படி எல்லாம் ஆங்கிலச்சொற்களைத் தமிழுக்கு நடுவே கலந்து நான் கொலை செய்யறது இல்லே! இப்ப என் பேச்சும் செயலும் ஒரே அடிப்படையிலே, எந்த ஓர் இலட்சியத்துக்காகக் கலை வளர்ந்து வளம் பெறுமோ அந்த அடிப்படையிலே...

... அண்ணே! ...

ராதா: தம்பி ஸ்டாடப்! புல்ஸ்டாப்! எனக்கு அடிப்படைங்கிற 'வேர்ட்' புளிச்சுப் போச்சு! யாராவது 'அடிப்படை' அப்படீன்னு சொன்ன நான் எழுந்து போயிடுறது வழக்கம். ஏன் தம்பி, ஆர்ட், தி சினிமா ஆர்டுக்கு நீ என்ன செஞ்சிருக்கேன்னு கேட்டா, க்ரெக்டா பதில் சொல்றதை விட்டுட்டு, அடிப்படைக்குப் போயிட்டியே?

ராம: நீங்க எப்பவும் இப்படித்தான்! பிறர் என்ன சொல்றுங்கன்னு பொறுமையாகக் கேட்டுக்கிற பண்பாடுக்கும் உங்களுக்கும் வெகு தொலை! உங்களைப் புரிஞ்சிக்கிட்டவன் நான்.

இல்லேன்னு 'சினிமாவுக்கு நான் என்ன செய்து விட்டேன்'னு என்னைப் பார்த்துக் கேட்பீங்களா?

ராதா: இந்தக் கேள்வியை என் கிட்ட மட்டும் இல்லே தம்பி, நடிகன்னு சொல்லிக்கிட்டு, கிருப்பை வெச்சிக்கிட்டுத் திரியருன்களே அவுனுக ஒவ்வொருத்தனிடமும் கேட்டுக்கிட்டே தான் வர்றேன். ஆன்சர் எவனும் சொல்லலே!

ராம: நல்லா கேளுங்க அண்ணே கேளுங்க! உங்களுக்கே சரியா பதில் தெரியாத கேள்வியை நீங்க கேட்டுத் தானே அறிஞ்சுக்கிடணும்! ஆனா ஒண்ணு மட்டும் சொல்வேன். நான் சினிமாவில் நுழைஞ்சு, என் இலட்சியம் என்னைவிட உயர்ந்த பிறகு, பகுத்தறிவுக்குப் புறம்பான கதைகளிலே நடிக்கிறது இல்லேன்னு முடிவு கட்டிவிட்டேன். என்னை நடிக்க கூப்பிடறவங்கக்கிட்டே பணத்தைப்பத்தி பேசறதுக்கு முன்னாலே, 'கதை என்ன?' ன்னுக் கேட்காம இருக்கிறது இல்லே.

ராதா: இதை யெல்லாம் ஒரு 'புரட்சி'ன்னு நான் ஒத்துக்க மாட்டேன். ஒரு நடிகன்னா என்ன வேஷம் கொடுத்தாலும் நடிக்கணும். நாய் வேஷம் போட்டுக்கோன்னு சொன்னாலும் மறுக்காம போட்டுக்கிட்டுக் குலைக்கணும்! முடிஞ்சாக் கடிக்கணும்! அதை விட்டுட்டு, கதையிலும் ஆக்டுலும் பாலிஸியைக் கொண்டாந்து மோதக் கூடாது மேன்.

ராம: உங்க வாய் இப்படிச் செல்லுது! ஆனா, நாடகமேடையிலே மூலக் கதையை மாத்திப்பிடுறீங்க! உங்கஇஷ்டத்துக்கு. உங்க அரசியலுக்கு, உங்க நடிப்புக்கு ஏத்தப்படி நாடகக் கதையை அமைச்சு அட்டகாசம் செய்புறீங்க. உதாரணமா 'தசாவதாரத்தை...

ராதா: நான் என்ன செஞ்சுருக்கேன் தெரியுமா ப்ரதர்! புராணத்தைக் கதையாக்கி, தேவர்களை, உன்னையும் என்னையும்போல மனுஷன்களாக்கி...

ராம: ஆமா, ஆக்கி... அதைத் தான் இலட்சியம் என்கிறேன் நான். நீங்க அந்தப் பேரை அதுக்கு சூட்டாமே 'பிஸினஸ்' ஆக்கி வெச்சிருக்கீங்க! அவ்வளவு தான் நம்ப ரெண்டு பேருக்கும் வேறுபாடு.

ராதா: ஆமா என்னைவிட உன் பேருக்கு நடுவே 'ஜி' அதிகமாக இருக்குதே, அதையும் சேர்த்துக்க ப்ரதர்!

ராம: பேர் மட்டு மல்லே, இப்போது இலட்சியக் குரலோடு வளர்ந்து வருகிற என் கட்சிக்கும் ஓர் எழுத்து அதிகந்தான்!

ராதா: (அலட்சியமாக எழுந்து) ஓ, தட் மு! ஐ டோன்ட் லைக்!

ராம: உங்க இஷ்டமும் இலட்சியமும் இப்போது கட்சியை முதுகுக்குப் பின்னாலே மறச்சு வெச்சிட்டுப் பணம் சேர்க்கிறது அப்படின்னு

... என்ன ப்ரதர்? ...

வில்லன் வீரப்பாவின் பி. எஸ். வி. பிக்சர்ஸ் வெற்றிகரமாக எடுத்து முடித்திருக்கும் "பிள்ளைக் கனியமுது" விரைவில் வெளிவரும் சமூகச் சித்திரம்.

தெரிஞ்சிக்கிட்டேன். அதுஎப்படியாவது இருக்கட்டும், நீங்க நல்ல நடிகரு. பல படங்கள்ளே நடிக்கிறது எனக்குப் பெருமையாத்தான் இருக்கு. ஆனா...

ராதா : என்ன ப்ரதர் 'ஆனா'?

ராம : 'சினிமாக்காரப் பசங்க' அப்படின்னு சினிமாத் துறையிலுள்ளவர்களை வைதுக்கிட்டே சினிமாவிலே நடிச்சுக்கிட்டு வர்ரீங்களே உங்க தைரியத்தைப் பாராட்டி 'நடிகன் குரல்'லே நாலு பத்தி எழுதலாமான்னு தோணுது.

ராதா : 'நடிகன் குரல்' அது உன் குரல் தானே? ஏன் எழுதணும்? அதான் நேரிலேயே செல்லிட்டியே! ம்...நான் இப்பச் சினிமாவிலே நடிக்கறது எதுக்காகத் தெரியுமா?

ராம : பணம் சேர்க்க! நீங்க என்ன சொல்லப் போறீங்க?

ராதா : ஓர் ஓட்டைக் கத்தியை வெச்சுக் கிட்டு, ஒன்பது பேரை வெட்டி மல்லாத்தறது மட்டுந்தான் நடிப்புன்னு நினைச்சுக்கிட்டுருக்கிறவங்களுக்கு நடுவே புகுந்து......

ராம : வாய் வீச்சு வீசி, வயசை மறந்து, திருமண மாப்பிள்ளை வேடம் போட்டுக் கிட்டு, 'கடவுள்' இல்லேன்னு சொல்லிக்கிட்டே திருநீறை அள்ளிப் பூசிக்கிட்டு...

ராதா : ப்ரதர், ப்ரதர், நம்ம கிட்டவே வந்துட்டியே?

ராம : பின்னே வராமே இருப்பேனா? நீங்க அந்த நாளிலே கத்தி பிடுச்சு ஸ்டன்ட் படங்கள்ளே நடிச்சுது எல்லாம் எனக்கு இன்னும் மறக்கல்லே அண்ணே!

ராதா : (முகத்தைச் சிறிது தாழ்த்தியபடி) அப்ப விட்டெறிஞ்ச கத்தியைப் பிறகு நான் கையிலே எடுக்கவே இல்லே! ஆனா புத்தியை மட்டும் தீட்டிக் கிட்டேன், இனி படம் பார்க்கிறவங்களே ஸ்டன்ட் செஞ்சு ஏமாத்தக்கூடாதுன்னு.

நவீன வேலைப்பாடமைந்த
வைரம், தங்க
நகைகளுக்கு

நம்பிக்கையான இடம்
கௌரி
ஜுவல்லரி மார்ட்
தங்களுக்குத் தேவையானபடி
பல மாதிரி நகைகள்
தயார் செய்து தரப்படும்
72/75, பைக்ராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி, சென்னை-5.

ராம: ஏமாத்த எவ்வளவோ வழி இருக்கு, கத்தி ஒண்ணு என்னத் துக்குக் கையிலே அப்படீன்னு நினைச்சிருப்பீங்க! அது சரி, நான் ஒண்ணு சொல்ல ஆசைப்படு கிறேன்.

ராதா: சொல்லு ப்ரதர் சொல்லு. ஆனா 'ஆசைப்படுகிறேன்'னு நீ பிகின் பண்றது உன் சொந்த வார்த்தைபோல இல்லையே!

ராம: நான் சொல்லப் போவது என் கருத்து இல்லே ராதா அண்ணா!

ராதா: ப்ரதர், இது என்ன 'அண்ணே' 'அண்ணே'ன்னு அழகா அழைச்சிக்கிட்டே வந்துட்டு நடு விலே 'காஞ்சிவரம்' போயிட்டியே?

ராம: சரி அண்ணே, நீங்க அடிக் கடி சொல்லுவீங்களே அதைத்தான் உங்களுக்கே சொல்லப் போறேன். 'வைத்தியன் பண்ணுகிறவன் ஆங் கில டாக்டராக இருந்தாலும், நாட்டு வைத்தியனாக இருந்தாலும், யுனானிப் பேர்வழியாக இருந்தாலும் அவ னுக்கு, நோயாளி பிழைக்க வேண் டும் என்கிற இலட்சியம் மட்டும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்.' அதுபோல நம்மகிட்டேயே கொள்கை வேற்றுமை இருந்தாலும் நடிகன் என்ற உறவிலே அனைவரும் ஒன்று தான்!

ராதா: அடடே! மார்வலஸ் எம்.ஜி. ஆர்! என் கருத்தை என்னிடமே திருப்பி அனுப்பினையே மிக்க மகிழ்ச்சி. தம்பி, அத்துடன் இதை யும் தெரிஞ்சுக்க. கொள்கை வேறு! நடிப்பு வேறு! இரண்டையும் சேர்த் துக் குட்டை குழப்பினா 'ஆர்ட்' உருப்படாது ப்ரதர், உருப்படாது.

ராம: இருக்கலாம். ஆனால் இரண்டையும் ஒன்றாக்கி நான் பெற் றிருக்கிறேன் வெற்றி! பகுத்தறிவுக் குப் புறம்பான கதையாக இருந் தாலும் சரி, டயலாக்கு வந்தாலும் சரி, அதை மாற்றியமைக்காமே இருக்க மாட்டேன். அந்தப் பாதை யிலே எனக்கு இது வரையிலே வெற்றி தான்!

ராதா: உன் சொந்த வெற்றி தானே? ஐ டோன்ட் கேர்!

[இப்படிச் சொல்லிவிட்டு மந்திர வாதி மேக்-அப் போட்டுக்கொள்ள மேக்-அப் அறைக்குள் நுழைகிறார் எம். ஆர். ராதா. எம். ஜி. ஆர். தன் காரில் ஏறிச் செல்கிறார்.]

ருசிமிக்க

பல தினுசு ஊறுகாய் கள், சாம்பார் பௌடர், ரசம் பௌடர் முதலியன.

Manufacturers

SRI VENKATA LODGE CONDIMENTS,

KUMBAKONAM. . . . . S. INDIA

GP

சரோஜா என்ற பெயருக்கும் தமிழ்ப் படவுலகுக்கும் நல்ல பெயர் ராசி அந்தக் காலத்திலிருந்தே உண்டு. ஆனால் தேவி என்ற பெயரையும் சேர்த்து வைத்துக் கோண்டிருக்கும் இந்தக் கன்னட சரோஜா இது வரையில் என்ன சாதித்திருக்கிறார் என்று இனி வரப்போகிற படங்கள்தான் கூறவேண்டும்! ஏஎல். எஸ். புரடக்ஷன்ஸ் எடுத்து வரும் 'திருடாதே' என்ற படமாவது அதை நிரூபிக்குமா?

ஆடும் நட்சத்திரக் கூந்தல் அழகி, அவள் விரும்புவது ...!.

ஹேரோடின்

நீங்களும் பிரதி தினமும் 'ஹேரோடின்' உபயோகித்துக் கூந்தல் அழகைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள், 'ஹேரோடின்' மூளைக்குக் குளிர்ச்சி அளித்து, கூந்தல் கொட்டுதல், பொடுகு, பீநசம், தலைவலி, கண் எரிச்சல், சயித்தியம் இவைகளைப் போக்கி, பட்டு போன்ற கருமையான கேசத்தை வளரச் செய்கிறது.

'ஹேரோடின்' அகஸ்திய முறைப்படி தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத கூந்தல் தைலம். அகால நரை, வழுக்கை இவைகளைத் தடுத்து ஞாபக சக்தியை அதிகரித்து, ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது.



தயாரிப்பு: கர்னாடிக் கெமிகல்ஸ், சென்னை-6.
சென்னை, T. U. C. S. எல்லா பிராஞ்சுகளிலும், மற்றும் எல்லா முக்கிய ஷாப்புகளிலும் இப்பொழுது விற்பனையாகிறது.

INSIST ON Klein & Peyerl BLOCKS

30, MOUNT ROAD, MADRAS-2.

"என் ஆட்டம் எப்படி, சொல்லேன்"?

—விஜயாவின் "கடன் வாங்கிக் கல்யாணத்"தில் சாவித்திரி.



"ரொம்பப் பிரமாதம்!"

ஏவி. எம். வெளியீடான
"பூகைலாஸ்" படத்தில் ஜமுனா.

வருகிறது!
கண்ணதாசன் பிலிம்ஸ்
மாலையிட்ட மங்கை
வசனம், பாடல் : கண்ணதாசன்
இசை : விஸ்வநாதன் ராமமூர்த்தி
டைரக்ஷன்
ஜி.ஆர்.நாதன்

எம்ஜியார் பிக்சர்ஸ்
நாடோடி மன்னன்
டைரக்ஷன்
எம். ஜி. ஆர்



எம். ஜி. ஆர்.
பானுமதி பிர
மாதமாக நடி
த்திருக்கும்
இப்படம்
ஜூன் முதல்
வாரம் வெளி
வர இருக்
கிறது.

கேளுங்கள்

டி. பி. முத்துராமன், (வடவனூர்.)

சிவாஜி கணேசன் சொந்தமாக ஒரு ஸ்டுடியோ கட்டினால் என்ன ?

சிவாஜி சிக்கனக்காரர். அப்படி எல்லாம் கட்டிக்கொள்ள மாட்டார்! வருகிற பணத்துக்கு கோபாலபுரத்தையே விலைக்கு வாங்கினாலும் வாங்குவாரே தவிர, ஸ்டுடியோ கட்டும் ஆசைக்கு அருகிலேயே போக மாட்டார்!

டி. பெருமாள், (சென்னை-4.)

பதி பக்தி படத்தில் படம் முழுவதும் வருகிற டி. எஸ். பாலையாவை 'கெஸ்ட் ஆர்டிஸ்ட்' என்று போட்டிருப்பது ஏன் ?

கையைச் சொறிந்து கொண்டு, கொடுத்த செக்கை வாங்கிக்கொண்டு போகட்டும் என்றுதான் அப்படிப் போட்டிருப்பார்கள்!

என். சங்கரதாசன், (மதுரை.)

கோடி ரூபாய்களைச் செலவிட்டு "பர்தேசி"யை இவ்வளவு மோசமாக எடுத்திருக்கிறார்களே ?

படத்தைவிட. கே. ஏ. அப்பாஸுக்குத்தான்வெற்றி. 'ஸ் வ்ஸ்கோப்' என்று வாயில் நுழையாத பதத்தைச் சொல்லித் தன்னைப் பணக்காரராக்கிக் கொண்டு விட்டாரே!

பி. மல்லையா, (பெங்களூர்.)

நிம்மியின் கல்யாணம் என்ன ஆயிற்று ?

இதுவரையில் அவரது கன்னங்கள் அப்படியேதான் ;இருந்து வருகின்றன!

வி. ராமனுதன், (செஞ்சி.)

"பர்தேசி''யில் நர்கீஸின் முகம் கிழடு தட்டிப் போய்விட்டதே!

ஆமாம், அதனால்தான் சுனில்தத்தின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு விட்டார் நர்கீஸ்!

என். கே. கரியமாணிக்கம் (அவிநாசி)

பாலாஜி என்பவர் யார் ?

அவர் இப்பொழுதுதான். கதா நாயகன் பட்டியலில் கால் வைத்து பல மலிவுப் படங்களில் நடித்து வருகிறார். படங்கள் வெளிவரட்டும், பிறகு அவரது நடிப்பைப்பற்றி நீங்களே சொல்லுங்கள்!

ஏ. கருப்பண்ணன், (வேலூர்.)

வி. கே. ராமசாமியைப் பார்த்தேன், தலையை மொட்டை அடித்துக்கொண்டிருக்கிறரே, அது எந்த ஊர் மொட்டை ?

மாம்பலத்து மொட்டை! தான் எழுதிய கதை படமாகி, நன்றாக ஓடினால் மொட்டை அடித்துக்கொள்வதாக எந்த சாமிக்காவது வேண்டிக்கொண்டிருப்பாரோ என்னவோ ?

டி.பி. முத்துலட்சுமி கலப்பு டயா, காப்பியா என்ற சந்தேகம் அவருக்கும் ஏற்பட்டு விட்டதை அவர் பார்வை தெரிவிக்கிறதே! — அரசு பிக்சர்ஸின் "தேடி வந்த செல்வ"த்தில்.



ஆ. கு. ஐயப்பன் (விருதுநகர்.)

டி. எஸ். பாலையா 'சுவீகாரம்' எடுத்துக்

வேணுபாயிடம் அகப்பட்டுக் கொண்டு சாரங்கபாணி தவிப்பது, ஏ. டி. கேயின் "பெண் படுத்தும் பாடு" படத்தில் ஒரு ரஸமான கட்டம்.

கொள்ளப் போகிருராமே?

பவாம், 11 குழந்தைகளுக்குத் தந்தையாகியும் 'தத்து'க்காக அலையும்படி ஆகிவிட்டதா?

என். நீலமணி, (மன்னார்குடி,)

''பர்தேசி''ப் படத்துக்கு ராகினியா நடன டைரக்டர்?

அவரது பெயரைத்தான் போட்டிருக்கிருர்கள். அக்காவை ஆட்டிவைக்க இந்தப் படச் சந்தர்ப்பமாவது கிடைத்ததே!

ஏ. குமார் (விழுப்புரம்)

பழய மாதிரி இனி தங்கவேலு தொடர்ந்து கிழவர் வேடமே போடுவாரா?

போட்டால்தான் அவரது ஹாஸ்யம் பிழைக்கும். இல்லையென்ருல் சந்திரபாபுவும் வி. ஆர். ராஜகோபாலும் சேர்ந்து அவரை 'ஆல் ஆவுட்' ஆக்கிவிடுவார்கள்.

ஆர். பி. கமால் (திருச்சி.)

நிம்மி, ''செங்கோட்டை சிங்கம்'' என்ற படத்தில் ஏன் நடிக்கவில்லை?

படம் எடுக்கும் தேவரின் கண்டிஷன்களையும் 'பாடி'யையும் பார்த்து பயந்திருப்பார்!

வி. சுப்பையா (சிதம்பரம்.)

''பதி பக்தி''யில் சந்திரபாபு இல்லையென்ருல் ... ?

5000 அடிப் படம் குறைந்திருக்கும் கல்யாணம் ஆவதற்கு முன்னல் கல்யாண வீட்டில் இப்படியும் சிலர் சேர்ந்து மேஜைகளை அழுக்காக்குவார்களா என்ற நியாயமான கேள்விக்கும் இடம் இல்லாமற் போயிருக்கும்.

பஞ்சாபகேசன், (தி. நகர், சென்னை-17)

''பதி பக்தி'' பட ஆரம்பத்தில் மாரியம்மன்திருவிழாக் காட்சியை, பொறுமையைச் சோதித்து போர் அடிக்க வளர்த்துள்ளார்களே ?

ஒருவேளை பத்து நாள் திருவிழாவாக இருக்கலாம்!

வி. ஆர். சக்ரவர்த்தி, (மங்கலம்.)

டி. ஆர். மகாலிங்கம் பாட்டைக் கேட்டு இந்தி நடிகர்கள் ஸெட்டை விட்டு ஓடி வந்து விட்டார்களாமே, இது எதைக் காட்டுகிறது ?

அவர்களின் தொண்டையில் இருக்கும் கர கரப்பைக் காட்டுகிறது!

வி. சபேசன் (குடியாத்தம்.)

எனக்கு முக வெட்டு இருக்கிறது. நடிக்க ஆசை இருக்கிறது. சினிமாவில் சேர்ந்து பிரபலமாக முடியுமா ?

அதெல்லாம் இருக்கட்டும்; உமக்கு டப்பாங்குத்து நடனம் ஆடத் தெரியுமா?

எச். பி, ஹரன், (மாணமதுரை.)

எம். ஆர், ராதாவுக்கு ஆங்கிலக் கலப்பு இல்லாமல் வசனம் பேச வராதா ?

அவர் நான் மாடக் கூடல் தமிழர். அப்படிப் பேசுவதைத்தான் தனக்குரிய 'ஸ்டைலா'க வைத்துக் கொண்டிருக்கிருர்! இந்தச் சினிமா கதாசிரியர்கள் எழுதிக் கிழிக்கிற வசனங்களெல்லாம் அவருக்கு டோன்ட் கேர் மாட்டர்!

துரிதமாக தயாராகிறது!
நடிகவேள்
M.R.ராதா
நடிக்கும்
கல்யாணி
பிக்சர்ஸ்...
தாமரைக்குளம்
டைரக்ஷன்
V.சீனிவாசன்
K.சாரங்கபாணி
V.கோபாலகிருஷ்ணன்
T.K.பாலசந்திரன்
சௌகார் ஜானகி
பத்மினி பிரியதர்ச
இந்துலேகா...
திரைக்கதை, வசனம், பாடல்கள்
முகவை இராஜமாணிக்கம்
மூலக்கதை: S.R.நடராஜன்
கேமரா: S. வீரபாகு
சங்கீதம்: பத்மநாபசாஸ்திரி
ஆர்ட்: வர்தூர்கர்
ஸ்டுடியோ: கோல்டன்
விவரங்களுக்கு: கல்யாணி பிக்சர்ஸ், 19 லஸ் அவென்யூ சென்னை-4.
BALU BROS
BEE BEES

பூகைலாஸ
டைரக்ஷன்:
K.சங்கர்
AVM
PRODUCTIONS

கவர்ச்சிமிக்க நடனங்கள் பல
நிறைந்த புராணச் சித்திரம்
விரைவில் வரவிருக்கிறது.

அபயம் அளிக்கும் கையும் கருணை நிறைந்த பார்வையும் கொண்ட ஆந்திர காதல் ஜோடிகளான நாகேஸ்வர ராவ் — அஞ்சலிதேவி "செஞ்சுலக்ஷ்மி" யில்.

மல்லிகையின் மணம்

ஆர். பி. மல்லாரி

ஷூட்டிங் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது!

கதாநாயகனும் கதாநாயகியும் ரஸிகர்களைக் கொலை செய்யவேண்டு மென்று, களிமண்மேல் புல் போர்த்தப்பட்ட ஒரு துண்டுத் தரையின் மீது உருளும் காதல் செய்து கொண்டிருந்தார்கள். அதாவது வாயில் ஒரு வைக்கோல் இதழை வைத்துக்கொண்டு, தனித் தனியே குப்புறப் படுத்தவாறு, காதல் டயலாக் பேசிக் கொண்டிருந்தார்கள் :

"இந்த வருஷம் எனக்குக் கல்யாணம் செய்யணும்னு எங்கப்பா அம்மா சொல்றுங்க!" என்றுள் கதாநாயகி!

"யார் மாப்பிள்ளையா 'நடிக்க'ப் போறுங்க?" என்று சோகரஸத்துடன் கேட்டார் கதாநாயகர்.

"கதாநாயகிக்குக் கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருஷன் தானே?"

"ஆமாம்! ஜோக்கார் சீட்டு எல்லா சீட்டோடும் சேரத்தானே செய்யும்!..."

"ஒகே!" என்று அலறினர் டைரெக்டர் ஸார்.

அந்த ஷாட் அத்துடன் முடிந்தது.

அடுத்தது ஜோக்கருக்கு ஒரு குளோஸ்-அப்! அது அழகாகவாவது இருக்கும்!

கதாநாயகி தன்னுடைய ரோஸ் வர்ணத்தைக் கலைத்துக் கொண்டு வந்தாள். பகட்டுச்சேலையை விட்டெறிந்து விட்டு தன்னுடைய சொந்த சேலையைக் கட்டிக்கொண்டு வந்தாள்.

மேக்-அப் செய்யப்பட்ட ஸெக்ஸ் அப்பீல் விஷயங்கள் மாத்திரம் அப்படியே இருந்தன!

'யாரோ புதிதாக ஒரு மல்லிகா வந்திருக்கிறுளாமில்ல — புல்லுக்காரியாக நடிக்க—அவள் நடிப்பு எப்படி இருக்கிற தென்று நேரே பார்க்க வேண்டும்' மென்ற பொருமை, ஆசை இவளுக்கு ஒரு புது நபரை இந்த சினிமா உலகம் அவ்வளவு சுலபமாக ஏற்றுக் கொள்ளுமா?

பிரமாத மேக்-அப்புடன். ஜெகஜ் ஜோதியானவெளிச்சத்தின் முன் இருந்த போது, முதலாளியுடனும், டைரெக்டருடனும், மற்றும் சில முக்கியஸ்தர்களுடனும் "விழுந்து விழுந்து" சிரித்துச் சிரித்துப் பேசிய அந்தக் கதாநாயகி இப்போது அச்சம், மடம், நாணம், பயிற்பு ஆகிய கல்யாண குணங்கள் மிளிர நடித்தாள்! நடிகைகளுக்குப் பௌடர்பூசாமல், மைதீட்டாமல், துண்டு துண்டுகளாக உடை அணிவிக்காமல், இருக்கும் போதுதான், அந்த வெட்கங் கெட்ட வெட்கம் 'கபால்' என்று பிடித்து விடும் போலும்! வாய் திறந்து டயலாக் பேசி நாடமாடும் தெய்வங்களான இவர்களுடைய பிரத்யேகமான சலுகை இது!

கதாநாயகனும் கதாநாயகியும் படுத்திருந்த அதே புல் தரையில்தான் புதுப் புல்லுக்காரி புல் அறுக்க வருகிறுள். அனுபவமற்றவள்! அந்த இடத்தில், முதலில் புல் இருக்குமா, அப்படி இருந்தாலும் அந்தப் புல்லை பசு தின்குமா, அப்படித் தின்றுலும் அது பால் கொடுக்குமா போன்ற விஷயங்கள் புதிதாக வந்த மல்லிகாவுக்குத் தெரிய நியாயமில்லைதான்!

மிகவும் சாதாரண மேக்—அப்புடன் அவள் தயங்கியபடி செட்டுக்குள் வந்தாள்!

அவளுக்கு அழகான காது இருந்தபடியால், காதைச் சுற்றி ரவுண்டாக ஒரு நகையை வளைத்துப் போட்டு, காதை

மறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவில்லை. கழுத்து அழகாக இயற்கையாகவே இருந்தபடியால், கழுத்தைச் சுற்றி ஒரு நாய்ப்பட்டை பாட்டர்ன் நகை அலங்கரிக்கவில்லை. விசாலமான அழகான க்ண்கள் நீலத் திரையில் மிதந்து கொண்டிருந்த படியால் கண்ணிலிருந்து காதுவரை கோணவடிவால் கரிக்கோடுகள் இழுக்கப் படவில்லை. ஆண்டவன் ரோஜா இதழ் போன்ற இதழைக் கொடுத்திருந்தபடியால் அவள் சிகப்பு மிட்டாயைத் தின்று உதடுகளில் அந்த வர்ணத்தைப் பூசிக்கொள்ளவில்லை — காதல் என்ற உணர்ச்சி ஏற்பட்டதும் கீழ் உதட்டை மாத்திரம் கிழக்கும் மேற்குமாக ஆட்ட அரைஜாண் கூந்தல் ஆறடியாக இல்லாமல், தன்னுடைய அடர்ந்த இயற்கையான கூந்தலை வழக்கப் பிரகாரம் அள்ளிச் சொருகி முடித்திருந்தாள். ஹேர்டிரஸ் செய்பவர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சிரியம் —சௌரியை எப்படியெல்லாம் அடுக்கி இப்படி ஓர் அலாதியான ஹேர்டிரஸ்.

அதிகம் விவரிக்க வேண்டியதில்லை — இயற்கையானது வசீகரம் இருந்தும், அவளைச் சினிமாத் துறையில் இழுத்துக் கொண்டதுதான் வாய்ப்பு! பட்டினித் தெய்வம் அவளை அங்கு பிடித்துத் தள்ளி இருந்தது. அவள் நடிக்க ஒப்புக்கொண்டு வந்து விட்டாள்.

ஒரு போஸில் அவள் ஒரு விதமாக சிரசைச் சிறிது நிமிர்த்த வேண்டுமென்று சொன்னவாறே, டைரெக்டர் அவளை இலேசாகத் தொடவேண்டிய பாக்கியத்தைப் பெற அவளிடம் நெருங்கினர். அவருக்கு நடிப்பு என்றால் என்னவென்றே தெரியாது!

"நீங்க அங்கனே இருந்தபடியே சும்மா சொல்லுங்க ... நீங்க எந்தமாதிரி சொல்றீங்களோ, அந்த வகையிலே கொஞ்சம் கண்ணியமான முறையிலேயே நான் நடந்துக்கிறேன்!" என்று அவள் சொன்னபோது அவர் உண்மையாகவே அசந்து போனர்!

ஒரு குமாரி சொல்லும் வார்த்தையா இது?

கால் 'சென்சுரி'யாக இளங் குமரிகளாகவே மின்னி, கிட்டத்தட்ட ஒரு சென்சுரி படங்கள் போட்டு விட்ட அமர கதா நாயகிமார்கள், தங்களை இப்போது யாரும்தொடவும் விரும்புவதில்லை என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு, இப்படிச் சொல்லுவது சம்பிரதாயம்! ஆனால் இவளோ?...

டைரெக்டர் உற்சாகத்தை இழந்தார்!

சிறந்த நடிப்புத் திறமையும், நல்ல முக வெட்டும் பெற்ற ராகினி கதாநாயகியாகிவிட்டதில் ஆச்சரியமில்லை—ராயல் பில்ம்ஸின் "நீலாவுக்கு நிறஞ்ச மன"சில்.

''ஷ்டார்ட்!'' என்று அலறினர்.

ஒளிப்பதிவான புல்லுக்காரியின் பாட்டை இயந்திரமும் அலறியது! மல்லிகா பாடிய பாட்டுதான் இது! மல்லிகா உண்மையாக இப்போதும் பாட, ஒளிப்பதிவாளர் குஷியாக படமாக்கிக் கொண்டிருந்தார். டைரெக்டருக்கு டோஸ் கிடைத்ததில் அவருக்குப் பரம திருப்தி!

மல்லிகா அப்போதும் மல்லிகாதான். ஆனல் புல்லுக்காரி மல்லிகா! புல்லுக்காரி பாட்டுடன்!

''மனுசன்கிட்டே வேலே செஞ்சா
மறு நிமிசம் மறந்திடுவான்
மாடு கன்னுக்கு உதவி செஞ்சா
மாடசாமி காத்திடுவான்.''

ஆண்டவன் அவளுக்குக் கொடுத்திருந்த இனிமையான சாரீரத்தில், கபட மற்றுப் பாடியவாறு, புல் கொண்டுவருவாள். புல் கட்டும் பறந்து விடும்! "சாமீ!...புல்லு வேணுங்களா?"

"என்ன வெலே?"

"வெலே என்னுங்க? வளக்கமா உள்ளதுதானே!... அஞ்சு பணங்க!"

அவள் சிரிப்பாள்—கபட மற்று, ஒரு தங்கையைப் போல! ஆனல், அவள் யௌவனம் அவளுடைய அந்தச் சிரிப்புகளுக்கு ஒரு புது உருவம் கொடுக்கும் அவனும் சிரிப்பான்—ஆனல் கபடுடன்!

"புல்லுக் கட்டுக்கு மாத்திரந்தானே!"

"என்னண்ணே! ஏது? புல்லுக் காரின்னு 'ஏதாச்சும்' பேசிடலாம்னு நெனச்சியா?"

பத்ரகாளி போல மாறி நிற்கும் அவளுடைய இந்தப் புதிய பாவத்தைக் கண்டதும் அவன் பெட்டிப் பாம்பாக அடங்கி விடுவான். இருந்தாலும் ஒரு மழுப்புச் சிரிப்பு!

"என்ன ஆயா, சும்மா வெளேயாட்டுக்குச் சொன்ன.........

"உன் தங்கைகிட்டே வெளேயாடுற தாக நெனச்சு வெளேயாடணும்!"

அவள் மறுபடியும் சிரிப்பாள். அவன் சிரிக்க மாட்டான்.

இந்த சம்பாஷணையைக் கேட்டு 'அவளுடைய முருகன்' பூரிப்பான்!

அன்றொரு நாள்!

யார் யாரோ வந்தார்கள்!

" 'சுள்'னு அடிக்கிற வெய்யிலே ரவுண்டு கண்ணடிக்குள்ளற புடிச்சுப் போட்டுக் கிட்டாங்களே!" கண்கள் ஆச்சரியத்தில் மின்ன, மல்லிகா சொன்னள்! அவனைக்கூட அந்த ஆட்கள் படம் பிடித்து விட்டார்களாம்!! முருகன் கெஞ்சிக் கேட்டு, அவள் இருந்த படத்தை அவர்களிடமிருந்து கொண்டுவந்தான்.

"அடியம்மா! நான் இவ்வளவு அளவாவா இருக்கேன்!"— மல்லிகா

வின் கண்ணே அவள் மேல் விழுந்திருக்கலாம். ஆனால், அந்தப் படாதிபதியின் கண்கள் இவள்மேல் விழுந்தது என்னவோ உண்மை! தம்முடைய அடுத்த படத்தில் அவள் எப்படியும் நடித்தாகவேண்டுமென்று அவர் தீர்மானமும் செய்து கொண்டார்!

அந்தப் புது ஆசாமி அந்தப் புல்லுக்காரியை இரண்டு ரவுண்டு சுற்றி வந்தான். அவளுக்குப் பொறுக்கவில்லை

நான் கதாநாயகியாக உயர்ந்து விட்டதற்கு உதவியது தெய்வமல்ல; எனது கவர்ச்சி மிக்க நடனமும் கட்டான உடலழகும்தான் —"தெய்வமே துணை"யில் ஈ. வி. சரோஜா.

"ஏனய்யா! பொம்பளையை நீ பாத்ததில்லே?" வெடுக்கென்று கேட்டாள்.

அவன் கோபப்படவில்லை. பல்லை இளித்தான்.

"ஙே...ஏ......ஏ!"

அர்த்தமில்லாதபடி மல்லிகா பழிப்புக் காட்டினாள்.

அவன் மீண்டும் சிரித்தான்.

"இங்கே வா பிள்ளே......இங்கே வா புள்ளே சொல்றேன்!"......என்று பல் இளித்தவாறு, அவன் பர்ஸைத் திறந்தான்.

'பளா'ரென ஒரு அறை அவன் முகத்தில் விழுந்தது. அவள் இருந்த இடத்தில் முருகன் நின்று கொண்டிருந்தான்!

இப்போது மல்லிகா முருகன் மனைவி! பட்டணத்திலிருந்து படாதிபதி வந்திருந்தார், நல்ல தொகை. மல்லிகாவின் நேர்மையில் முருகனுக்கு நம்பிக்கை உண்டு. மல்லிகாவோ "அவர் இஷ்டம்" என்று சொல்லி விட்டாள். ஒப்பந்த பாரம் கையெழுத்தாயிற்று. "புல்லுக்காரி"யாக அவள் தோன்றினாள். அவள் நடிக்கவில்லை, வெளிச்சத்தின் முன் தன் பிழைப்பை வாழ்ந்து காட்டினாள்.

விமர்சகர்கள் எழுத்தில் பாராட்டினார்கள்.

அடிபட்ட டைரெக்டரே வம்புப் பேச்சை ஆரம்பித்து வைத்தார்!

"எனக்குத் தெரியுமையா ... 'புளிய மரச் சந்துலே, கஞ்சிக்குக்கூட ...'"

"'அதுலே' எல்லாம் பாஸ் செஞ்சாத் தானே சினிமாவுலே சேர தைரியம் ஏற்படும்..." — மாஜி கதாநாயகிகள் தம்முடைய அனுபவங்களை எடுத்து வைத்து பேசிக்கொண்டிருந்தார்கள்!

மல்லிகாவின் நேர்மையை, அவள் அறிவாள், அவள் கணவன் அறிவான்.

ஆனால் நமது கதாநாயகிமார்களில் பலர் வாங்கிவைத்திருக்கும் முத்திரை? இது இருக்கும்வரையில், புதுமுகங்கள் நேர்மையுடன் வாழ முடியுமா? வாழ விடுவார்களா?

முடியும்! வாழவிடுவார்கள்!

திரையிலும் திரைமறைவிலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவேண்டும்.

பெண்கள் மனம் வைத்தால் நடக்க இயலாத காரியமில்லை.

இந்த மல்லிகாக்களின் மணம் நிச்சயமாக ஒரு நாளும் மறையாது! குன்றாது!! குறையாது!!!

அச்சடிப்பதற்கும் இதர உபயோகங்களுக்கும்
ஏற்ற எல்லாவிதமான அட்டைகள், காலிகோ,
நியூஸ் பிரின்ட், ஆர்ட் பேப்பர், கிராப்ட்
பேப்பர் முதலியவைகள் எம்மிடம்
எப்போதும் கிடைக்கும்.

உங்கள் தேவைக்கு உடனே எழுதுங்கள்

★

பி. எஸ். நஞ்சப்ப செட்டி & சன்ஸ்

2/34, தங்கசாலை வீதி, சென்னை - 3.

டெலிபோன்: 55000

ஹோமியோபதி

வைத்திய சாஸ்திரத்தை மிகக் குறைந்த செலவில் தங்கள்
வீட்டிலிருந்தபடியே தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ
படித்து சிறந்த முறையில் டாக்டராகத் தொழில் நடத்தலாம்
முழு விபரங்களையும் இலவசமாகவே அனுப்பித் தருகிறோம்.

பாரதத்தின் பிரதான ஹோமியோபதி ஸ்தாபனம்

MEDICAMENTA HOMIOS

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்,

கும்பகோணம்

பொதுஜனம் பேசுகிறார்

குற்றக் கண்

சினிமா நடிகர்களின் வாழ்வு சொர்க்கபோகம் அல்ல; சொற்ப காலத்தில் சிரமத்தை அதிகம் கொடுப்பது. ஊதியம் அதிகம்; உழைப்பும் இரட்டிப்பு. 'கரணம் தப்பினால் மரணம்' என சர்க்கஸ்காரர்களைக் குறிப்பிடுவார்களே, அம்மாதிரி ரசிகர்கள் நினைத்தால் இமாலயப் புகழ் அடையலாம்; ரசிகர்கள் இதயத்துக்குப் பிடிக்காவிடில், அதளபாதாளத்திற்குத் தள்ளவும் படலாம்! எனவே, மிகவும் குறுகிய காலத்தில் வாழ்நாள் பூராவும் காலம் தள்ளுவதற்கு வேண்டிய பொருளைத் தேடிக் கொள்வதோடு, சினிமா உலக கைவிட்ட பின்னர் உடல் நலமும் குன்றி கஷ்டப்பட வேண்டியவர்கள், நடிகர்கள். நாம் உள்ளம் கிளுகிளுக்கக் காணும் காதல் காட்சிகள், நிலாவிலே உல்லாசமாக உலவும் கட்டங்கள், நல்ல வெய்யிலிலே வறுத்து எடுக்கப் பட்ட காட்சிகள்! மேக்கப்பினாலும், கேமிராக்காரரின் திறமையினாலும், அழகு சுந்தரிகளாகக் காட்சி அளிப்போர் உண்மையில் எப்படியிருப்பர் என்பதை சற்றுச் சிந்தித்துப் பார்த்தால்.....? ஆணும் பெண்ணும் சேர்ந்து பாடுபடுகிற தொழிலான அதில், காதல் காட்சிகளில் வெறும் இயந்திரமாக தொட்டுப் பழகி மரக்கட்டைகளாகவே அவர்கள் மாறிவிடுகிறார்கள். இந்த உண்மையை அறிந்தால் நாம் அவர்கள் பால் பெரிதும் அனுதாபமே காட்ட வேண்டியிருக்கும்! அதற்கு மாறாக, அவர்கள் சொர்க்க வாழ்வு வாழ்கிறார்கள்; ஆணும் பெண்ணும் காதல் களியாட்டத்திலேயே காலம் கழிக்கிறார்கள் என விஷயம் தெரியாத ரசிகர்கள் எண்ணத்தக்க வகையில், சிறிதுகாலமாக ஓய்ந்திருந்த 'மஞ்சள் பத்திரிகைகள்' மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளன. ஆணும் பெண்ணும் பழகித் தான் ஆகவேண்டும் என்றுள்ள தொழிலை ஏன் நாம் பரந்த மனப்பான்மையுடன் பார்க்கக் கூடாது? டாக்டர் பெண் நோயாளிகளின் கையைப் பிடித்துப் பார்க்கவில்லையா? வளையல்காரன் எல்லாப் பெண்களின் கைகளையும் பற்றவில்லையா? லேடி டாக்டர் எவ்வளவோ இடங்களுக்கு இரவு வேளைகளில்கூட போகவில்லையா? இதையெல்லாம் குற்றக் கண்கொண்டு பார்க்கலாமா? தவறான நடத்தை உள்ளவர்கள் இருக்கலாம். அவர்கள் பொதுவாழ்வில் ஈடுபட்டவர்களில் இல்லையா? சினிமா நடிகர்கள் மட்டும்தானா? எனவே, இவர்களைப்பற்றிய தவறான, ஒன்றைப் பத்தாக்கிக் கூறும் மஞ்சள் பத்திரிகைகளை படிப்பதனால் ரசிகர்கள் நடிகர்களைப்பற்றி தவறாகஎண்ணி, நடிப்பிலும் குறைகள் காணநேரிடுகிறது. எனவே, நடிகர் சங்கம் இதற்கான முயற்சிகள் செய்து, இந்த 'மஞ்சள் பத்திரிகை'களை ஒழித்துக்கட்ட முயலவேண்டும்.

கே. ரகுபதி,
கும்பகோணம்

தவறான அபிப்பிராயம்

"சினிமாக்காரர்கள் மூட்டை மூட்டையாக பணம் சம்பாதிக்கிறார்கள். அவர்களிடம் தயாளம், கருணை போன்ற குணங்களே கிடையாது." இப்படிப்பட்ட தவறான அபிப்பிராயம் பலரிடை இருந்து வருகிறது. அது எத்தகைய தவறான அபிப்பிராயம் என்பதை பண்டரிபாய், எம். ஜி. ராமச்சந்திரன், ஏ. கருணாநிதி போன்ற நடிகர்கள் மெய்ப்பித்துள்ளனர். பண்டரிபாய் பக்தி மார்க்கத்திலும், கருணாநிதி மக்களின் சுகாதார விஷயத்திலும், எம். ஜி. ஆர். கல்வித் துறையிலும் பணத்தை வாரி வழங்கி உள்ளனர். இம்மூவரையும் பின்பற்றி நமது மற்றைய நட்சத்திரங்களும் நற்காரியங்களுக்கு பொருளை அள்ளிக் கொடுக்கவேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

வ. சிங்காரவேலன்,
சிக்கல்.

பாராட்ட முடியாது

நடிகை பண்டரிபாய் லட்ச ரூபாய் வரை செலவிட்டு பண்டரிநாதனுக்குக்

புதுமுகங்களின் வரிசையில் இடம் பெற்று விட்ட மகிழ்ச்சி சாந்தினியின் முகத்தில் பளிச்சிடுகிறதே! — வாஹினியின் "ராஜ மகுட"த்தில்.

கோயில் கட்டிய செய்கையை நான் பாராட்டமாட்டேன். தமிழ்நாட்டில் மூலை முடுக்குகளி லெல்லாம் கோயில்கள் இருக்கின்றன. பண்டரிபாய் செலவிட்ட அத்தொகையை அவர் ஏழை மாணவர்களின் கல்விக்கோ, அல்லது ஏழை நோயாளிகளின் சிகிச்சைக்கோ செலவிட்டிருந்தாரானல் அவரை எவ்வளவு பாராட்டினலும் தகும்.

ஆர். ராமசாமி,
மதுரை.

வேறு கிடையாதா?

சமீப வெளியீடான "பதி பக்தி" படத்தைப் பார்க்கும் வரையில் அது பழைய பதிபக்தி கதையேதான் என்று எண்ணியிருந்த பலரில் நானும் ஒருவன். தலைப்பைத் தவிர வேறு எந்த விதத்திலும் ஒற்றுமை காணமுடியாத இந்தப் படத்திற்கு புத்தா பிக்சர்ஸார் ஏன் "பதி பக்தி" என்ற பழைய தலைப்பையே கொடுக்க வேண்டும்? அப்படிக் கொடுத்துவிட்டு 'முற்றிலும் புதிய கதை' என்று விளம்பரப் படுத்துவானேன். வேறு நல்ல தலைப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லையா?

கே. சுப்புராஜ்,
திண்டுக்கல்.

பாராட்டும் - வேண்டுகோளும்

எம். ஜி. ராமச்சந்திரன் இனி படங்களில் நடிக்கப் போவதில்லை யென்றும், டைரெக்ஷனேடு நின்றுகொள்ளப் போவதாகவும் ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறியதாக நான் செய்தி படித்தேன். அவருடைய அந்தச் செய்கையை நான் பாராட்டுகிறேன். அவருடைய அந்தச் செய்கையினல் பல புதிய முகங்களுக்கு திரை உலகில் சந்தர்ப்பம் கிட்டுமல்லவா? பாராட்டுடன் அவருக்கு ஒரு வேண்டுகோளும் விடுகிறேன். படங்களில் நடிப்பதை ஒரேயடியாகநிறுத்திக்கொள்வதைவிட, வருஷத்திற்கு ஒரு படத்தில், பொருத்தமான பாத்திரத்தில் நடிக்கவேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

கே. விருத்தாசலம்,
குடந்தை.

தமிழா, பெருமைப்படு!

வடநாட்டில் எத்தனையோ தயாரிப்பாளர்கள் இருக்கிருர்கள்; நிறையப் படங்கள் தயாரிக்கிருர்கள். எனினும் பிரதமர் நேருஜியின் தங்கப் பதக்கமும், பரிசுப் பணமும் தமிழ் நாட்டில் தயாரான ஒரு இந்திப் படத்திற்கும், அதைத் தயாரித்த ஒரு தமிழருக்கும்தான் கிடைத்திருக்கின்றன. இது தமிழன் பெருமைப்பட வேண்டிய விஷயமாகும். இதே போல ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பரிசைத் தமிழ்நாடே அடையவேண்டும். அதற்கு நம் படாதிபதிகள் கவனம் செலுத்த வேண்டும்.

ஜி. கார்த்திகேயன்,
லால்குடி.

திரையில் தவறுகள்

சென்ற இதழில் வெளியான "திரையில் தவறுகள்" என்ற கட்டுரையைப் பற்றி ஒரு வார்த்தை. தவறுகளை எல்லாம் கவனித்து வைத்திருந்து

எழுதியிருக்கிறார். 'சபாஷ்' போட வேண்டியதுதான். ஆனால் ஆங்கிலப் படங்களிலே குறைகளே கிடையாது என்று ஒலிக்கும்படி அவர் எழுதியிருப்பதை என்னால் ஆட்சேபிக்காமல் இருக்க முடியவில்லை. ஆங்கிலப் படங்கள் பலவற்றிலும் தவறுகள் இருப்பது, அவ்வப்பொழுது மேனாடுகளில் வெளியாகும் சினிமாப் பத்திரிகைகளைப் படித்திருந்தால் அவருக்குத் தெரிய வந்திருக்கும்.

பி. விச்வேச்வரன்,
கோமாகுடி.

தமிழில் வருமா?

பல்வேறு பாஷைகளிலிருந்தும் இன்று பல படங்கள் தமிழாக்கப்பட்டு வெளிவருகின்றன; அவைகளில் பெரும்பாலானவை வெறும் குப்பை என்று கூறிக்கொள்ள வெட்கமாகத்தான் இருக்கிறது. பிரதமரின் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ள **ஹம் பஞ்சி ஏக் தால்கே** என்ற படம் தமிழ் விளக்கத்துடன் வெளிவந்திருக்கிறது. அதைத் தமிழாக்கி வெளியிட்டால் நல்ல வரவேற்புக் கிடைக்கும். தயாரிப்பாளர் இது விஷயத்தை கவனிக்க வேண்டுகிறேன்.

தமிழ்ப் பிரியன்,
திருச்சி-2.

பின்பற்ற வேண்டும்

பம்பாயிலிருந்து வெளிவரும் சினிமா வாரப் பத்திரிகை ஒன்றில் வெளியான கட்டுரை ஒன்றை நான் படித்தேன். சர்க்காரின் பாராட்டுதலைப் பெற்ற சங்கீத டைரெக்டர் எஸ். டி. பர்மனைப் பற்றி, மற்றொரு சங்கீத டைரெக்டரான ஓ. பி. நய்யார் எழுதிய கட்டுரையாகும் அது. அதைப் படித்த நான் நய்யாரின் பொறாமை இல்லாத, பரிசுத்தமான இருதயத்தைக் காண முடிந்தது. ஒரு தொழிலிலுள்ள ஒருவர், அதே தொழிலிலுள்ள மற்றொருவரைப் புகழ்ந்து பாராட்டி எழுதியிருந்தது எனக்கு வியப்பையே அளித்தது. "மற்ற பல விஷயங்களில் வட நாட்டைக் காப்பி அடிக்கும் நம் பட உலகப் புள்ளிகள் இந்த விஷயத்தில் அவர்களைப் பின்பற்றினால் நன்று

ராஜா ஸ்னோ

சரும சௌந்தரியத்திற்கு
ஏற்ற சிங்கார சாதனம்.

Use RAJA KASTURI SOAP for luxury Bath,
RAJA BAR SOAP for easy washing.
MFRS: MANYAM & CO.,
BANGALORE-3

யிருக்குமே" என்று என்னால் நினைக்காமல் இருக்க இயலவில்லை.

என். வரதன்,
காஞ்சிபுரம்.

சபாஷ் வானொலி !

தமிழ் வருடப் புது நாளன்று ரேடியோவில் நடைபெற்ற "வ. உ. சி. நாடகம்" சிறப்பாக அமைந்திருந்தது. அப்புதுத் திருநாளில் நாட்டுக்காகப் போராடிய வ.உ.சி. யின் பாகத்தை ஏற்று நடித்த ஸ்ரீ ஷண்முகம் நம்மை வ. உ. சி. யின் காலத்திற்கே கொண்டு சென்று அவருடைய வீரம் கலந்த பேச்சால் களிப்பூட்டினார். "வானொலி நிலையங்கள்" இப்படிப் பட்ட நாடகங்களுக்கு ஆதரவு தருகிறது என்பதை அறிய அளவற்ற மகிழ்ச்சி. "வானொலி நிலயத்தார்" இனியும் தமிழன் திருநாள் ஒவ்வொன்றிலும், தமிழ் நாட்டுக்காக உயிர்விட்ட தியாகிகள் சரித்திரத்திற்கு இடம் கொடுக்கவேண்டும். டி. கே. எஸ். சகோதரர்கள் இந்த "வ. உ. சி. யின் சரித்திரத்தை" மேடையேற்றி நடித்து, புகழ் அள்ளிக்கொண்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை!

ஆர். ராமஸ்வாமி,
சென்னை-24.

பாராட்டு நிச்சயம்

"சம்பூர்ண ராமாயணம்" எம். ஏ. வி. பிக்சர்ஸாருக்கு ஒரு மகத்தான வெற்றி. புராண காலத்தில், தெய்வ நம்பிக்கையற்று, துவேஷப்பிரசாரம்செய்துவரும், ஒருசில கட்சிக் கூட்டத்தினர்கூட பார்த்துக் களிக்கும் படம் என்றால் அப்படம் "மாபெரும் வெற்றி" என்றே சொல்லலாம். படத்தின் வசூல் அப்படத்தின் தயாரிப்பாளர்களுக்கு திருப்திகரமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், துணிந்து ஒரு "புராணப் படத்தை" தற்கால நாகரீக பாணியில் தயாரித்து, வெளியிட்டு மக்களுக்கு "ஸ்ரீராமகாவ்யத்தை"த் தந்த ஸ்ரீ எம். ஏ. வேணுவுக்கு பொதுமக்கள் பாராட்டு நிச்சயம் உண்டு!

ஆர். ராஜம்,
மதறாஸ்-24.

இனாம்! இனாம்!! இனாம்!!!



எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை ரூ. 1-94 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5-00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட் வாட்சும், நியுகோல்டு மோதிரமும் அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்:

AMRIT PHARMACY (K-1) JULLUNDUR CITY

பிலிம் பக்கூடா

"'படித்த முட்டாள்' படத்தை எடுக்க முனைந்த மதுரம் பிக்சர்ஸார், அதைக் கைவிட்டு விட்டார்கள் என்று நம்பகமாகத் தெரிகிறது."

— செய்தி

படிக்காத அறிவாளிகளுக்கு ஆறுதலாக இருக்கட்டும் என்ற எண்ணத்தினால் ஏற்பட்ட முடிவாக இருக்கலாம்!

* * *

பிரபல நட்சத்திரமான ரஞ்சன் டைரக்டராகிறார்!

— தலைப்பு

படங்களில் நடிப்பது, பேசுவதை விட இது மேல் என்று அவருக்குத் தோன்றி யிருக்கும்!

* * *

"வாத்தியாரின் வாழ்க்கையையும் இன்னல்களையும் விவரிக்கும் 'எங்கள் குடும்பம் பெரிசு' என்ற தமிழ்ப் படத்தை சென்னை நிதி மந்திரி சுப்ரமண்யம் பார்த்தார்."

— ஒரு செய்தி

திரையில் வாத்தியராக வருகிறவர் தன்னிடம் எந்தக் கோரிக்கையையும் சமர்ப்பித்து விட மட்டார் என்று நிதி மந்திரிக்குத் தெரியாதா, என்ன!

* * *

"'தங்கச் சுரங்கம்' என்ற படத்தில் டைரக்டர் படாதிபதி நாகேந்திர ராவின் மகன் சுதர்சன் நடிக்கப் போகிறார்!"

— செய்தி

சினிமாவில் சேர்ந்த பிறகும் கூட அப்பா டைரக்ட் செய்வதற்கு அடங்கிப் போகவேண்டியதிருக்கிறதே என்று சுதர்சன் முகம் சுருங்கி வருந்தலாம்!

"ஹாலிவுட் நடிகை ரீடா 5-ம் தடவையாக மணக்கிறார்!"

— தலைப்பு

அவரது ஆறாவது கணவன் யாராக இருக்கும் என்று இனிப் பேச்சுக் கிளம்பலாம்!

* * *

"தேவர் பிலிம்ஸ் 'செங்கோட்டை சிங்கம்' படத்தில் இந்தி நடிகை நிம்மி நடிக்கப் போகிறாராம்."

சிங்கத்தை அடக்குவதை விட நிம்மியைச் சமாளிப்பது கம்மியாக இருக்காது என்கிறார் விஷயம் அறிந்தவர்!

* * *

"... இந்த நகரிலுள்ள பூங்காவில் தினசரி மாலை ஆறு மணிக்கு ஓர் ஆட்டுக்கடா ரேடியோ கேட்கின்றது."

— செய்தி

ரேடியோ விலிருந்து அந்த நேரத்தில் எழுகிற குரல் ஒற்றுமையின் காரணமாக இருக்க வேண்டும்!

* * *

"நாகையா தமிழ்ப் படத்தில் குருடராக நடித்து வருகிறார்."

— ஒரு பத்திரிகை

சில படாதிபதிகளிடமிருந்து அவருக்குக் கிடைக்கிற செக்கை பார்க்கும் பொழுது கண்களை மூடிக் கொண்டு நடிக்கவே தோன்றி யிருக்கும்!

* * *

டாக்டர் சுகர்ணோ பம்பாயில் நடிகர் தேவ் ஆனந்தைக் கண்டு விட்டு, 'நீங்கள் கவர்ச்சியான வாலிபர்' என்றாராம்.

— செய்தி

அப்பொழுது தேவ் ஆனந்த் சட்டென்று தன்னுடைய ஓட்டைப் பற்களை சுகர்ணோ பார்த்துவிடாமல் இருக்க மூடிக் கொண்டிருப்பார் என்பது நிச்சயம்!

பறை யறையும் ஒலிகேட்டதும் மூலைமுடுக்குகளி லிருந்து பொது மக்கள் அங்கு கூடி விட்டனர். கூட்டம் கூடி விட்டதைக் கவனித்த ராஜ சேவகன் அறிக்கையை வாசிக்கலானான். "இதன் மூலம் தென் பாண்டிய நாட்டுப் பேரரசர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருமல நாயக்க பூபதி அவர்கள் விடுக்கும் அறிக்கை. பாண்டிய நாட்டின் செங்கோலைச் செம்மையாய்ச் செலுத்தும் இறைவி மீனாட்சி அம்மையாருக்கு முத்து அங்கியும், முத்து ஆபரணங்களும் செய்யும் கைங்கரியத்திற்காக ஏராளமான முத்துக்கள் வேண்டியிருப்பதால், இவ்வாண்டு திருமந்திர நகரில் நடைபெற விருக்கும் முத்துச் சலாபத்தில் கிடைக்கும் முத்துச் சிப்பிகள் அனைத்தையும் பாண்டி நாட்டு அரசாங்கப் பிரதிநிதிகளிடம் சேர்ப்பித்துத் தக்க சன்மானம் பெற்றுக்கொள்ளலாம். இதன்படி மீனவர்கள் எல்லோரும் குளித்தெடுக்கும் முத்துச்சிப்பிகளை அரசாங்கத்தாரிடம் சேர்க்கக் கடமைப் பட்டவர்கள்."

அறிக்கையை ராஜசேவகன் படித்து முடித்ததும் மீண்டும் பறையறையும் சத்தம் ஒலித்தது. மக்கள் கலைந்து போனார்கள். இந்த அறிக்கை மீனவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. தாம் குளித்தெடுக்கும் சிப்பிகளைச் சலாபத் துறையில் காத்திருந்து விற்க வேண்டிய அவசியமும் இல்லை. அத்துடன் அரசாங்கத்தாரே வாங்கிக் கொள்வதால் நல்ல ஊதியம் கிடைக்கு மென்றும் உணர்ந்தனர்.

சலாபம் ஆரம்பமாயிற்று. ஆயிரக் கணக்கான மீனவர்கள் முத்துக் குளித்தலில் ஈடுபட்டனர்,

நிபந்தனைக் கிணங்க முத்துச் சிப்பிகளை அரசாங்கத்தாரிடமே தந்து விட்டு குஷியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தனர் மீனவர். அங்கயற்கண்ணியின் திருமேனியை அழகு படுத்தாத முத்துக்கள்



சிப்பிக்குள் பதிந்து பாறையை ஒட்டிக் கொண்டிருப்பதில் என்ன பயன் என்று சிப்பிகள் நினைத்தனவோ என்னவோ, வழக்கத்திற்கு மாறாக மூன்று பங்கு அதிகமாகவே சிப்பிகள் கிடைக்கலாயின.

அன்று கட்டித்திருக்கைப் பாரில் குளியோடிகள் கடலில் குதித்துச் சிப்பிகளைச் சேகரித்துக் கொண்டிருக்கும் பொழுது அங்கு ஒரு பரபரப்பான சம்பவம் நடந்து விட்டது. குளியாட்களில் ஒரு வாலிபனைக் காணவில்லை. மூச்சு அடக்க முடியாமல் கடலுக்குள் மூழ்கி விட்டானோ என்ற ஐயம் ஏற்பட்டது. சில குளியாட்களும், 'தோடையன்' களும் கடலுக்குள் குதித்துத் தேடினார்கள். வெகு நேரம் தேடியும், காணாமல் போன குளியோடியின் பிரேதத்தை அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை ஒரு வேளை ராட்சஸ சுறாமீனுக்கு இரையாகியிருக்கலாமெனத் தீர்மானித்தார்கள். படகுகள் கரையை நோக்கிப் புறப்பட்டன.

சூரியன் அஸ்தமனமாகி விட்டான். சிறுகச் சிறுக இருள் பரவத் தொடங்கியது. இரு ராஜசேவகர்கள், அலைகள் மோதாத தூத்துக்குடிக் கடலை அதிசயத்தோடு பார்த்துக் கொண்டிருந்த போது, உண்மையிலேயே ஆங்கோர் அதிசயம் காணப்பட்டது. சற்று தூரத்தில் அலைகளில் நீந்திவரும் ஆளைப்பார்த்தனர். அவன் கரையை அடைந்ததும், காவலாளிகள் அவனிடம் பல கேள்விகளைக் கேட்டனர். முத்துக்குளிக்கும் போது காணாமல் போன வலிபன் அவன் தான் என்று தெரிந்து அவர்கள் ஆச்சரியத்தில் மூழ்கினார்கள். இதற்குள் சிறு கூட்டம் கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. இதைக் கவனித்த வலிபன், "தாத்தா!" என்று ஆர்வத்தோடு கூட்டத்தை நோக்கிப் பாய்ந்தான். கூட்டத்திலிருந்த ஒரு பெரியவர் ஆவலோடு போனைத் தழுவிக்கொண்டு "மாசிலாமணி! இவர்கள் என்னென்ன சொல்லி பயமுறுத்தி விட்டார்கள் தெரியுமா?" என்றார்.

"தாத்தா! நீங்களும் இவர்கள் பேச்சை நம்பிவிட்டீர்களா?"

"இல்லை இல்லை, உன் திறமையை நன்கறிந்தநான் இவர்கள் கூற்றை நம்பவில்லை. ஆனால் உன் தாயாரோ? கணவனை இழந்து உன்னையே நம்பிவாழும்



சதர்ன் மூவிஸ் "மாய மனிதனி"ல் சந்திரகாந்தாவுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

அவளைப்பற்றி நான் என்ன சொல்ல முடியும்? பெற்ற தாய் உள்ளத்து உணர்ச்சியை சொற்களால் எங்ஙனம் உரைப்பேன்? ஆமாம நடந்ததென்ன?

"நடந்தவற்றைச் சொல்லுமுன், என் அதிர்ஷ்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். பல நாட்களாக நான் கண்டுகொண்டிருந்த கனவு நினைவாகப் போகிறது! இதோ பாருங்கள்!" என்று சொல்லிக்கொண்டே தன் மடியிலுள்ள பொருளை எடுத்தான்.

"மீனுக்கு இரையாகிவிட்டதாக தாம் நம்பியிருந்த நபர் மீண்டும் வந்ததுமல்லாமல் அதிர்ஷ்ட தேவதையோடல்லவா வந்திருக்கிறான்?" என்று அதிசயித்த எல்லோரும், "ஆ! வலம்புரிச் சங்கா?" என்று வியப்போடு ஏக காலத்தில் கூறினர்கள். பெரியவரும் ஆச்சரியத்தோடு, "இதென்ன? சிப்பி குளிக்கும் இடத்தில் வலம்புரிச் சங்கு கிடைத்ததா? உன் நெடுநாளைய விருப்பம் நிறைவேறி விட்டதல்லவா?" என்றார்.

"அவ்வளவு எளிதில் என் விருப்பம் நிறைவேறி விட்டதாகச் சொல்ல முடியாது. இந்த வலம்புரிச் சங்கில் முத்துக் கிடைத்தால்தான் என் கனவு நினைவாகும்."

தாத்தாவும், பேரனும் பேசிக் கொண்டது மற்றவர்களுக்குப் புரியவில்லை. எல்லோரும் சங்கு கிடைத்த விதமும், அவன் மீண்டுவந்த விதத்தையும் சொல்லும்படி வற்புறுத்தினர். மாசிலாமணி தன் தாத்தாவை நோக்கி சொல்லலானான்.

"நான் மூச்சடக்கிக் கடலுக்குள் மூழ்கியதும் படுகைகளிலிருந்து சிப்பிகளை எடுத்து பையில் போட்டுக் கொண்டிருக்கும் போது படுகையின் அருகில் வெண்மையான ஒரு பொருள் பளிச்சென்று தெரிந்தது. அதன் அமைப்பும், பிரகாசமும் என்னைப் பிரமிக்கச் செய்தன. நான் அதைத் தாவி எடுத்துக்கொண்ட மகிழ்ச்சியில் என் உள்ளத்தில் விவரிக்க முடியாத எண்ணங்கள் தோன்றின. அப்போது என்னை நோக்கி ஒரு பாறையே நகர்ந்து வருவதுபோல் தெரிந்தது. நிலைமையை உணர்ந்த நான் கையில் கிடைத்த பொருளை உறுதியாகப் பிடித்துக் கொண்டே உன்னியபடி நீர் மட்டத்திற்கு மேல் வந்து மூச்சுவிட்டுப் பின்னல் பார்க்கும்போது, அந்த ராட்சஸசுறுமீன் என்னைத் துரத்திக்கொண்டு வருவது தெரிந்தது. படகுகளுக்கும், எனக்கும் நடுவில் மீன் இருந்ததால் படகுகளின் பக்கம் செல்ல முடியவில்லை. கையில் இறுகப் பிடித்த பிடியுடனேயே நீந்திக் கொண்டு முன்னேறினேன். மீன் தன் பேய் வாயைத் திறந்தவாறே என்னைக் கவ்விக்கொள்ளத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. அவ்வளவு வேகம் எங்கிருந்துதான் வந்ததோ தெரியவில்லை அதன் பிடிக்குச் சிக்காமல் நான் முன்னேறுவதைக் கண்ட மீன் ஆக்ரோஷத்தோடு துடுப்புப்போன்ற தன் இறகுகளை வேகமாக அடித்துக் கொண்டு வருவதை தண்ணீரின் அசைவால் கண்டு கொண்ட நான் உயிர்மேலுள்ள ஆசையில் நீந்திக்கொண்டே முன்னேறினேன். எவ்வளவு நேரம் தான் அப்படி நீந்தியிருப்பேனே தெரியவில்லை. எப்படியோ அந்த ராட்சஸ மீனுக்கு இரையாகாமல் முயல் தீவை அடைந்தேன்.

"நிலத்தை அடைந்து நீர்பரப்பைப் பார்த்துப் பெருமூச்சு விட்டேன். பின்

என் கையிலிருக்கும் பொருளைப் பார்க்கும்போது, நான் பட்ட சிரமமும் பீதியும் ஒரு நொடியில் மறைந்தன. என்னைத் தேடுவார்களென்று தெரியும். தீவின் பக்கமாய் படகுகள் போகும் போது சமிக்ஞை செய்து தோணிகளை அழைக்கலாமென்று நினைத்துச் சற்று அயர்ந்தேன்.

நான் விழித்துப் பார்க்கும் போது படகுகள் கரையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. தீவிலிருந்து கொண்டு நான் எவ்வளவு கத்தியும் படகிலுள்ளவர்களுக்குக் கேட்கவில்லை. மனத்தை திடப்படுத்திக் கொண்டு, அரை காத வழியும் நீந்திக்கொண்டே வந்துவிட்டேன். மாசிலாமணி சொன்னதைக் கேட்ட எல்லோரும் பிரமித்து விட்டனர்.

மீனுக்கு இரையானதாகக் கூறப்பட்ட மகன் மீண்டும் உயிர்பெற்று வந்ததைக் கண்ட அந்தத் தாயின் உள்ளம் ஆனந்தத்தில் விம்மியது. வீட்டு வாசலில் முதன் முதல் மாசிலாமணியை வறவேற்ற கயல்விழியாள் பொன்னிதான். தன் அத்தானைப் பார்த்து, இழந்துவிட்ட இன்பத்தை மீண்டும் பெற்றதன் பூரிப்பில் அவள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்தன.

சிலசமயங்களில் மனிதன் நினைப்பது போல் எதுவும் எளிதில் நடப்பதில்லை. ஆனால் சிற்சில சமயங்களில் மனிதன் காணும் கனவுகளை அப்படியே நினைவாக்குவதிலும் இயற்கையின் சக்திக்கு ஈடே யில்லையென நினைக்கும்போது மாசிலாமணியின் மனக்கண் முன் கடந்த கால சம்பவம் தோன்றலாயிற்று. அன்றொரு நாள்...

"மாசறு பொன்னே மலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும் பெறல் டாவாய்...... ''

என்று பெரியவர் பாடிக்கொண்டிருக்கும்போதே இடையில், "தாத்தா ஒரு சந்தேகம்!" என்றான் பேரன்.

நீங்கள் விரும்புவதை அடையுங்கள்

மாய மோதிரம்

இந்த மாய மோதிரத்தை அணிபவர் யாராயினும் சரி, அவர்கள் காதலில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். எவ்வளவு கடின இதயம் படைத்தவரானாலும், அல்லது தொலை தூரத்தில் இருந்தாலும் அவனோ அல்லது அவளோ உங்களிடம் உடனே வருவார். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை அகற்றி அவனோ அல்லது அவளோ உங்களுக்கு பணிந்து நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவைகளைப் பெறலாம். நீங்கள் விரும்பும் ஆணையோ அல்லது பெண்ணையோ மணந்து அஷ்ட ஐசுவரியத்தில் உங்கள் குழந்தைகளுடன் குதூகலமாக வாழ்க்கையை நடத்தலாம். உங்கள் பரீட்சை, வியாஜ்யம், வியாபாரம் எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். உங்கள் பக்கம் அதிர்ஷ்டம் திரும்பி நீங்கள் பாக்கியசாலியாவீர்கள். நீங்கள் விரும்பியதெல்லாம் அடைந்து வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1-94. எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ. 3-94. இது அபூர்வ சக்தியுடையது. இது மிக்க புனிதமான தினத்தில் தயாரிக்கப்படுகிறது. திருப்தியில்லையேல் பணம் வாபஸ். ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைத் திருப்திபடுத்தும்.

Principal, **BENGAL MESMERISM HOUSE**
(R-1) HOSHIARPUR, (Pb)

" ஒரு தேங்காய் மூடி நாலணுவா ? அடே அடே அப்பா, ஆச்சர்யமாயிக்கே !

" இதுலே என்னங்க ஆச்சர்யம் இருக்கு உங்களுக்கு எப்படிங்க விலே தெரிஞ் சிருக்க முடியும் ? "

" என்ன சந்தேகம் ? " என்ற குறிப் போடு பேரனைப் பார்த்தார் பெரியவர்.

" மாசறு பொன்னே வலம்புரி முத்தே என்று பாடினீர்களே ? வலம்புரிமுத்து என்றால் என்ன ? அப்படி ஒரு முத்து இருக்கிறதா?"

பெரியவர் ஓலைச் சுவடியை பாயின் மேல் வைத்துவிட்டு, " ஆமாம் வலம்புரி முத்து இருக்கிறது ! " என்ருர்.

" நீங்கள் பார்த்திருக்கிறீர்களா ? "

" நான் பார்க்கவில்லே, கேள்விப்பட் டிருக்கிறேன்."

" என்ன தாத்தா ! ஐம்பது ஆண்டுக ளுக்கு மேலாக நீங்கள், முத்துக் குளித்தல் – சங்குகுளித்தல் போன்ற துறைகளில் அனுபவம் பெற்றும் வலம் புரி முத்தைப் பார்க்கவே இல்லேயா ? "

" அப்பா ! அது சாதாரணமாகச் சிப்பிக்குள் கிடைக்கும் முத்தல்ல ! வலம்புரிச் சங்கு எவ்வளவு அபூர்வமாய் கிடைக்கிற தென்பதை அறிவாயல்ல வா?வலம்புரிச்சங்கில் கிடைக்கும்முத்து தான் வலம்புரி முத்து. வலம்புரிச்சங்கு கிடைப்பதே அரிது அப்படிக் கிடைத் தாலும் எல்லா வலம்புரிச் சங்குகளிலும் முத்துக் கிடைப்பதில்லே. ஆயிரத்தில் ஒன்று. "

" நீங்கள் சொல்வது புதிராக இருக்கிறதே ? நான் நம்பவில்லே. சங்கிலாவது, முத்து கிடைப்பதாவது ?"

" இல்லேயப்பா ! உண்மைதான். என் முன்னேர்கள் இதைப்பற்றிச் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன், என் பேச்சை நம்பவேண்டாம். ஆனல் இந்தப் பாட்டைப் பாடியிருக்கிருரே இளங்கோவடிகள், அந்தப் புலவர் பெருமான் பொருள் இல்லாததை வைத்து வீணைப் பாடியிருப்பாரா என்ன ? "

பெரியவர் சொன்னதற்குப் பேரனல் பதில் ஒன்றும் கூறமுடிய வில்லே. எதிரில் பிரகாசமாய் எரியும் குத்து விளக்கைப் பார்த்துக்கொண்டே பெருமூச்சு விட்டான் அவன். சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த ஜோதி ஒரு கணம் பெருமூச்சின் அசை வால் நிலேகுலேந்து மறுகணம் சமா ளித்துக்கொண்டு எரியலாயிற்று.

" தாத்தா இது உண்மையானல்,... "

" ஏன் தயங்குகிருய் ? சொல் ! "

" என்ருவது ஒரு நான் குளித் தெடுக்கும் சங்குகளில் வலம்புரிச் சங்கு கிடைத்தால், சோதித்துப் பார்க்க வேண்டும். "

பெரியவர் சிரித்துக்கொண்டே, வலம்புரிச் சங்கு கிடைப்பதே அபூர்வம் ! அப்படியிருக்க உனக்குக் கிடைக்கும் வலம்புரிச் சங்கில் முத்து இருக்கவேண்டுமல்லவா ? " என்ருர்.

" ஏன் சிரிக்கிறீர்கள் தாத்தா ? நீங்கள் சொன்னது உண்மையானல் கட்டாயம் கிடைக்கும் ! "

" சரி. உன் மன உறுதிக்கு மகிழ்ச்சி அடைகிறேன். கடவுள் அருளால் உனக்குக் கிடைக்கட்டும் " என்று கூறி விட்டு ஓலேச்சுவடியைப் பிரித்து மேலே படிக்கலானுர் பெரியவர். பேரன் வலம் புரிமுத்தை நினேத்துக் கனவு காணலானன்.

" என்ன மாசிலாமணி ! யோசனே பலமா யிருக்கிறதே ! " என்ற தாத்தா வின் குரல் அவனே உலுக்கியது.

ஒன்றுமில்லே தாத்தா ! அன்று நீங்கள் சிலப்பதிகாரப் பாடலேப் பாடினீர்களே

அந்த சம்பவம் நினைவுக்கு வந்தது!" என்ருன். "உன் கனவு பலித்து விட்டது! ஐம்பதாண்டுகள் ஆழ்ந்த கடலில் ஆயிரமாயிரம் முங்குகள் முங்கி சங்குகளையும், சிப்பிகளையும் குளித்தெடுத்திருக்கிறேன். ஆனல் வலம்புரிச் சங்கு எனக்குக் கிடைக்கவில்லை. மூன்று தலைமுறைகளுக்கு முன் என் தாத்தாவுக்கு அபூர்வமான வலம்புரிச்சங்கு கிடைத்தது. அதன் பின்னர் உனக்கு வலம்புரிச் சங்கு மட்டுமல்ல, சுண்டைக்காய் அள்வில் நிலா ஒளியைப் பழிக்கும் காந்தியுடன் வலம்புரி முத்தும் கிடைத்திருக்கிறது. நீ பெரும் பாக்கியசாலி. புனிதமான இந்த வலம்புரிச் சங்கும், முத்தும் கோயிலுக்கே உரியன. இவற்றை நாயக்க மன்னரிடமே சேர்ப்பிக்கவேண்டும்!"

"தாத்தா! நீங்கள் சொல்வதுபோல் சங்கை மன்னரிடம் கொடுத்து விடுகிறேன். ஆனல் வலம்புரி முத்து மட்டும் என்னிடமே இருக்கவேண்டும்.

"அப்பா! அபூர்வமாக இயற்கை அளிக்கும் செல்வங்களை தெய்வத்திற்கு உரியனவாக்கி வழிபடுவது தான் நம் முன்னேர்களின் வழக்கம். அதன்படி நீ இவ்விரண்டு பொருள்களையும் மீனவர்களின் குலதெய்வமான அங்கயற் கண்ணிக்கே அளித்து விட வேண்டும்" என்ருர் பெரியவர்.

மாசிலாமணி, முத்தை இறைவிக்குக் கொடுக்க இசையவில்லை. பேரனின் பிடிவாதத்தை அறிந்த பெரியவர் வாளாவிருந்து விட்டார்.

வலம்புரிச் சங்கு கிடைத்தநேரம் நல்லதோ கெட்டதோ தெரியவில்லை. ஆனல் மதுரைஅரசரின் கட்டளையைமீறியதற்காக மாசிலாமணி சிறை பிடிக்கப்பட்டு மதுரைக்குக் கொண்டு செல்லப்பட்டான்.

அரங்கமஹாலின் அரியாசனத்தில் நாயக்க பேரரசர் திருமலை மன்னர் கம்பீரமாய் வீற்றிருந்தார். சபையோர் அவரவர் ஆசனங்களில் அமர்ந்திருந்

எம். ஜி. ராமச்சந்திரன் உமது கூழைக் கும்பிடெல்லாம் செல்லாது இந்த ஈ. வி. சரோஜா'விடம் —பாரத் புரொடக்ஷன்ஸ் "விக்ரமாதித்தனில"

தனர். அவையின் முன் மாசிலாமணி குற்றவாளியாக நிறுத்தப் பட்டிருந்தான்.

"மீனவனே! இவ்வாண்டு கடலில் குளித்தெடுக்கும் முத்துக்கள் அனைத்தையும் அரசாங்கத்தாருக்கே சேர்ப்பித்து விட்டு உரிய சன்மானத்தைப் பெற்றுக் கொள்ளும்படி விடுத்த எங்கள் அறிக்கையை நீ அறியவில்லையா?" என்று வினவினர் மன்னர்.

"மன்னவரின் கட்டளையை நான் நன்கு அறிவேன். அதன்படியே நான் குளித்தெடுத்த முத்துச்சிப்பிகளை அரசாங்கத்தாரிடம் சமர்ப்பித்திருக்கிறேன் அத்துடன் எதிர்பாரா வண்ணம் எனக்குக் கிடைத்த வலம்புரிச்சங்கையும் ஒப்படைத்துள்ளேன். சங்கில் கிடைக்கப் பெற்ற வலம்புரி முத்தை மட்டும் நான் வைத்துக் கொள்ள விரும்புகிறேன். அது எனக்கு எளிதில் கிடைத்து விடவில்லை. ஆழ்கடலில் என்னைக் கொல்லவந்த சுரு மீனிடமிருந்து தப்ப நான் எவ்வாறு சிரமப்பட்டேன் என்பது விவரிக்க இயலாது. உயிரைத் திரணமாக மதித்துக் கிடைத்த சங்கை நழுவ விடாமல் நீந்திக் கொண்டே சென்று மீனிடமிருந்து உயிர் தப்பினேன். அவ்வளவு சிரமத்துடன் நான் பெற்ற சங்சில் கிடைத்த முத்தை நான் வைத்துக் கொள்வது தவறு?" என்றான் அவன்.

"தற்போது குளித்தெடுக்கும் முத்துக்கள் தேவி மீனாட்சியம்மைக்கே அர்பணிக்க உத்தேசித்துள்ளோம். ஆகையால் தேவியின் அருளால் கிடைத்த வலம்புரி முத்தை நீ கொடுத்து விட வேண்டியது நியாயம். உன் சிரமத்திற்குத் தக்க சன்மானம் அளிக்கப்படும்!"

"இல்லை மகாராஜா, நான் பொருளை விரும்பவில்லை. நான் குளித்தெடுத்த முத்தை எனக்கே உரியதாக்க வேண்டுகிறேன்!"

"நாயக்க பூபதி! புறச்சமயத்தைச் சார்ந்த இவன் மீனும்பிகைக்குத் தரச் சம்மதிக்கவில்லை. இவன் அந்த முத்தைப் போர்சுகீஸிய வியாபாரிக்கு விற்க வேண்டுமென்று முயற்சிக்கிறான்!" என்று கோபத்தோடு அவனைப் பார்த்துக் கொண்டே கூறினார் தளபதி.

“பாடிய மன்னா! தளபதி கூறுவது உண்மையல்ல. நாங்கள் தற்போது பிற மதத்தைத் தழுவியவர்களாயினும் முன்னம் இந்து மதத்தைச் சார்ந்தவர்களே! எங்கள் முன்னோர்களின் குல தெய்வம் மீனாட்சிதான். முகத்தைக் கொடுக்க மறுத்ததற்குக் காரணம் முந்தைய மதத்தை அவமதித்ததல்ல. வலம்புரி முத்தைப் பற்றி நான் கனவு கண்டு கொண்டிருக்கும் போதே, அதிர்ஷ்டவசத்தில் எனக்கு வலம்புரி முத்துக் கிடைத்தால் அதை என் இஷ்ட தெய்வத்திற்கு அளிக்கத் தீர்மானம் செய்திருந்தேன். அப்போது தங்கள் நிபந்தனையும் கிடையாது.”

“இளைஞனே! மீனவர்களின் குல தெய்வம் மீனம்பிகை யென்றும், மதத் துவேஷம் கிடையாதென்றும் ஒத்துக் கொண்டாய். உன் இஷ்ட தெய்வம் யார்? ஆனால் முத்தை வெளி நாட்டாருக்கு விற்கத் துணிந்தால் அது மன்னிக்க முடியாத குற்றம்!”

“அயல் நாட்டு வியாபாரி அதிகப்பணம் தருவதாகவும் அந்த முத்தைத் தமக்கே விற்கும்படியும் கேட்டார். ஆனால் நான் மறுத்து விட்டேன். என் அத்தை மகளும், என் அன்புக்குப் பாத்திரமானவளுமாகிய காதல் தெய்வம் பொன்னிக்கு அதை என் அன்புக் காணிக்கையாகச் சமர்பிக்க உத்தேசித்திருக்கிறேன். என் ஆசையை மன்னித்து, உரிமையை வழங்கும்படி மன்னரவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்!”

“பிரபு! வலம்புரி முத்தைப்பற்றி நான் ஒன்று கூற விரும்புகிறேன். ஆயிரம் வலம்புரி சங்குகள் புடை சூழ வாழும் சலஞ்சலம் எனப்படும் வலம்புரிச் சங்கில்தான் வலம்புரி முத்து கிடைக்கும். கிடைத்தற்கரிய இந்த வலம்புரி முத்து சர்வ லட்சணங்களும் பொருந்தியதாய்ப் பிரகாசிக்கிறது. சங்கும், முத்தும் மலையத்துவசன் செல்வக் குமரிக்கே உரியன. சங்கில் பிறந்த முத்தை அதனின்று வேறு படுத்தல் இயற்கைக்கு மாறானசெயல். வலம்புரிமுத்தை வைத்து மீனம்பிகைக்கு ஆபரணம் செய்து அணிவிக்க வேண்டும். தேவிக்கு அபிஷேகம் செய்யும்போது வலம்புரி சங்கிலுள்ள தீர்த்தம் வலம்புரி முத்தின் மேல் படும். இந்த வகையில் அவை இணை பிரியாமல் இருப்பது மரபு. சங்கிடமிருந்து முத்தைத் தனியாக்க முயற்சித்தால் இன்னல்கள் நேரும். என்றார் அவை பத்தர்.

“மீனவனே! உன் உரிமையை நான் மறிக்கவில்லை. நீ உன் காதலிக்கு அளிப்பதையும் தடுக்க விரும்பவில்லை. ஆனால் நம் அவை ஆச்சாரியார் கூறிய வற்றையும் கேட்டாயல்லவா? இந்தப் பொருள் இறைவிக்கே உரியது என்கிறார். அந்த நியதியை மீறினால் சங்கடங்கள் வருமென்றும் செல்லி விட்டார். உன் விருப்பம் என்ன?”

“என்ன விதமான சங்கடங்கள் வந்தாலும் அதை நான் சந்தோஷத்துடன் ஏற்பேன். என் காதல் தெய்வத்திற்கு உரிய பொருளை என்னிடமே கொடுத்து விடுங்கள்!” மன உறுதியுடன் கூறினான் மாசிலாமணி.

“வாலிபனே! நீ உன் காதலிமேல் கொண்டிருக்கும் பேரன்புக்கு அகமகிழ்கிறோம். இதோ இந்த வலம்புரிமுத்துடன் நான்தரும் மணிமாலையையும் கொண்டுசெல். இதை உன் மனையாட்டிக்கு மணப் பரிசாக வழங்குகிறேன். உங்கள் காதல் என்றென்றும் நிலைத்து நிற்கட்டும்!”

மனோகரமான மாலை மஞ்சல் வெய்யிலில் இளம் காதலர்களான பொன்னியும், மாசிலாமணியும் சிறு படகில் உல்லாசமாய்க் கடலில் மிதந்துக்கொண்டிருந்தார்கள்.

சிவந்த காது மடலில் அணிந்திருந்த உருக்குமணிகள் தென்றலில் ஊசலாட, செந்தாமரையில் மொய்க்கும் கருவண்டுகளைப் போல் கண் மலர்கள் சுழல, முல்லை விரித்தாற் போல் நகை மலர தன் எதிரில் வீற்றிருக்கும் பொன்னியின் அழகைப் பருகியவாறே துடுப்பை வலித்துக் கொண்டிருந்தான் மாசிலாமணி.

“மச்சான், நீங்கள் செய்தது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை.”

“ஏன்? என்ன செய்துவிட்டேன் பொன்னி?”

“அது தான்! வலம்புரி முத்தை மன்னருக்கு ஏன் கொடுக்கவில்லை?”

“என் இதய ராணிக்குக் கொடுப்பதற்காகத்தானே! பொன்னி நம் திரு மண நிச்சயதார்த்தத் தன்று வலம்புரி

முத்து உன் பொன்னிற மேனியை அலங்கரிக்கப் போகிறது.''

''தெய்வத்துக்குக் கொடுக்காமல்...'' பொன்னி கூறி முடிக்கு முன்னரே, ''என் காதல் தெய்வத்திற்குத்தானே காணிக்கையாகத் தரப்போகிறேன். பார் பொன்னி, கோவலன் தன் காதலி கண்ணகியை, 'மாசறு பொன்னே வலம்புரி முத்தே!'' என்றெல்லாம் பாடியிருக்கிருர். நானே என் மாசற்ற பொன்னிக்காக வலம்புரி முத்தையே குளித்துக்கொண்டு வந்திருக்கிறேன். என் அன்பை நீ இன்னும் புரிந்து கொள்ளவில்லையா?'' என்று அன்பு ததும்பக் கூறினன் மாசிலாமணி.

''புரியாமல் இல்லே, வெண்மையான வலம்புரி முத்தைவிட தூய்மையான உங்கள் அன்பைத்தான் நான் வேண்டுகிறேன்!''

அவ்விருவரும் தம்மை மறந்து ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே மெய்ம் மறந்த நிலையில் இருக்கும் போது, வானத்தில் பளிச்சென்று வேகமாய் ஒரு மின்னல் பாய்ந்தது. அதைத் தொடர்ந்து அண்டமே அதிரும்படியான இடி இடித்தது. பதறிப் போன பொன்னி பீதியோடு, ''மச்சான், பயமாயிருக்கிறதே!'' என்ருள்.

மருண்மான் விழியாளே நோக்கி, ''பொன்னி பயப்படாதே! மேகங்கள் திரண்டு வருகின்றன. இதோ படகைக் கரைப் பக்கம் திருப்பி விடுகிறேன்'' என்ருன் மாசிலாமணி.

இவ்வளவு நேரம் இன்பக் கடலில் மிதந்து கொண்டிருந்த அவ்விருவரும் தம் சுற்றிலுமுள்ள சூழ்நிலையைக் கவனிக்கவில்லே. மேன் மேலும் இடியும் மின்னலும், காற்றும் அதிகரிக்கத் தொடங்கின. வானத்தைத் தொடும் படியாக உயரே கிளம்பி வந்த ஒரு பேரலே படகை ஒரு ஆட்டு ஆட்டிச் சுழல வைத்தது.

''ஐயோ மச்சான்!'' என்று கூவிய வாறே, கடலில் அமிழுந்தாள் பொன்னி.

''பொன்னி! பதராதே! இதோ வந்து விட்டேன்!'' என அபயக் விரல் கொடுத்தவாறே தான் காதலியின் திசையை நோக்கி நீந்திக்கொண்டு சென்ருன் மாசிலாமணி.

வெகு சிரமத்துடன் நினைவிழந்த நிலையிலிருந்த பொன்னியை வீட்டிற்குச் சேர்த்தான் மாசிலாமணி. தன் காதலி பிழைத்துக்கொள்ள வேண்டுமென்று தவியாய்த் தவித்தான். அவன் வைத்தியராலும் கைவிடப்பட்ட பொன்னி நள்ளிரவுக்கு மேல் சுய நினைவை அடைந்தாள். அவன் இதயக் கடலில் வீசிக் கொண்டிருந்த புயலும் தணிந்தது.

பொனனி பழைய நிலையை அடைந்ததும் மாசிலாமணி தன் தாத்தாவிடம், ''தாத்தா! பொன்னி நல்ல குணம் அடைந்து விட்டாள். நான் நாளேயே மதுரைக்குப் போய் அரசரைக் காண வேண்டும்!'' என்ருன்.

''மதுரைக்கா?

''வலம்புரிமுத்தை மீனுட்சிதேவிக்கே உரியதாக்கப் போகிறேன்.''

''மச்சான்! நிஜமாகவா? நீங்கள் சொல்வது உண்மை தானு? என்னுல் நம்ப முடியவில்லேயே'' என்று வியப்போடு கூறினுள் பொன்னி.

''உண்மைதான் பொன்னி. அன்று நீ கடல் அலேகளின் சுழற்சியில் சிக்குண்ட போது நான் மீனுட்சி தேவியை நினைத்துப் பிரார்த்தனே செய்துகொண்டேன், அதன்படி மீனுட்சி தேவிக்கே........''

''என்ன? என்ன? நீங்களும் என்னைப் போலவே பிரார்த்தனே செய்து கொண்டீர்களா? படகு தலேகுப்புறக் கவிழ்ந்ததும், 'மீனவர்களின் குலதெய்வமாகிய மீனுட்சி தேவி! என் மச்சானே எப்படியும் நல்ல விதமாய்க் கரையைச் சேர்த்துவிடு. அந்த வலம்புரி முத்தை உன் பாத காணிக்கையாய்ச் சமர்ப்பித்து விடுகிறேன்' என்று நானும் வேண்டிக்கொண்டேன்!'' மகிழ்ச்சியும், திகைப்பும் மேலிடக் கூறினுள் பொன்னி.

''என்ன ஆச்சரியம்! நாம் இருவரும் ஒரே சமயத்தில் ஒருவரையொருவர் அறியாமலே ஒரே விதமாய்ப் பிரார்த்துக் கொண்டுள்ளோம், இல்லேயா? அந்த வலம்புரி முத்தைவிட உன் உயிர்தான் எனக்குப் பெரிசு உன் உயிரைக் காப்பாற்றி என்னிடம் தந்த அங்கயற்கண்ணி இறைவிக்கே வலம்புரி முத்து சொந்தம்!'

மாசிலாமணி இப்படிக்கூறிமுடித்ததும் பெரியவர், ''நாம் எல்லோருமே நாளே மதுரைக்குப் புறப்படுவோம். தேவியின் சந்நதிக்கு முத்தைச் சமர்ப்பித்து குட்டு திருமலே நாயக்க மன்னர் ஆசியுடன் உங்களிருவருக்கும் திருமணம் முடித்து வைக்கிறேன்!'' என்று பெருமிதத்துடன் கூறினர்.



வாழ்க்கை(ச்)சித்திரம்!
அமைப்பு குண்டூசிக் குழு
சித்திரம் முத்து
உதக மண்டலத்தில் ஒரு நாள் ஒரு டீ கடையில் முஸ்லிம் ஒருவர் நுழைந்தார்
டீ அருந்திக்கொண்டிருந்த அந்த முஸ்லிமிடம், எம். நாராயணன் என்ற பையன்
' சார், ரொம்பக் கஷ்டமாக இருக்கு! மாமாவுக்கும் என்னால் கஷ்டம்!'
முஸ்லிம்: உன் அழகுக்கு நீ நாடகக் கம்பெனியில் சேரலாம். உன்னை நவாப் ராஜமாணிக்கம் நாடகக் கம்பெனியில் சேர்க்க உன்னுடைய மாமாவிடம் சிபாரசு செய்கிறேன்!
எம். நாராயணன் நவாப் கம்பெனியில் சேர்க்கப் பட்டான். ஆனால் முக்கியமான வேடம் தரப்படவில்லை மனம் வருந்தினான்.
மாமாவுக்கு
எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லை. நடிக்க

மாமாவுக்கு அந்தக் கடிதம் போய்ச்
சேரவில்லை! ஆனால் மாமாவிட
மிருந்து பதில் வரும் என்று எதிர்பார்
த்து ஏங்கினான் நாராயணன்
ஏங்கித் தூங்கிக் கொண்
டிருந்த நாராயணனை
ஒரு கை தொட்டது!
திடுக்கிட்டு விழித்தான்... அந்தக்
கைக்குரிய நவாப் ராஜமாணிக்கம்
இந்தக் கம்பெனியில் பல நாராய
ணன்கள் இருப்பதால் உன்னை இன்
எம் என் நம்பியார் என்று
கூப்பிடப் போகிறேன்!
சரிங்க!
நம்பியார், நமது பக்த ராமதாஸ்
நாடகம் சினிமாப்பட மாகிறது
அதில் நீயும் நடிக்கலாம்.
உனக்குச் சில டயலாக்
கூட உண்டு!
நம்பியார் நடித்த முதல்
படம் "பக்தராமதாஸ்"
அதற்குக் கூலி
40 ரூ கிடை
த்தது! ஆகா,
என்ன மகிழ்ச்சி
நம்பியாருக்கு!
அத்துடன் கம்பெ
னியில் பல காமிக்
வேடங்கள் தரப்பட்
டன மாதச் சம்பள
மாக ரூ ஐந்து
கிடைத்தது!

ஆனால் நம்பியாருக்கு கட்டுப்பாடுடன் கம்பெனியில் இருக்க விருப்பமில்லை விலகி ஊருக்குப் போனதும் "சக்தி நாடக சபையிலிருந்து அழைப்பு வந்தது.
M.N.
சேர்ந்தார். கவியின் கனவு என்ற நாடகத்தில் ராஜகுரு என்ற வில்லன் வேடம் போட்டு வெற்றிகரமாக நடிக்க —
டைரக்டர் ஏ.எஸ்.ஏ சாமி கண்டார் ஜூபிடர் பிக்சர்ஸில் சேர்த்தார்.
விக்யா
M.N. நம்பியார
ஜூபிடரில் பல படங்கள் அவைகளில் "வேலைக்காரி" நம்பியாரை உயர்த்தியது.
பிரபல வில்லன் கண்களைச் சுழற்றினார். கத்திபிடித்தார்.
இன்று நம்பியார் நட்சத்திர வில்லனாக விளங்குகிறார்.

"என் வீட்டில் சில முக்கிய நண்பர்களுக்கு விருந்து ஒன்று அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்கள் அவசியம் வந்து அதில் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.'' இது போல் உங்களுக்கு ஒரு கடிதம் வரும். நீங்கள் கிடைககப் போகும் விருந்தை எண்ணி நாக்கைத் தீட்டிக் கொண்டு அன்றைய விருந்துக்குக் கிளம்பிப் போவீர்கள். ஆனால், அங்குதான் உங்களுக்கு எத்தகைய ஏமாற்றம் காத்திருக்கும் தெரியுமா?

உங்களை விருந்துக்கு வரும்படி அழைப்பு அனுப்பி யிருந்தாரே, அந்த நண்பரின் வீடு இழுத்துப் பூட்டப்பட்டிருக்கும். அக்கம் பக்கம் உள்ள வீடுகளில் விசாரித்துப் பார்த்தால் உங்கள் நண்பர்கள் தமது குடும்பத்தினருடன் சினிமாவுக்கோ—நாடகத்திற்கோ கிளம்பிப் போய் விட்ட உண்மை தெரிய வரும். ஏமாற்றம் அடைந்த உங்கள் மன நிலை எப்படி யிருக்கும்?

★ ★ ★

'நண்பர் சுகுமாரனின் உடல் நிலை மிக மோசமாகி விட்டது. அவர் உங்களைப் பார்க்கப் பெரிதும் விரும்புகிறார்." இப்படியாக உங்கள் நண்பர் ஒருவரைப் பற்றி வேறு ஒரு நண்பரிடமிருந்து உங்களுக்குக் கடிதம் வரும். நீங்கள் பரபரப்புடன் நோயாளி சுகுமாரைக் காண விரைந்து செல்வீர்கள். ஆனால், அங்கு போனதும் திகைத்து நிற்பீர்கள். உங்கள் நண்பர் சுகுமாரன் கல்லு குண்டாக இருப்பார். ''எங்கு வந்தாய்?'' என்று கேட்பார். பொய்யாக உங்களுக்குக் கடிதம் எழுதிய நண்பர் மீது உங்களுக்கு ஒரேடியாகக் கோபம் ஏற்படுவது இயற்கை மேற்கண்ட இரு கடிதங்களும் உங்களுக்குக் கிடைத்தது, நீங்கள் ஏமாற்றத்திற்கு ஆளானது, சாதாரண நாளாக இருக்தால் கடிதம் எழுதிய நண்பர்கள் இருக்கும் இடம் தேடிப் போய் அவர்களை ஒரு கை பார்க்கத் தவற மாட்டீர்கள்.

ஆனால், அதே நிகழ்ச்சிகள் நடந்தது ஏப்ரல் மாதம் முதல் தேதி என்றால் உங்கள் கோபம் வந்த இடம் தெரியாது அடங்கி விடும். உங்கள் முட்டாள் தனத்தை எண்ணி அசடு வழிவீர்கள். உங்களது நண்பரின் செய்கையை எண்ணி வியப்பீர்கள். இந்த மாதிரி ஒருவரை மற்றவர் பல விதங்களிலும் ஏமாற்றும் உரிமை 'முட்டாள் தினம்' என்ற அன்று மட்டும் யாருக்கும் உண்டு.

★ ★ ★

இவைகளை யெல்லாம் நான் ஏன் நான்சொல்லவந்தேன் என்று நீங்கள்யோசிக்கலாம் இ படிட்பட ட 'முட்டாள் தின' ஆதிக்கம் வெளி வட்டாரங்களைப் போலவே, பட உலகிலும் இடம் பெற்றிருப்பதை விளக்கத்தான்!

முக்கியமாக பத்திரிகாசிரியர்கள்-விமர்சகர்கள்–ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இந்த 'முட்டாள் தினம்' போன்ற ஏமாற்றத்திற்கு ஆளாகி யிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏப்ரல் மாதம் முதல் தேதி அன்றே இல்லாவிட்டாலும், 'முட்டாள் தினத்'தை முதல் நாளாகக் கொண்ட அதே மாதத்தில் அவர்கள் பல முறை ஏமாற்றத்திற்கு இலக்காகி இருக்கிறார்கள். அவைக

ளில் ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களை மட்டுமே இங்கு கூறுகிறேன்.

★ ★ ★

அப்படி நாங்கள் (விமர்சகர்கள்) முதன் முதலாக ஏமாந்து போனது (1948ம் வருஷம்) "சம்சாரநௌகா" தமிழ்ப் படத்தின் பத்திரிகைக் காட்சியின் போதுதான். அந்தப் படத்தின் பத்திரிகைக் காட்சியை (தற்போதுஓடியன் என அழைக்கப்படும், ஸாகர் டாக்கீஸில் ஏற்பாடு செய்திருந்தார்கள். படைபதைக்கும் வெய்யிலின் கொடுமையையும் பொருட்படுத்தாது பத்திரிகைக்காரர்கள் அக் காட்சிக்கு வந்தபோது, அவர்கள் தியேட்டருக்கு வெளியேதான் நிற்க வேண்டியதாயிற்று. காரணம் அந்தப் படத் தயாரிப்புக் கம்பெனிகளிர் (அப்படம் இரு கம்பெனிகளின் கூட்டுத் தயாரிப்பாகும்) ஆபீஸ் பையன்களின் குடும்பத்தினர் முதல் படத்தில் நடித்த நட்சத்திரங்களின் குடும்பத்தினர் வரை முன் கூட்டியே வந்து இடத்தை அடைத்துக் கொண்டு விட்டார்கள். கோபத்தில் துர்வாசர்களாகவும், விச்வ மித்திரர்களாகவும் மாறி பத்திரிகாசிரியர்கள் திரும்ப வேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

★ ★ ★

படாதிபதி—டைரக்டரான ஆர். பத்மநாபன் அளித்தது இரண்டாவது ஏமாற்ற விழா. 1952ம் வருஷம் எப்ரல் மாதம் இவருடைய 'அபூர்வத் தயாரிப்பான' குமாரி என்ற படத்தைத் திரையிட்டார். சென்னையில் ஆரம்ப தினத்தன்றே முதல் காட்சியுடன் பத்திரிகைக் காட்சியையும் கெயிட்டி தியேட்டரில் ஏற்பாடு செய்திருந்தார். பத்திரிகாலயங்களைத் தேடிப் போய் காட்சிக்கு வரும்படி நேரில் அழைத்தார். அழைப்பின்படி காட்சிக்குச் சென்ற பத்திரிகாசிரியர்களை வரவேற்க அங்கு படாதிபதியும் இல்லை; அவருடைய ஒரு

கோடைக்கேற்ற
குளிர்ந்த பானங்கள்

ருசி மிகுந்தவை!
சத்து நிறைந்தவை!!
ஆரோக்கியமானவை!!!

777
பிராண்ட்

ஸ்குவாஷ்கள்
கிரஷ்கள்

★ மாம்பழம்
★ ஆப்பிள்
★ ஆரஞ்சு
★ அன்னாசி
★ சாத்துக்குடி
★ டொமேட்டோ
★ கொய்யா
★ லெமன் பார்லி
★ கிரஸ் ஜூஸ்

முதலியன.

எமது தயாரிப்புகள் அனைத்தும், இந்திய அரசாங்கத்தின் பொருப்பில் நடத்தப்படும் "நேஷனல் ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் ராயப்பேட்டை ஹைரோட்டில், (மயிலாப்பூர், லஸ் அருகில்) நிறுவியுள்ள 'லில்லிபுட்'டில் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்:

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ,
46, தம்புசெட்டி தெரு,
மதராஸ்-1.

(டெலிபோன் நெ. **5365**)

வியாபாரிகளுக்கு பிரத்யேக கமிஷன் உண்டு எல்லா பிரபல ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

பிரதிநிதி கூடக் கிடையாது. அது மட்டுமல்ல; அந்தத் தியேட்டரின் அப்போதைய மானேஜர் நடந்து கொண்ட விதம் படாதிபதியின் செய்கைக்கு சிகரம் வைப்பது போல இருந்தது. அப்படி ஒரு பத்திரிகைக் காட்சி ஏற்பாடு செய்திருந்ததே தமக்குத் தெரியாது என்றும், தியேட்டரில் இடம் கிடையாதென்றும் சொல்லிவிட்டுப் போய்விட்டார் அந்தப் புண்ணியவான். அடியேன் உட்பட அனைவரும் அசடு வழிய தியேட்டரைவிட்டு வெளியேறினோம்.

இந்த மாதிரியான ஒரு ஏமாற்றம் தமிழ் புது வருஷப் பிறப்பு அன்று ஏற்படும் போது ''வருஷம் முழுவதும் இப்படி ஏமாற்றமாக இருந்து விடக் கூடாதே'' என்று மனதுக்கு ரொம்ப வியாகூலம் உண்டாகும். ஆனால் அந்த வியாகூலமும் பத்திரிகாசிரியர்களை விட்டு வைக்கவில்லை. 1954 ம் வருஷம் ஏப்ரல மாதம் 13-ம் தேதி (அன்று தமிழ் புது வருடப் பிறப்பு) அவர்களுக்குக் கிடைத்தது புது வருடப் பரிசாக ஏமாற்றப் பரிசு. அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த **கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி** படத்தின் பத்திரிகைக் காட்சிக்குச் சென்ற பத்திரிகாசிரியர்களில் பலர், ''அழைப்புக் கிடைத்தும் இடம் கிடைக்கவில்லையே'' என்ற குறையோடு திரும்பவேண்டியதாகிவிட்டது. அப்படிப் போனவர்களைத் திருப்திப்படுத்த — அவர்கள் கோபத்தை சமனப்படுத்த-உடனடியாக மீண்டும் ஒரு நாள் பத்திரிகைக் காட்சியை ஏற்பாடு செய்தார்கள் படத் தயாரிப்பாளர்கள். எனினும் ஏமாற்றம் ஏற்பட்டது, ஏற்பட்டது தானே!

★ ★ ★

இப்படியாக பிரதி ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் ஏமாற்றத்திற்கு ஆளாகி வந்த பத்திரிகாசிரியர்கள் நடுவில் மூன்று ஆண்டுகள் (1955 முதல் 1957 முடிய) அந்த ஏமாற்றத்திலிருந்து தப்பி வந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு அவர்களை விட்டு வைக்கவில்லை. இந்தத் தடவை அவர்களுக்குக் கிடைத்த ஏமாற்றம் 'பெரிய' ஏமாற்றம். அதாவது பெரிய இடத்திலிருந்து கிடைத்த ஏமாற்றம்.

வஞ்சிக் கோட்டை வாலிபன் பத்திரிகைக் காட்சிக்குச் சென்ற பத்திரிகாசிரியர்கள் முக்காலே மூன்று வீசம் படத்தை மட்டுமே கண்டு திருப்தி அடைய வேண்டிய நிலை ஏற்பட்டதையே குறிப்பிடுகிறேன்.

முன் குறிப்பிட்ட சம்பவங்களையும் விட இது மகத்தான ஏமாற்றம் என்று குறிப்பிடக் காரணமும் உண்டு. முந்திய சம்பவங்களில் தியேட்டர் உள்ளே நுழையாமல் ஏமாற்றத்துடன் திரும்பிய பத்திரிகாசிரியர்கள் இந்தப் படத்தைப் பார்க்கச் சென்று ஒரு பகுதிப் படத்தைக் காணாமல் திரும்ப வேண்டியதாயிற்று.

பத்திரிகாசிரியர்கள் இதை ஒரு மகத்தான ஏமாற்றமாகக் கருத இன்னொருகாரணமும் உண்டு. ''பத்திரிகைக் காட்சி என்றால் இப்படி நடத்த வேண்டும்'' என்று வழி காட்டுவது போல் அந்தக் காட்சிகளை ஏற்பாடு செய்யும் ஸ்தாபனமாகும் ஜெமினி. அப்படிப்பட்ட ஜெமினியே அரைகுறைப்படத்தைப் பார்க்க அழைத்தது என்றால் ஆச்சரியம்தானே! ஏமாற்றத்தை எதிர்பார்க்காத ஒரு இடத்தில் ஏமாற்றம் ஏற்படுமானால் அது மகத்தான ஏமாற்றம் என்பதில் என்ன சந்தேகம் இருக்கிறது.



"ஸான்டாலின் மணம் எப்படி"
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER

நட்சத்திரத்துடன் ☆☆☆ ஒரு நாள்

K. சாவித்திரி

எல்லோருக்குமே எதிர்பார்த்தது நடந்துவிடுவதில்லை. அதற்குப் பதிலாக உள்ளத்துள்ளே ஊறிக் கிளம்பிய ஆசைத் தீ அவிந்துவிடும் படி நிகழ்ச்சிகள் நடந்துவிடுமானால் ஏக்க மூச்சுகள்தாம் மிஞ்சும்.

ஆனால் 'சம்சாரம்' என்ற தெலுங்குப் படத்திலே நடித்துப் பிரபலமாக வேண்டும் என்ற ஆர்வத்தோடு சென்னைக்கு வந்தார் சாவித்திரி. அன்று... நடந்தது

''உங்களுக்கும் சினிமாவுக்கும் வெகு தூரம்! நடிக்க உங்களுக்கு வராது!'' என்று அந்தப் படத்தின் டைரக்டர் எழுப்பிய அதைரியக் குரலும், இன்னும் சிலர் சேர்ந்து அப்படியே இவரைத் திரும்பிப் பாராமல்

அலட்சியப்படுத்திய நிலைமையும் சாவித்திரியை மாற்றி அமைத்திருந்தால் இன்று...

சாவித்திரி சிறந்த சினிமா நட்சத்திரமாகியிருக்கமுடியாது! இன்றுள்ள புகழும்பெயரும், கீர்த்தியும், கிராக்கியும் எந்தப் பாத்திரத்தையும் ஏற்று வெற்றிகரமாக நடிக்கும் சுறுசுறுப்பு மிகுந்த நடிகை என்ற ஏகோபித்த அபிப்பிராயமும் அவரை அண்டி இருக்குமா?

எப்படியும் முயன்றால் முன்னுக்கு வந்துவிட முடியும் என்ற நம்பிக்கைதான் அன்று சாவித்திரியை மனம் தளரவிடாமல் சினிமாவில் சேர ஊக்கம் தந்தது. அதே ஊக்கம்தான் இப்போது சாவித்திரியைத் தூங்கவிடமாட்டேன் என்கிறது!

நாளுக்கு இரண்டு படப்பிடிப்புக்களில் அலுப்பின்றி நடிக்க வைக்கிறது. அன்று எந்த டைரக்டர் இவரை நடிக்கத் தகுதியற்றவர் என்று கருதினாரோ அவர் இவரது துடிப்பு மிகுந்த நடிப்பைக் கண்டு ஆச்சர்யமுற்று டைரக்ட் செய்து வருகிறார்.

வாழ்க்கையில் இப்படி எல்லாம் ஊக்கத்தினால் உயர்வையும் பெருமையையும் தேடிக்கொண்ட சாவித்திரியின் ஒருநாள் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று பார்க்க ஹபிபுல்லா சாலையில் உள்ள அவருடைய புது மாளிகைக்குப் போனேன். அப்போது காலை மணி 7–10.

இரவு அங்கியைக்கூடக் கழற்றாமல் பல் துலக்கிவிட்டுத் திரும்பிய சாவித்திரி என்னைக் கண்டுவிட்டு "இன்னும் ஐந்து நிமிடங்கள் தாமதமாக வந்திருந்தால் ஸ்டுடியோவுக்குக் கிளம்பி இருப்பேன்! நல்ல வேளை வந்துவிட்டீர்கள்!" என்று சிரிப்புக்கு நடுவே கூறிவிட்டுத் தடதட வென்று படிகளில் இறங்கினார்.

"இன்னும் தூங்கி எழுந்திருக்க மாட்டீர்கள் என்று எண்ணிக்கொண்டல்லவா வந்தேன்" என்றேன்.

"நான் தூங்கினாலல்லவா எழுந்திருப்பதற்கு? என் இஷ்டப்படி தூங்கி, என் இஷ்டப்படி விழித்தெழுந்தால் என்னை நம்பிப் படம் எடுப்பவர்கள் கொட்டாவி விட வேண்டியதுதான்" என்று சொல்

லிக்கொண்டே, சா வி த் தி ரி முன் அறைக்கு வந்தார்.

அங்கு வந்த சோடு தெரியாமல் ஜெமினி கணேசன் தினப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார்!

"எப்போது வந்தீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே சாவித்திரியும் அவர் அருகில் அமர்ந்து தன் தலையைப் பத்திரிகைக்குள் நுழைத்துக் கொண்டார்.

"இப்போதுதான்! அதாவது, 'என்னை நம்பி' என்று சொல்லிக் கொண்டே கீழே வந்தாயே அப்போதுதான்!" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து படித்துக்கொண்டு போனார் கணேசன்.

"'என்னை நம்பி' என்று குறிப்பிட்டது உங்களை அல்ல; என்னை!" என்று அழகாகத் தலையைக் குலுக்கியபடி சாவித்திரி கூறிவிட்டு எதிரே கிடந்த சில பைல்களைப் புரட்டிப் பார்த்துவிட்டு, "நேரமாகிவிட்டது!" என்று காரில்ஏறிக் கிளம்பிவிட்டார்.

ஓடுகிற காரில் சாவித்திரிகூறினார் 'இன்று வாஹினியிலே 'அமர

தேவி' படப்பிடிப்பு. பல நாட்களுக்குப் பிறகு இன்று படாத பாடுபட்டு

படப்பிடிப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிருர் அந்தப் படாதிபதி. பாவம், அவரது நேரத்தில் சில நிமிடங்கள் வீட்டில் வீணுகிவிட்டதே என்று வருத்தமாக இருக்கிறது!''

''அமரதேவி'' படப்பிடிப்பில் அன்று சாவித்திரியுடன் ஜெமினி கணேசன், தங்கவேலு, எம். சரோஜா, நம்பியார் சில தோழிகள் ஆகியோருடன் ஒரு பாம்பும் நடித்தது. அந்தப் பாம்பு மேக்கப் போட்டுக்கொள்ள வேண்டுமே என்று கவலைப்படாமல், பிரபல டைரக்டர் வேதாந்தம் ராகவையாவின் அதட்டல்களுக்கு கொஞ்சமும் நடுங்காமல் பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடந்தது! படப்பிடிப்பு சமயத்தில் படமெடுக்காமல் அடம் செய்ததுடன், தன்னை விட்டால் போதும் என்று வழுக்கி நழுவி சாவித்திரி நின்ற பக்கமாகச் சர சரவென்று ஓடப் பார்த்தது.

''பாவம், எத்தனை நாள் பட்டினியோ? படமெடுக்க மனம் வருமா அதற்கு'' என்ருர்சாவித்திரி.

செட்டில் சாய்வு நாற்காலி ஒன்றில் உடுமலை நாராயணகவி வெற்றிலையையும் சொந்தப் பாட்டின் சில அடிகளையும் சேர்த்து மென்று கொண்டிருந்தார். படப்பிடிப்புக்கு நடுவே சாவித்திரி அவருக்கு, அருகில் வந்து உட்கார்ந்தபடி, ''எங்கே அந்தப் பாட்டைக் கொஞ்சம் பாடிக் காட்டுங்கள்!'' என்ருர். கவி, தெலுங்கில் வேடிக்கையாக இயற்றி இருந்த ஒரு பாட்டைத் தாமே பாடிக் காட்டினுர்.



அப்போதுடைரக்டர் வேதாந்தம் ராகவையா ''சாவித்திரி அம்மா ரெடி!'' என்று குரல் கொடுத்தார். சாவித்திரி எழுந்து நின்று கொண்டே, ''நான் ஆல்வேஸ் ரெடி! பாம்பு ரெடியா'' என்றுகேட்டார். வசனகர்த்தா. கோபால கிருஷ்ணன், ஒரு மூலை

கார்ந்தபடி சில வசனங்களை அவசரமாக எழுதி முடித்து விட்டு சாவித்திரிக்கு அருகே பாய்ந்து வந்தார். முழங்கால்வரை மடித்துக் கட்டிய வேட்டி அப்படியே இருந்தது.

"என்ன வாத்தியாரே?" என்ருர் சாவித்திரி.

"ஒன்றுமில்லை, ஒரு வார்த்தையை மாற்றிப் போட்டேன்!" என்ருர் வசனகர்த்தா.

படப் பிடிப்பை முடித்துக் கொண்டு வீட்டுக்குப் போனபோது நடுப்பகல் மணி 1-45. காரை விட்டுத் தாவி இறங்கி உள்ளே சென்ற பரபரப்பிலேயே அவரது பசி புரிந்தது. தந்தியடிக்கும் பாணியில் 'பசி, தட்டு, புதினுத் துகையல்......' என்று ஒலி பரப்பினுர்.

"சாப்பிட்டவுடன் நான் உறங்கி விடமாட்டேன். அந்தப் பழக்கம் என் மத்தியானப் படப்பிடிப்பைப் பாதித்து விடுகிறது. எனவே மேல் மாடிக்குச் சென்று தனிமையில் அமர்ந்து காற்று வாங்குவேன். எனவே, நான் தூங்கப் போய்விடுவேனே என்று பயப்படவேண்டாம்!" என்று சாவித்திரி சொன்னபோது அசந்து போனேன்!.

எண்ணி ஐந்தே நிமிடங்கள். சாவித்திரி சாப்பிட்டதாகப் பெயர் பண்ணிவிட்டு மேல் மாடிக்குப் போனுர்.

அங்கே இவரை ஏற்றுக் கொள்ள ஒரு வலுவான நீண்ட கைப்பிடிச் சுவர் இருக்கிறது. காற்று குளுகுளுவென்று பாய்ந்து கொண்டு வருகிறது. அங்கே இரு கைகளையும் சேர்த்துக் கட்டியபடி உட்கார்ந்துவிட்டார் சாவித்திரி.

"இந்தத் தனிமை எனக்குப் பிடித்தது. இங்கே வந்துவிட்டால்



என்னேடு எவரும் பேசக்கூடாது என்று கட்டளை பிறப்பித்திருக்கிறேன், ஏன் தெரியுமா? இங்கே என்னுடன் பேச ஒருவர் இருக்கிருர். அவர்......" என்று சற்று நீட்டி முடித்து விட்டு "மிஸ்டர் மனசாட்சி!" என்று முடித்தார் சாவித்திரி.

அன்று மாலை 6-மணிக்கு மேல் சாவித்திரிக்கு "அதிசயத் திருடன்" தமிழ், தெலுங்குப் படங்களில் படப்

பிடிப்பு இருந்தது. சாவித்திரி செட்டுக்குள் நுழையும்போது தமிழ் 'அதிசயத். திருட'னில் ஜெமினி கணேசன் நடித்து விட்டு வெளியே வந்தார். தெலுங்குப் படத்தில் அதிசயத் திருடனாக நடித்து வரும் என். டி. ராமராவ் மேக்-அப் போட்டுக்கொண்டு அப்போது வந்தார். இரண்டு திருடர்களையும் மாறி மாறிச் சாவித்திரி பார்த்தார்.

''கணேஷ் போகட்டும், பாவம்,! இன்று 'பாவா'வை ரொம்ப வாட்டி அடிச்சுவிட்டேன்'' என்று டைரக்டர் புல்லையா தன் பாலைவனத் தலையைத் தடவியபடி அங்கே வந்தார். கச்சா பிலிம் கட்டுப்பாடை அடியோடு தகர்த்தெறிய இன்னும் என்ன பிளான் செய்யலாம் என்று சிந்தித்தபடியே அந்தப் பக்கமாக வந்தார் விஜயா அதிபர் நாகிரெட்டி. எந்த நாகிரெட்டியின் கருணையினால் இன்று பிரபல நட்சத்திரமாக விளங்குகிறாரோ அவர் அங்கு வந்தது சாவித்திரிக்குப் பெருமையைக் கொடுத்தது. சட்டென்று நாகிரெட்டியை சாவித்திரி வணங்கிய முறையிலேயும் 'நமஸ்காரண்டி!' என்ற அவர் குரலிலும் அந்த உற்சாகம் நிரம்பி நின்றது.

என். டி. ராமராவுடன் இரண்டு மணி நேரம் பூ விற்கும் பெண் பாத்திரத்தில் அன்று தமாஷாக அதிசயத் திருடனில் நடித்துவிட்டு, "ரேலங்கிகாருவின் மகனுக்கு நேற்றுத் திருமணமாயிற்றல்லவா? இன்று விஜயா கார்டனில் வரவேற்பு, போகவேண்டும்!'' என்று பறந்தார் சாவித்திரி.

கார் வாஹினியிலிருந்து எதிரே இருக்கும் விஜயாத் தோட்டத்துக்கு கனவேகமாக விரைந்தது.

அங்கே ஏற்கெனவே ஜெமினி கணேசன்வந்திருந்தார். சாவித்திரி காரிலிருந்து இறங்கி வருவதைக் கணேசன் கவனித்துவிட்டு, ரேலங்கியிடம், "எங்கே சாவித்திரி என்று கேட்டுக் குடைந்து எடுத்துக் கொண்டிருந்தீர்களே, அதோ!" என்று சொல்லிவிட்டுத் தன் காதை குடைந்துவிட்டுக்கொண்டார் ஒரு தடவை. இந்த இயற்கை நடிப்பைக் கண்டு ரசித்தார் சாவித்திரி.

விருந்துபசாரத்துக்கு வந்திருந்த பிரதம நீதிபதி பி. வி. ராஜமன்னார், பி. என். ரெட்டி, நாகிரெட்டி. அஞ்சலிதேவி, அவரது கணவர் ஆதிநாராயணராவ் ஆகியோருக்கெல்லாம் வணக்கம் செலுத்தினர்.

ரேலங்கி, அவர்களுக்கு நடுவே இருந்து விடுபட்டு சாவித்திரியிடம் வந்து, "அவர்களெல்லாம் விருந்து சாப்பிட்டுவிட்டார்கள். நீதான் பாக்கி! இன்னும் சிறிது நேரம் இங்கேயே நின்று பேசிக்கொண்டிருந்தால் எல்லாம் காலியாகிவிடும்." என்று சிரித்துக்கொண்டே சொன்னர்.

"அப்படியா!" என்று கேட்டுவிட்டு அங்கிருந்து சாவித்திரி ஒரு மேசைப்பக்கமாக ஓடினர். ஆமாம் ஓடினர்!

ஓடினது சாவித்திரிதானு என்று எனக்குச் சந்தேகமாகத்தான் இருந்தது! ஆனல் கணேசனுக்கு அருகில் இருந்த இடம் காலியாக இருந்ததே!

அன்று காலே 7-10 முதல் இரவு 8-50 வரையில் சாவித்திரியின் பொழுது எப்படிப் போகிறது என்று

கவனித்தபோது அவரிடம் எனக்கு இரக்கம் ஏற்பட்டது! இவ்வளவு அடுக்கடுக்கான அலுவல்களுக்கு நடுவே ஓர் இயந்திரமாக இயங்குகிருர். அந்த இயந்திரத்துக்கு—

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை கிடையாது! உயிரும் உணர்ச்சியும் இருக்கின்றன.

சாவித்திரியைப்போல ஒரு சுறுசுறுப்புள்ள சினிமா இயந்திரத்தை நான் பார்த்ததே இல்லே!



புதுப் படங்கள்

அகிலனின் கதை

பிரபல நாவலாசிரியர் 'அகில'னின் கதையான "பாவை விளக்கு" படமாக விருக்கிறது. "கல்கி" பத்திரிகையில் தொடர் கதையாக வெளிவரும் இதை பல நட்சத்திரங்களைக் கொண்டு படமாக்கப் போகிறார்கள் விஜயகோபால் பிக்சர்ஸார். சோமு, ஏ. பி. நாகராஜன், கே. வி. மகாதேவன் மூவர் கோஷ்டியினர் இப்படத் தயாரிப்பில் பணியாற்றுவார்கள்.

மாணிக்கம் தந்த மரகதம்

லக்ஷ்மி பிக்சர்ஸார் வி, கே. ராமசாமி எழுதியுள்ள "மாணிக்கம் தந்த மரகத"த்தை படமாக்கப் போகின்றனர். இந்தத் தயாரிப்பிலும் கே. சோமு-ஏ. பி. நாகராஜன்-கே. வி. மஹாதேவன் கோஷ்டியினர் தங்கள் தங்கள் பணியைச் செய்யப் போகின்றனர்.

மாடல் A 92

5 வால்வுகள் ஏ.ஸி. ஆல்-வேவ் 3 பாண்ட்ஸ்.

நிகர விலை: ரூ. 225/-



ஜே-ஒ-போன் கோ.,

13, தங்கசாலை வீதி, மதராஸ்-3.

தமிழில் புது டில்லி

இந்திப் படமாக வெளிவந்த "புது டில்லி"யை வி. எல். நரசு தமிழ்ப் படமாகத் தயாரிக்கத் தொடங்கியுள்ளார். இப் படத்தின் வசனங்களை துறையூர் மூர்த்தி எழுதியுள்ளார். எஸ். எஸ். ராஜேந்திரன், பிரேம் நஸீர், எஸ். வி. சுப்பையா, சாயிராம், பி. சரோஜாதேவி, கிரிஜா ஆகியோர் முக்கிய பாகங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

மங்கையர் உலகம்

சங்கர் பிலிம்ஸார் குடும்பக் கட்டுப்பாட்டை அடிப்படைக் கருத்தாகக் கொண்டு "மங்கையர் உலகம்" என்ற படத்தைத் தயாரித்து வருகின்றனர். படக் கதை வசனத்தை "சுரபி" என்ற புனைபெயர் கொண்ட ஜே. தங்கவேல் எழுதியுள்ளார். மனோஹர், கே. சாரங்கபாணி, பண்டரிபாய், ஹரிணி பிரதம பாகங்களில் நடிக்கும் இப் படத்தை ஸ்ரீபாதசங்கர் டைரெக்ட் செய்கிறார். இப்படத்திற்கு இந்திய சர்க்காரின் ஆதரவு இருக்கும்.

தினகரன் பிக்சர்ஸ்

தினகரன் பிக்சர்ஸார், "ஆஸ்திக்கு ஒரு ஆணும் ஆசைக்கு ஒரு பெண்ணும்" என்ற படத்தைத் தயாரிக்க திட்டமிட்டு, படத்தில் நடிக்க எம். என். ராஜம், வி. கே. ராமசாமி, ஏழுமலை, பி. டி. சம்பந்தம் ஆகியோரை ஒப்பந்தம் செய்துள்ளனர். சோமு-நாகராஜன்-மஹாதேவன் கோஷ்டியினர் வேலை செய்யும் படம்தான் இதுவும்.

"உழைப்பவன் பிழைப்பான்"

டைரெக்டர்-படாதிபதி நாகேந்திர ராவ் தாம் அடுத்துத் தயாரிக்கப் போகும் தமிழ்ப் படத்திற்கு "உழைப்பவன் பிழைப்பான்" என்று பெயர் வைத்திருக்கிறார்.

இது செய்தி

கல்விக்கு தானம்

தான் தயாரித்த "தை பிறந்தால் வழி பிறக்கும்" படம் வெற்றி பெற்றதற்கு நடிகர்களுக்கும் சக ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிக்க விருந்து ஒன்றை சென்ற மாதம் நடத்தி, அனைவருக்கும் பரிசுகள் வழங்கினார், படாதிபதி—டைரெக்டர் ஏ. கே. வேலன் தாம் தமிழ் பயின்ற கரந்தை தமிழ்ச் சங்கத்திற்கு ஒரு கட்டடம் கட்டித் தர இருபத்தையாயிரம் ரூபாய் நன்கொடை தரப்போவதை அது சமயம் அவர் தெரிவித்தார்.

பாராட்டு விழா

திருவடீஸ்வரன் பேட்டை, இளங்கோ நூலகத்தார் சினிமாக் கலைஞர்கள் மூவரைப் பாராட்ட சென்ற மாதம் 21 ம் தேதி ஒரு விழாவைச் சிறப்பாக நடத்தினார்கள். சங்கீத டைரெக்டர் ஜி. ராமநாதன், நடனகேசரி வழுவூர் ராமய்யா பிள்ளை, நடிகர் எம். கே. ராதா ஆகிய மூவருக்கும் ம. பொ. சிவஞானம் அன்று நூலகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தினார். டி. கே. சண்முகம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் தங்கவேலு, எம். ஜி. ராமச்சந்திரன் மற்றும் பல படவுலகப் பிரமுகர்கள் கலந்துகொண்டு கௌரவிக்கப்பட்ட கலைஞர்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

ரஸிகர்கள் தீர்ப்பு

பல இடங்களிலுமுள்ள ரஸிகர் சங்கங்கள் சமீபத்தில் தேர்தல் நடத்தியுள்ளன. கும்பகோணம் ரஸிகர்களும், சேலம் ரஸிகர்களும் நடத்திய தேர்த்தலில் சிறந்த நடிகர் சிவாஜி கணேசன், சிறந்த நடிகை பத்மினி என்று தீர்ப்பு அளித்துள்ளனர். இலங்கை வீரகேசரி மூலம் நடந்த தேர்தலில் இலங்கை ரஸிகர்கள் சிறந்த நடிகர், சிவாஜிகணேசன் எனவும், சிறந்த நடிகை சாவித்திரி எனவும் தீர்ப்பு அளித்துள்ளார்கள்.

பெங்களூரில் ஸ்டுடியோ

வெகு சீக்கிரமே பெங்களூரில் ஒரு ஸ்டுடியோ ஆரம்பமாகவிருக்கிறது. ஆர். கே. மைன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் அதிபர் எம். ராமதாஸ் பெங்களூரில் ஒரு ஸ்டுடியோவை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க வேலைகளில் முனைந்திருக்கிறார். "ஓம்கார் ஸ்டுடியோஸ்" என்ற இந்த ஸ்டுடியோவில் அக்டோபர் மாதம்முதல் படப்பிடிப்பு வேலைகள் தொடங்கும்.

சென்னை மேடைகளில்...

சென்ற மாதம். சென்னை மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபையில் திருவல்லிக்கேணி அமெச்சூர் ஆர்ட்ஸ் கிளப் அங்கத்தினர்கள் 'அன்பின் சிகரம்' என்னும் நாடகத்தை நடித்தனர். ஸ்ரீ ஜோதி வெங்கடாசலம் எம். எல், ஸி.

வி. என். சம்பந்தம்—பி. கே. சரஸ்வதி குழுவினரின் "குறத்தி"யின் பொன் விழா நாடகம் சமீபத்தில் நடைபெற்றது.



"முதலாளி" தயாரிப்பாளர் எம். ஏ. வேணு ஜனாதிபதியிடம் பரிசு பெறுகிறார்.

இந்த நாடகத்திற்குத் தலைமை வகித்தார். நாடகத்தை டைரெக்ட் செய்து வில்லனாக நடித்தார் பரணி கிருஷ்ண மூர்த்தி.

திருவல்லிக்கேணி பாரதி நாடக மன்றத்தினர் 'பணம் ஓடுகிறது' என்ற ஹாஸ்ய நாடகத்தை சென்ற மாதம் 19ம் தேதி நடித்தார்கள். பரமசிவமாக நடித்த எம். பி. வனத்தின் நடிப்பு ஒன்று தான் ரஸிக்கும்படியாக இருந்தது. எம். ஆர். எல். நாராயணன் என்பவர் எழுதிய நாடகம் இது.

மயிலை ராமச்சந்திரனின் சிஷ்யையான பேபி பாலாவின் நடன அரங்கேற்றம் சமீபத்தில் சென்னையில் நடைபெற்றது.

வாழ்த்துகிறோம்

ஆரணி ஸில்க் ஹவுஸ் முதலாளி கே. எம். கே. அண்ணாமலைச் செட்டியார் தமது மகள் செல்வி பவுனம்பாளை, பண்ருட்டி ஜவுளி வியாபாரி ஏ. எம். சொக்கலிங்க செட்டியார் மகன் செல்வன் சிவப்பிரகாசத்திற்குத் திருமணம் செய்து கொடுத்தார். மணமகன், சென்னை ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் டாக்டராகப் பணியாற்றுகிறார். பண்ருட்டியை அடுத்த புதுப்பேட்டையில் இந்த விவாகம் சிறப்பாக நடைபெற்றது.

பிரபல எழுத்தாளர் துமிலன் தம் புத்திரி சௌ. பத்மாவை சங்கீத வித்வான் மணக்கால் ரங்கராஜனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

ஒளிப்பதிவாளரும் — படத்தயாரிப்பாளருமான ஜே. ஜி. விஜயம் தனது புத்திரிகளான செல்வி செல்வகுமாரி, உஷாராணி இருவரது திருமணத்தையும் சிறப்பாக நடத்தினர். செல்வ

குமாரியை சுந்தரராஜனும், உஷா ராணியை பி. கே. வி. ரிஷபதாஸும் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றனர்.

'ஜனசக்தி'யின் சினிமா நிருபர் மின்னல் சௌ. ஜமீலாவைத் தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார்.

அடிஸன் கம்பெனி மானேஜர் ஜி. கிருஷ்ணசாமி, தம் புத்திரர்களான சிரஞ்சீவிகள் கே. பாலசுப்பிரமண்யம், கே. சங்கரன் ஆகிய இருவருக்கும் சிறப்பாக பிரம்மோபதேசம் செய்வித்தார்.

அனைவருக்கும் குண்டூசியின் வாழ்த்துக்கள்.

நடனமாடினர்

தியாகராய நகர் தியாகபிரம்மகான சபையின் ஆதரவில் சென்ற மாதம் 14ம் தேதி பேபி டி. என். சந்திராவின் நடனக் கச்சேரி நடைபெற்றது. இந்த பேபி, பரணி கிருஷ்ணமூர்த்தியின் சிஷ்யை. அன்றைய நடனத்திற்கு நடிகர் நாய்யா தலைமை வகித்தார்.

அரங்கேற்றம்

சென்ற மாதம் 23ந் தேதி கே. பி. கீதாவின் நடன அரங்கேற்றம் சென்னை வாணி மஹாலில் நடைபெற்றது. இவர் கே. ஜே. சரஸாவிடம் நடனப் பயிற்சி பெற்றவர்.

வெங்கடேசா தியேட்டர்

சென்ற மாதம் 14ம் தேதி கவுந்தப்பாடியில் வெங்கடேசா என்ற தியேட்டரை முதல் டிக்கெட்டை விற்று சிவாஜி கணேசன் திறந்துவைத்தார். இந்த விழாவுக்கு பி. ஜி. கருத்திருமன் எம். எல். ஏ. தலைமை வகித்தார்.

சிறுவர்களுக்கான சிறந்த படத்தை எடுத்துப் பிரதமர் பரிசைப் பெற்ற ஏவி. எம்முக்கு ஏவி. எம். ஸ்டுடியோ சிப்பந்திகள் பாராட்டு விருந்துபசாரம் நடத்திய போது, வாசன், நாராயண ஐயங்கார், நாகி ரெட்டி முதலிய படாதிபதிகள் வந்து சிறப்புத் தந்தார்கள்.



பிரபல ரேடியோ, சங்கீதக் கருவிகள், மற்றும் மின்சார சாதனங்களை விற்பனை செய்துவரும் முகம்மது இப்ராகிம் கம்பெனியின் ஜெனரல் மானேஜர் நடராஜன் வியாபாரக் கலை நுணுக்கங்களைத் தெரிந்து கொள்வதற்கு இங்கிலாந்து, ஐரோப்பா முதலிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்யச் சென்றிருக்கிறார்.

சிப்பந்திகள் அளித்த விருந்து

ஏவி. எம். ஸ்டுடியோ, மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பல சக ஸ்தாபனங்கள் ஆகியவைகளின் ஊழியர்கள் சேர்ந்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளும் முறையில் "ஹம் பஞ்சி ஏக் தால்கே" படத்திற்கு நேருவின் பரிசைப் பெற்ற தங்கள் அதிபர் படாதிபதி ஏவி. மெய்யப்பனுக்கு சென்ற மாதம் 26ம் தேதி ஒரு விருந்து அளித்தனர்.

புதிய சங்கீத சபா

கோடம்பாக்கம் கலாபிமானிகள் கலை நிகழ்ச்சிகளை ரஸிக்க நகரத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் போகவேண்டிய சிரமம் இனிமேல் இருக்காது. கடந்த தமிழ்ப் புதுவருட தினத்தன்று 'கோடம்பாக்கம் சங்கீத சபா'வை கனம் நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் ஆரம்பித்துவைத்தார். ஆரம்ப தினத்தன்று எஸ். லலிதாவின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. தலைமை வகித்த ஏ. எஸ். பி. அய்யர் பேசுகையில் "இளம் பாடகி என்று சொல்லப்படும் இப் பாடகியிடம் இன்று பிரபலமாகவுள்ள பல பாடகிகளுக்கு உள்ள திறமை காணப்படுகிறது" என்று பாராட்டிப் பேசினர்.

பக்த ராவணு

"பூகைலாஸ்" என்ற தெலுங்குப் படத்தை ஏ. வி. எம் ஸ்டுடியோவினர் தமிழில் 'டப்' செய்துவருகிறார்கள் அல்லவா? இந்தப் படத்துக்கு 'பக்த ராவணு' என்று பெயர் வைக்கப்பட்டு உள்ளது.

இந்தப் படத்தில் குமாரி கமலா, ஈ.வி. சரோஜா, சரோஜாதேவி, வட இந்திய நாட்டியக்காரி ஹெலன் ஆகிய 4 பேரும் நடனம் ஆடியிருக்கிறார்கள். தவிர ஜமுனு, என். டி. ராமராவ், ஏ. நாகேசுவரராவ், எஸ். வி. ரங்காராவ் ஆகியவர்களும் நடித்து இருக்கிறார்கள்.

நீலமலைத் திருடன்

ரஞ்சன்–அஞ்சலிதேவி ஜோடி நடித்த "நீலமலைத் திருடன்" படத்தை ஏவி. எம். ஸ்டுடியோக்காரர்கள் இந்தியில் 'டப்' செய்து வருகிறார்கள்.

பரணி கிருஷ்ணமூர்த்தி

கில்லாடி

பயனீர் பிலிம்ஸார் "கில்லாடி" படத் தயாரிப்பு வேலைகளைத் தொடங்கியுள்ளனர். ரஞ்சனும்-குசலகுமாரியும் இப்படத்தில் காதல் ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளனர். ஏ. எஸ். முத்து திரைக் கதை வசனம் எழுதியுள்ளார். இந்தப் படத்தில் மற்றும், பட்டு, டி. பி. முத்துலட்சுமி-ஹாஸ்ய விருந்தளிப்பார்கள்.

ஏழைக்கு எது இன்பம்

பிருந்தாவன் பிலிம்ஸார் "ஏழைக்கு எது இன்ப"த்தையும், உஷா புரொடக்ஷன்ஸார் "உடன் பிறந்த உத்தம"ணையும் தயாரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். ஸி. பி. ஜம்புலிங்கம் டைரெக்ஷனில் உருவாகப் போகும் "ஏழைக்கு எது இன்ப"த்தில் லக்ஷ்மி பிரபா, ஏ. சகுந்தலா, எஸ். வி. சுப்பையா, கே. சாரங்கபாணி, முஸ்தபா, கருணாநிதி, முத்துலட்சுமி ஆகியோர் நடிப்பார்கள். பீம்ஸிங் டைரெக்ஷனில் உருவாகப் போகும் "உடன் பிறந்த உத்தம"னில் பிரேம் நஸீர், எம். என். ராஜம், எஸ். வி. சுப்பையா, டி. பால சுப்பிரமண்யம், டி. கே. ராமச்சந்திரன், நடிக்க ஒப்பந்தமாகியுள்ளனர்.

எஸ். லலிதா

வசனகர்த்தா நடராஜனுக்கும் பாரத் ஸ்டுடியோ அதிபர் நமச்சிவாயத்திற்கும் மத்தியில் ஹாஸ்ய நடிகர் தங்கவேலு "விக்ரமாதித்தன்" படப்பிடிப்பிற்காகக்காத்துநிற்கிறார்.



மக்கள் புரியாத மர்மம்

விசித்திரமான "மக்கள் புரியாத மர்மம்" என்ற பெயரைக் கொண்ட படம் சைதன்ய சித்ராவின் தயாரிப்பாக உருவாகி வருகிறது. இப் படத்தின் வசனம்-பாடல்களை தஞ்சை ராமையாதாஸ் எழுதுகிறார். ஏ. நகேஸ்வரராவ், சாவித்திரி, தங்கவேலு, ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். படத்தை லக்ஷ்மி குமார் டைரக்ட் செய்கிறார்.

கன்னடத்தில் 'மகராசி'

சிவாஜி கணேசன்—பானுமதி ஜோடி நடித்த படமான 'மக்களைப்பெற்ற மகராசி' படத்தை கன்னடத்தில் கிரிஜா புரொடக்ஷன்ஸ் என்ற கம்பெனியார் தயாரித்து வருகிறார்கள்.

இந்தப் படத்தில் கன்னட நடிகர் ராஜ்குமார், சரோஜாதேவி, ராஜம்மா, வித்தியாவதி முதலியவர்கள் நடித்து வருகிறார்கள். இப் படத்துக்கு "அண்ணா தங்கை" என்று பெயர் வைக்கப்பட்டு இருக்கிறது.

வளரும் படங்கள்

புதுமைப் பெண்

"நினைச்சதை முடிச்சுடுவா பொம்பளைப்பிள்ளை" என்று தொடங்கும் பாட்டு **புதுமைப் பெண்**ணில் ஜனரஞ்சகமான ஒரு பாட்டாக இருக்கும். சென்ற மாதம் இப்பாட்டிற்கு ஏற்பக் குதூகலமாக எம். என். ராஜம் ஆடும் காட்சி படமாகியது. எம். என். ராஜம் இந்தப் படத்தில் இருவேடங்களில் வந்து கதாநாயகனை (எஸ். எஸ். ராஜேந்திரன்) ஏமாற்றுகிறாள். மற்றும் ராஜசுலோசனா, பாலய்யா, பாண்டியன், ஜெயந்தி கமலா. ஆகியோர் நடித்து வருகின்றனர். கஜலக்ஷ்மி பிக்சர்ஸின் இந்தத் தயாரிப்பை திருவேங்கிடம் டைரெக்ட் செய்து வருகிறார். படத்தின் பாட்டுகளை கு. மா. பாலசுப்பிரமணியம் எழுதி யிருக்கிறார்.

பெற்ற மகனை விற்ற அன்னை

இலட்சிய நடிகரும் (எஸ். எஸ். ராஜேந்திரனும்) பக்தி நடிகரும் (மனோஹர்) சேர்ந்து நடிக்கும் முதல் படமாகும் மாடர்ன் தியேட்டர்ஸின் தயாரிப்பான **பெற்ற மகனை விற்ற அன்னை.** இவர்கள் தவிர, சகாதேவன், ஏ. கருணாநிதி, மாஸ்டர் கோபால், பண்டரிபாய், விஜயகுமாரி, முத்துலட்சுமி, ராஜாமணி ஆகியோர் முக்கிய பாத்திரங்களாக நடித்து வரும் இந்தப் படத்தில் பேபி சசிகலா, ஹெலன் இருவரது கவர்ச்சிமிக்க நடனங்கள் இடம் பெற்றுள்ளன. சீக்கிரமே திரைக்கு வரப்போகும் படங்களில் இதுவும் ஒன்றாகும்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ராமண்ணாவின் டைரெக்ஷனில் உருவாகி வரும் படங்களில் ஒன்றாகும் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு". எம். ஆர். ராதா முக்கியமான ஒரு பாத்திர

மாக நடிக்கும் இந்தப் படத்தின் கதை புதுமையானதாகவும் புரட்சிக் கருத்துக் கொண்டதாகவும்தானே இருக்கும்! கனகராஜ்-ராமகிருஷ்ண ரெட்டியார் ஆகிய இருவரின் கூட்டுத் தயாரிப்பான இப்படத்தின் திரைக் - கதை – வசனத்தை துறையூர் கே. மூர்த்தியும் பாட்டுகளைப் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரமும் எழுதி யிருக்கின்றனர். விஸ்வநாதன் - ராமமூர்த்தி ஜோடி சங்கீத டைரெக்ஷனைக் கவனித்து வருகின்றனர். ரங்கா பிக்சர்ஸின் இந்தத் தயாரிப்பில் ராஜசுலோசனா, பிரேம் நஸீர் காதல் ஜோடியாக நடித்து வருகின்றனர்.

கொஞ்சும் சலங்கை

நாட்டியத்திற்கே அதிகமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள படம் **கொஞ்சும் சலங்கை** என்பதைத் தலைப்பே வெளியிடுகிறது. ராமன் புரொடக்ஷன்ஸின் இத்தயாரிப்பை எம். வி. ராமனே டைரெக்ட் செய்து வருகிறார். விகடன் நாவல் போட்டியில் முதல் பரிசுபெற்ற ஜெகசிற்பியன் இப்படத்தில் சில பகுதிகளுக்கு வசனம் எழுதி வருகிறார். எஸ். எம். சுப்பையா நாயுடு சங்கீத டைரக்ஷனை ஏற்றுள்ள இந்தப் படத்தில் ஜெமினி கணேசன், கமலா லட்சுமணன், சாவித்திரி, குசல குமாரி, மனோகர் ஆகியோர் முக்கிய பாகங்களில் நடித்து வருகின்றனர்.

ஸ்ரீவள்ளி

பிரகதி பிக்சர்ஸின் வெற்றிப் படமான ஸ்ரீ வள்ளியில் வள்ளி மணாளனாக நடித்த டி. ஆர். மஹாலிங்கம் நரசு பிக்சர்ஸ் தயாரித்து வரும் அதே கதையில் நாரதராக நடித்து வருகிறார். இந்தப் புராணக் கதை நரசு பிக்சர்ஸின் கலர்ப்படமாகத் தயாராகிறது. இப் படத்தில் வேலன் - வேடன் - விருத்தனாக சிவாஜி கணேசனும் தினைப் புனம்காக்கும் காரிகையாக பத்மினியும் நடித்து வருகின்றனர். மற்றும் சந்திரபாபு, வி. ஆர். ராஜகோபாலன், ராகினி, ஸி. கே. சரஸ்வதி ஆகியோரும் நடித்து வருகின்றனர்.

உடைதான் புதிது, பழைய நடிகர்தான்! ஜங்கா பில்ம்ஸ் "மாலையிட்ட மங்கை" யில் டி. ஆர். மஹாலிங்கம்.

மரக்கிளையிலே ஏறிக் கொண்டிருக்கும் மங்கை, "பாண்டித் தேவனி"ல் பி. எஸ். சரோஜா

தாமரைக் குளம்

எம். ஆர். ராதா தற்போது நடித்து வரும் படங்களில் கல்யாணி பிக்சர்ஸின் "தாமரைக் குளமு"ம் ஒன்ருகும். கோல்டன் ஸ்டுடியோவில் தயாராகி வரும் இப் படத்தை வி. ஸ்ரீனிவாசன் டைரக்ட்செய்து வருகிருர். இப்படத் தயாரிப்பாளரான எஸ். ஆர். நடராஜனின் மூலக் கதையைத் தழுவித் திரைக் கதையை எழுதி யிருப்பதுடன் வசனங்களையும் பாட்டுகளையும் முகவை ராஜமாணிக்கமே எழுதியிருக்கிருர். எம். ஆர். ராதா தவிர, கே. சாரங்கபாணி, வி. கோபால கிருஷ்ணன், சௌகார் ஜானகி, பத்மினி பிரியதர்சினி பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர்.

ஓடிவிளையாடு பாப்பா

புது உலகச் சிற்பி எழுத்தாளன் ராஜா. வறுமை தொலைந்து எல்லா இன்பமும் நெருங்கி வந்த நேரத்தில் அவன் மனைவி லட்சுமி அவனை விட்டுப் பிரிந்தாள். லட்சுமியைப் பிரிந்த ராஜா துடியாகத் துடித்தான். இப்படி ஓர் உருக்கமான கட்டம் வருகிறது ஜகத்ஜோதி பிலிம்ஸின் "ஓடிவிளையாடு பாப்பா"வில், மனைவியைப் பிரிந்த எழுத்தாளனாக எஸ். எஸ். ராஜேந்திரனும், மனைவி லட்சுமியாக ஜி. சகுந்தலாவும் நடிக்கின்றனர். மற்றும் பி. சரோஜா தேவி, டி. கே. பாலச்சந்திரன், ஜெமினி வரலட்சுமி, அங்கமுத்து முதலியோரும் நடிக்கின்றனர். கதை வசனத்தை கே. அப்பன் ராஜ் எழுதியிருக்கிருர். இசையமைப்பை வி. கிருஷ்ணமூர்த்தி ஏற்று நடத்த, பாரதியார் - கம்பதாசன் - முகவை இராஜமாணிக்கம் முதலியோர் எழுதிய ஆறு பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன.

காஷ்மீர் சால்வை

ரூ. 2/50-தான்!

ரூ. 2/50-க்கு, 96" X 54" அளவுள்ள எம்ப்ராய்டு காஷ்மீர் சால்வையை நீங்கள் அடையலாம். தபால் செலவு தனி. பூரணதிருப்திக்கும் உத்திரவாதம். இல்லையேல் பணம் வாபஸ். குறைந்த சரக்குகளே இருக்கின்றன. ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே எழுதுக.

KASHMIR SHAWL HOUSE (G.M.)
AMRITSAR

விஜயாவின்
தயாரிப்பு:
நாகிரெட்டி
சக்ரபாணி



‘கடன் வாங்கிக் கல்யாணம்’ பண்ணவும் எவ்வளவு கஷ்டப்பட வேண்டும் என்பதை விஜயாவின் இச் சித்திரத்தில் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

பி.ஏ.எஸ்.புரொடக்ஷன்ஸ்
செஞ்சு லக்ஷ்மி
தயாரிப்பு-டைரக்ஷன்:
B.A..சுப்பராவ்
பூரண உரிமையாளர்:
மஹாலக்ஷ்மி பிக்சர்ஸ்...

அஞ்சலிதேவி - நாகேஸ்வர ராவ் ஜோடி இரு வேடங்களிலும், தமாஷ் நடிகர் தங்க வேலு நாரதராகவும் நடிப்பதும் ஈ. வி சரோ ஜாவின் கவர்ச்சிமிக்க நடனங்களும் படத்தின் சிறப்பு மிகுந்த அம்சங்கள்.

நிருபர் படம் பார்க்கிருர்

[நமது நிருபர் படங்கள் பார்த்து அபிப்பிராயம் கூறுவதற்கு முன்னுல் அவரைப் பற்றி அபிப் பிராயம் கூறவேண்டியதிருக்கிறது!

அவர் அலாதி முறையில் படம் பார்க்கிறவர். உள்ளது உள்ளபடி உரைப்பவர். பலதரப்பட்ட வர்களைச் சந்தித்துக் கருத்துக்களைத் திரட்டித் தருகிறவர். சர்வ வியாபியும் அஷ்டாவதானியுமான அவர் சமீபத்தில் பார்த்த படங்கள் மூன்று. அவைகளைப்பற்றி ....]

"பர்தேசி", பர்தேசி இல்லை! பல இலட்சங்களை விழுங்கியவன். இன்னும் விழுங்க வந்திருப்பவன். பர்தேசியைப் பார்க்கச் சென்னை நியூ குளோப் தியேட்டருக்குப் போனேன். சுவரொட்டிகளில் பெரிதாகப் பத்மினியின் படத்தைப் போட்டு, பத்மினி நடித்திருப்பதாக விளம்பரப் படுத்தப்பட்டது வெறும் மோசடி என்று படம் பார்த்த பிறகு புரிந்தது!

ஏனெனில் பத்மினி இப்படத்தில் நடிக்கவே இல்லை! சில இடங்களில்தோன்றி இரு முறை ஆடிவிட்டுப் போகிருர். ரசிகர்களைப் பொறுத்த வரையில் இன்னும் இந்த பத்மினி 'ஓரியண்டல் டான்ஸஸ் ஆப் இந்தியா' வாகத்தான் இருக்கிருர்! இந்த ஆட்டம் ஆடத்தான் குடும்பத்தோடு பத்மினி ரஷியாவுக்கு விஜயம் செய்திருந்தாரா என்று வருத்தமாக இருக்கிறது எனக்கு.

பத்மினியை மட்டுமல்ல, நர்கிஸையும் நன்ருக நடிக்கவிடாமல் கெடுத்திருக்கிருர்கள். அவரது மேக்-அப், ஏற்றுக்கொண்ட வேடம் எல்லாம் மட்டம், மகாமட்டம்!

ஏதோ பார்க்கத் தகாத செய்திப் படம் ஒன்றைப் பார்த்துவிட்ட பாவ உணர்ச்சியோடு மனம் புழுங்க வெளியே வந்தேன். எனக்குப் பின்னுல் சேகர் - சுந்தர் வந்தார்கள். இந்த ஜோடி உயர்தர இந்திப் படங்களைப் பார்த்துவிட்டுத் தங்கள் அபிப்பிராயங்களை ஒரு தமிழ் வாரப் பத்திரிகை மூலம் வாரி வழங்குவது வழக்கம்.

இருவரது முகங்களும் மலர்ந் திருப்பதைக் கண்டுவிட்டுத் தூக்கி வாரிப்போட்டது எனக்கு! இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு நல்ல அபிப்பிராயம் வெளியிட்டால் இருவருக்கும் இனமாக ஆகாய விமானப் பயணச் சீட்டுவழங்கி, ரஷியச்

சுற்றுப்பயணத்திற்கு ஏற்பாடு செய்வதாகக் கூட்டுத் தயாரிப்பாளர் கே. ஏ. அப்பாஸ் அவர்களிடம் கூறியிருப்பாரோ!

முன்னால் பாய்ந்து சென்று, "ஹலோ சேகர்! ஹலோ சுந்தர்! இந்தப் படத்தை இறுதிவரையில் இருந்து பார்க்க உங்களால் முடிந்ததா?" என்று கேட்டேன்.

"ஒலக் ஒண்டர்புல்!" என்றார் சேகர் தன் சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுக்கொண்டு.

ஒலக் என்பவர்தான் இந்தப் படத்தின் கதாநாயகர். அவர்

ஒண்டர்புல்லாக நடிக்கவில்லை! நடந்திருக்கிறார் படம் முழுவதும். சேகருக்கு அவர் 'ஒண்டர்புல்'லாக காட்சி அளிக்கிறார்!

பர்தேசிப் படம் எடுத்தவர்கள் இந்தியப் பண்பாட்டை மட்டுமல்ல, இரண்டு பிரபல நடிகைகளை மட்டுமல்ல, சேகர் - சுந்தர் இவர்களையும் கெடுத்து வைத்திருக்கிறார்கள்! இதை 'அபாரம்!' 'இமாலய வெற்றி!' என்றெல்லாம் இருவரும் புகழ்கிறார்களே, வெட்கக்கேடு!

ரஷியாவிலிருந்து வர்த்தகத் தொடர்புகொள்ள வந்த ஒரு வியாபாரி நம் நாட்டிலுள்ள ஒரு பெண்ணைக் காதலிக்கத் தொடங்கியதே முறைகேடான செயல். அந்தக் காதலில் ஏமாற்றம் ஏற்பட்டதைச் சித்திரிக்க ஒரு திரைக் கதை! அந்த ரஷியவியாபாரியின் பணத்தை இந்தியர்கள் வழிப்பறி செய்து பரதேசியாக்கியதாக ஒரு கற்பனை! இப்படி ஒரு படம்! இதற்கு 'ஸேவாஸ் கோப்' என்று புதுப் பெயர்!

இந்தப் பரதேசிப் படத்தை வெளியிட நேரு சர்க்கார் எப்படி அனுமதித்தது?

படத்தயாரிப்பாளர் கே. ஏ. அப்பாஸ் இப்படத்தை மட்டும் திரையிடவில்லை, நேருஜியின் கண்களுக்கும் திரையிட்டு விட்டார்!

பிராட்வே டாக்கீஸுக்கு முன்னால் படை பதைக்கும் வெயிலில் பெரிய க்யூ நின்று கொண்டிருந்தது. அங்கே 'சம்பூர்ண ராமாயணம்' படம். பொழுது விடிந்து பல் தேய்த்துவிட்டு டிக்கட் வாங்கத் தியேட்டருக்கு வந்திருப்பார்கள்போல இருக்கிறது!

அவர்களுக்கு நடுவே சண்முகம் பிள்ளையும் வேர்வை வெள்ளத்துக்கு நடுவே நன்கு ஊறிக் கொண்டு காணப்பட்டார்.

"அடடா, என்ன இப்படி நீங்கள் மட்டும் தனியாக?" என்று கேட்டேன்.

"அவள் - (மீனாட்சி அம்மாள்) பெண்கள் பகுதியில் டிக்கட்வாங்கிக் கொண்டு தனியாகப் படம் பார்ப்பதாக எனக்கு முன்னால் கிளம்பி விட்டாள். அவள் ஆசையைக் கெடுப்பானேன் என்று விட்டு விட்டேன். இராமகாதை - தெரிந்த புராணக் கதை. இதில் இருவரும் சேர்ந்து கதை ஆராய்ச்சி செய்ய என்ன இருக்கிறது நீங்களே சொல்லுங்கள்" என்றார் சண்முகம் பிள்ளை.

படம் தொடங்கி, 22 - ஆயிரத்துச் சொச்சம் அடி என்று முன்

அறிவிப்பைப் பார்த்தவுடன் 'அடடா, வீட்டிலிருந்து தலையணை ஒன்று கொண்டுவராமல் போனேமே?' என்று மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டார் சண்முகம் பிள்ளை.

ராமர் வேடம் பொருத்தம், என். டி. ராமராவுக்கு வெகு பொருத்தம். பரதனாக சிவாஜி கணேசன் வந்து சிறப்பாக நடிக்கவில்லை என்றால் இப்படம் சப் என்றுதான் இருக்கும் என்று என்னிடம் பெருமையோடு சொன்னார் சண்முகம் பிள்ளை.

ஆனால் மீனாட்சி அம்மாளுக்குத் தனிப் பெருமை. பத்மினி சீதையிடம். அந்த நாளிலேயே மிதிலையில் ஜார்ஜெட் புடவையும், சாட்டின் ரவிக்கையும் இருந்திருக்கிறது என்று சொல்லிப் பெருமை கொண்டாள்.

சண்முகம் பிள்ளையை அப்படியே விட்டுவிட்டு வேறு சிலருக்கு நடுவே அமர்ந்து சற்று நேரம் படம் பார்த்தேன். "பாதுகா பட்டாபிஷேகம் வரையில்தான் படம் விறுவிறு வென்று போகிறது. பிறகு பாட்டுக்கு ஏற்பச் சம்பவங்களைக் காட்டிக் கொண்டே போகிறார்கள். சிவாஜியின் பரதன் நடிப்பைக் கண்டுவிட்டு எழுந்து போயிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்!" — இது ரூபாய் ஒன்று நயே பைசே 33 பேர்வழி ஒருவனின் கருத்து.

இடைவேளைக்குப் பிறகு முனுசாமி-மாணிக்கத்தைக் கண்டேன்.

"இது என்ன ராமரு இப்படி சண்டை போடறாரு? ராவணன் கிட்டே இருந்தும் அம்புக் குறியை அவன் மேலே பார்க்காமல் அம்பை எங்கேயோ விடுறாரே?" என்று முனுசாமி மிக வருத்தப்பட்டுக் கொண்டான்.

மாணிக்கத்தின் குறை வேறு விதமாக இருந்தது. "ஹனுமாரு விசுவரூப தெரிசனம் காட்டல்லெக். இவரு என்ன ஹனுமாரு? அப்படி காட்டினா பிராட்வே டாக்கீஸ் கொட்டகைக்கு மேலே உருவம் உயர்ந்துபோய் தியேட்டர் சொந்தக்காரனுக சண்டைக்கு வந்துட்டால் என்ன செய்வது என்று ஹனுமாரு அடக்கமா இருந்துட்டாரா?' என்று கேட்டுக் கொண்டிருந்தான்.

அத்துடன் ராவண (பகவதி)னுக்குப் பத்துத் தலைகள், இருபது கைகள் இருக்கும் என்று எதிர்பார்த்து ஏமாந்து போனான்!

அன்று இரவு வெலிங்டனில் 'வஞ்சிக் கோட்டை வாலிபன்'

படம் பார்த்துக் கொண்டிருந்த பொழுது சண்முகம் பிள்ளை - மீனாட்சி அம்மாள் இருவரையும் சேர்ந்தாற்போலப் பார்த்தேன்.

"என்ன இருந்தாலும் ஜெமினி அபிமானம் விடுமா? இது புராணப்படம் இல்லை என்று தெரிந்திருந்துங்கூட இந்தப் படத்தைப் பார்க்க வந்திருக்கிறீர்களே!" என்றேன்.

"என்னமோ டெக்னிக் நல்லா இருக்கு, வாருங்க அப்படீன்னு இவ என்னை அழைத்துக்கிட்டு வந்

துட்டா. அது என்ன டெக்னிக்கோ எனக்கு விளங்கல்லே!" என்ருர் சண்முகம் பிள்ளை.

"ஜெமினிப்படம் என்று சொன்ஞல் உடனே டெக்னிக்கைப் பற்றிப் பேச்சுக் கிளம்பிவிடும். அதைக் கேள்விப் பட்டுவிட்டு உங்கள் சம்சாரம் அந்தப் பதத்தை உங்களிடம் உச்சரித்திருக்கிருள்! அவ்வளவுதான்! இப்போது இந்தப் படத்தை பிஸினெஸுக்காக எடுத்திருக்கிருர்கள், டெக்னிக்குக்காக அல்ல!" என்றேன்.

அப்போது வைஜயந்திமாலா குளிக்கும் காட்சி ஒன்று வந்தது. அதைப் பார்த்துவிட்டு, 'சிவ சிவா' வென்று மீஞட்சி அம்மாள் கண்களை மூடிக்கொண்டாள். மூடிக் கொண்டே சொன்ஞள்: "என்ன ஆபாசம்! என்ன ஆபாசம்! வயசுப் பெண்பிள்ளைகள் இந்தக் காட்சியைப் பார்த்தால் என்ன ஆகும்? நல்லவேளையா நம்ப வயசுப் பெண்ணை அழைச்சுக்கிட்டு வராமே இருந்தமே?"

சட்டென்று சண்முகம் பிள்ளை, "மீஞட்சி, நீஎன்ன வயசுப்பெண்ணு? சும்மாக் கண்களைத் திற!" என்ருர்.

அவர்களை அப்படியே விட்டு விட்டு மாடியிலிருந்து இறங்கிக் கீழ்வகுப்புக்கு இடம் மாறிப் படம் பார்த்தேன்.

"ஜெமினி கணேசன் இந்தப் படத்தில் நன்ருகப் பேசி, நடித் திருக்கிருர். பத்மினி, வைஜயந்தி மாலா இருவரது போட்டி நடனங் களும் கண்களுக்கு நல்விருந்து. கையிலிருக்கும் காவடியுடன் தங்கவேலுவை நேராக வட பழனிக்கு அனுப்ப வேண்டியது தான்" என்று பலர் பேசிக் கொண்டார்கள்.

மூன்று படங்களைப் பற்றியும் பொதுவாகப் பொறுக்கி எடுத்த அபிப்பிராயம்:

பரதேசி:—படமல்ல, பாடம்.

சம்பூர்ண ராமாயணம்:—பரதனுக்கும் வசனம் எழுதிய ஏ. பி. நாகராஜனுக்கும் வெற்றி!

வஞ்சிக்கோட்டை வாலிபன்:—ஜெமினிக்குப் பழைய பெருமையை அளிக்கவில்லை. இருந்தாலும் ஜெமினி கணேசனுக்குப் பெருமை அளிக்கும் ஓர் அவியல் படம்.

தயாரிப்பு : அருணா பிலிம்ஸ்
வசனம் : எஸ். டி. சுந்தரம்
டைரக்ஷன் : ஆர்.எம். கிருஷ்ணசாமி
சிவாஜி கணேசன் : — கண்ணன்
சுபேதார்: எஸ்.எ. ரங்காராவ்
ராதா : ஜமுனா
மரகதம் : ருஷ்யேந்திரமணி
வக்கீல் : நாகையா
தங்கம் : சாந்தகுமாரி

திரைக் கதை-வசனம்

[ராதா தன் தோழிகளுடன் பொம்மைக்குக் கல்யாணம் செய்து வைக்க ஆசைப்படுகிறாள். கண்ணன் விளையாடிக்கொண்டிருந்த பந்து ராதையின் வீட்டுக்குள் விழுந்துவிடுகிறது. பந்தை எடுத்துப் போக கண்ணன் வருகிறான்.]

கண்ணன் : அம்மா, யாருங்க வீட்டிலே? எங்க பந்து உங்க காம்பவுண்டுக்குள்ளே விழுந்துட்டுது. அதை எடுத்துப்போடச் சொல்லுங்க.

மரகதம் : அம்மா ராதா, அதென்னமோ பந்து விழுந்துட்டுதாம், எடுத்துக் கொடுத்துடுங்க.

கமலா (தோழி): இப்போ கொடுக்க வேணும், அவுங்களை நல்லா அழவைச்சு அப்புறம் கொடுக்கலாம்.

ராதா : இதோ வந்துட்டேன். கொடு கமலா, அம்மா கோபிப்பாங்க.

[பந்தை எடுக்க உள்ளே போன ராதாவுக்குப் பின்னாலேயே சுற்றிவரும் பந்தைக் கண்ணன் கவனித்துவிட்டு]

இந்தப் பந்துக்கு இந்த வீட்டை விட்டுப்போக இஷ்டமில்லை போலிருக்கு!

[ராதாவின் தந்தை சுபேதார் வீரமுத்து வருகிறார். கண்ணனைக்

வனித்துவிட்டு யார் என்று கேட்டு அதட்டுகிறார். அவன் பந்தைத் தேட வந்ததாகச் சொன்னதை அவர் நம்ப வில்லை. பந்தை எடுத்துக்கொண்டு ஓடிவிட முயற்சிக்கிறான். அவனைப் பிடிக்க வேலைக்காரப் பொன்னனை ஏவுகிறார் சுபேதார்.]

[வீரமுத்துவின் வீடு. ஓட்டலி லிருந்து நிறைய இனிப்பு வாங்கிக் கொண்டு வருகிறார் வீரமுத்து.]

வீர: ஆமாம், உனக்குத்தான் இனிப்பே பிடிக்காதே இவ்வளவு பல காரம் எதுக்கம்மா?

ராதா: நம்ம வீட்டிலே கல்யாணம்பா.

வீர: கல்யாணமா! யாருக்கம்மா?

ராதா: நம்மவீட்டு பொம்மைக்கப்பா.

வீர: ஓ! பொம்மைக் கல்யாணமா? செய்யம்மா செய், தடபுடலா செய். பொம்மைக்குக் கல்யாணம் பண்ணினா சீக்கிரம் கல்யாணம் ஆகும்னு சொல் வாங்க.

ராதா: போங்கப்பா!

(மரகதம் வருகிறாள்.)

வீர: என்னமோ நம்ம பொண்ணு அதிர்ஷ்டம் எப்படி இருக்கோ!

மர: அதிர்ஷ்டம் அதிர்ஷ்டம்னு சொல்லிக்கிட்டே இருந்தா ஆக வேண்டியதெல்லாம் ஆயிடுமா என்ன? வயசு வந்த பொண்ணை வீட்லே வச்சுக் கிட்டு கவலைப்படற கஷ்டம் பெத்தவ ளுக்கல்ல தெரியும்.

வீர: ஆமாம், உனக்குத்தான் கவலையா?......... அடேயப்பா! மார்க் கெட் இப்போ எப்படி இருக்குன்னு நெனைக்கறே?

மர: மொதல்லே மாப்பிள்ளை கிடைக் கட்டும் அப்புறம் மார்க்கட்டைப் பத்திப் பேசிக்கலாம்.

வீர: மார்க்கட்டுன்னா காய்கறி மார்க் கெட் இல்லே மரகதம். கல்யாண மார்க்கட்டைச் சொல்றேன். அடே யப்பா! எல்லாப் பசங்களும் காசு மேலேயே கண்ணா இருக்காங்க. பி. ஏ. படிச்சிருந்தான்னா பத்தாயிரம் கேட்கறான். அதுவேறே அழகா இருந்த அறுபதினாயிரம் கேக்கறான். படிக்காதவனாயிருந்தா படிக்கறதுக் குன்னு இவ்வளவையும் சேர்த்துக் கேக்கறான். என்ன பண்றது?

மர: அப்படின்னா என் பொண்ணு கல்யாணத்தை என் கண்ணாலே பாக்கற பாக்யம் எனக்கு இல்லேங்க றீங்களா?

வீர: ஆரம்பிச்சுட்டியா உன் பல்லவியை? வர்ர தை மாசத்துலே நம்ம பொண்ணு கல்யாணத்தை தட புடலா நடத்திடலாம். கவலைப்படாதே.

[வக்கீல் குமாஸ்தா வருகிறார்.]

வக்: தைமாசம் வரையிலும் எதுக் கய்யா? நமக்கேத்த சம்பந்தமா கெடச்சா நாளைக்கே நிச்சயம் பண்ணிப் புடலாம். அதான் பாயிண்டு.

குமா: ஓங்க பாயிண்டுக்கு ஒரு ஜாயிண்டுங்க. தம்பிக்குத் தகுந்த பெண்ணா கெடைக்கணும்ங்க.

தரகர்: என்னுங்க எல்லாவிதத்திலே யும் உங்க பிள்ளைக்குத் தகுந்த பொண் தான்னு மோதல்லியே சொல்லி யிருக் கேனே. உங்களுக்கு சுபேதார் வீர முத்துவைத் தெரியுமோல்லியோ?

குமா: ஓஹோ! ...... அவரா! நம்ம முனிசீபு கோர்ட்டுக்கு போற ரோடு மொனேலே இருக்கே மாடி வீடு

தர: மாடியா! லேசா சொல்லிட் டீங்களே! பங்களான்னு சொல்லுங்க.

வக்: ஆமாம், அவர் இப்போ பென்ஷன்லே இருக்காரில்லே!

தர: இருந்தா என்ன? யானை படுத்தா லும் குதிரை உயரமுங்க. அதிலே பாருங்க இன்னிக்குக்கூட சுபேதார் வீரமுத்து வீட்டுப் பெண்கள் வெளியே போறதா இருந்தா பல்லக்கிலே தானுங்க போறது. அவுங்க முப் பாட்டன் பட்டாளத்திலே விக்டோரியா கிராஸ் வாங்கியிருக்காருங்க. அவங்க பாட்டன் போன மகாயுத்தத்திலே ஐந்தாவது ஜார்ஜை நேரிலேயே பாத்து ருக்காங்க. சுபேதார் வீரமுத்து மாத்திரம் என்ன லேசா! அன்னிக்குப் பட்டாளத்துலே கொடுத்த தலப்பா இன்னும் தலையைவிட்டே எடுக்கலேன்னா

வக்: தலைப்பாவும் பாட்டனும் யாருக்கையா வேணும்! பையனுக்குப் பொண் தானே வேணும்!

தர: பொண் மாத்திரம் என்னுங்க. ராதான்னு அழகான பேரு, அழகுக் கேத்த அறிவு, வேணுன்னா ஒரு போட்டோ கொண்டு வரட்டுங்களா?

குமா: போட்டோ எதுக்கய்யா? நாங்க என்ன சினிமாப் படமா எடுக்கப் போருேம்? அழகு, குணம் எல்லாம் சரி. அதுக்கேத்த பணம் இருக்கா

வக்: ஆமாய்யா, என் வீட்டுக்காரி ரொம்ப கண்டிப்பானவ. அவளுக்கு வேண்டியதெல்லாம் பணம் ஒண்ணு தான். அதான் பாயிண்ட்.

(கண்ணன் வருகிருன்.)

வக்: கண்ணு, இப்படி வா. உனக்கு சுபேதார் வீரமுத்துவைத் தெரியுமா?

கண்: எனக்கா! தெரியும்ப்பா.

வக்: தெரியுமா? அவங்க வீட்டுக்கு எப்பவானும் போயிருக்கயா?

கண்: அவங்க வீட்டுக்கா? போயிருக்கேன்.

குமா: போனியா? அப்ப கேசு ரொம்ப ஸீரியஸ்தானுங்க.

கண்: இல்லேப்பா, நான் ஒண்ணும் அநாவசியமா போலேப்பா. என் புட்பால் அவங்க வீட்டுக்குள்ளே விழுந்துடுத்து, அதை எடுத்துட்டு வற்றதுக்குப் போனேன்.

வக்: இதோ பாரு கண்ணு, அந்த பொண்ணே பாத்தியா?

கண்: அந்தப் பொண்தான் என்னே முதல்லே பாத்தது.

குமா: அந்தப் பொண்ணு பாத்தது உனக்கு எப்படித் தெரியும்?

கண்: நானும் பார்த்தேன்.

வக்: ஆஹா, அதான் அங்கே பாயிண்டு. அப்ப அந்தப் பெண்ணே உனக்குப் பிடிச்சிருக்கு.

கண்: ஆ, எனக்கா?

குமா: ஆமாம் தம்பி ஆமாம். ஒரு வேளை அந்தப் பொண்ணே நீதான் கல்யாணம் செய்துகொள்ளணும்னு தீர்ப்பு எழுதியாச்சுன்னு வெச்சுக்க, அது உனக்கு இஷ்டந்தானுன்னு அப்பா கேக்குரூர்.

கண்: என்னப்பா நீங்க ......

வக்: இந்தாய்யா, இனிமே தாமசம் வேணும். ஏன்னு பையனுக்குத் திருப்தியாப் போயிடுத்து, அதான் பாயிண்டு.

[நிச்சயதார்த்தம் செய்துவிட்டு வக்கீல் திரும்புகிருர். அவரது மனைவி தங்கம் வருகிருள்.]

"என்ன சார் இது? வசவசன்னு ஒரேடியா எட்டு பக்கம் எழுதிக் கொடுத்திருக்கீங்க!"

"வசனம் ஐயா வசனம்"

தங்: அப்படின்னு கல்யாணம் நிச்சயம் என்குறீங்க.

வக்: ஆமா, நான் வாக்குக் கொடுத்துட்டேன்.

தங்: அப்ப நான் கொடுத்த வாக்கு என்ன ஆகுறது?

வக்: அப்பப்பா, இன்னும் எதுக்கு இந்தப் பணத்தாசை? நமக்கு இருக்கறது போருது.

தங்: இருக்கறது குறையாமெ இருக்கத்தான் அந்தஸ்துக்குத் தகுந்த சம்பந்தம் செய்யணுங்கறேன்.

வக்: அவங்க அந்தஸ்து இல்லாதவங்கன்னு யார் சொன்னு உனக்கு?

தங்: சொல்லியா தெரிஞ்சிக்கணும். பார்த்தா தெரியல்லே பவிஷு?

வக்: அவங்க யோக்யதை உனக்கு என்னடா தெரியும்? நாளைக்கு அவங்க கொடுக்கற சீர் வரிசையை வைக்க நம் வீட்டிலே இடம் போதாதடி இடம் போதாது.

தங்: அதையும் பாக்கத்தானே போறேன்.

[கல்யாணம் நடந்து விடுகிறது. எதிர் பார்த்த சீர் வரிசைகள் வரவில்லை என்று குமுறிக் கொண்டே தங்கம் வருகிறாள்.]

தங்: என்னாங்க இப்படி வாங்க. ஒங்களைத்தானே இப்படி வாங்க.

வக்: ஏன் என்ன விஷயம்?

தங்: விஷயம் என்னன்னு என்னையா கேக்கறீங்க. நான் ஏன் சொல்றேன்? நீங்களே போயிக் கண்ணைத் திறந்து பாருங்க. பெரிய பணக்காரச் சம்பந்தம்னு பெருமைப்பட்டீங்களே. கொடுக்கற சீர் வரிசையை வைக்க நம்ப வீடே போதாதுன்னீங்களே. அந்த லட்சணத்தைப் போயிப் பாருங்க.

வக்: உஸ், சத்தம்போடாதே தங்கம். யாராவது கேட்டா சிரிக்கப் போறாங்க.

[அவர்கள் இருவரும் பேசுவதைக் கேட்டுக் கொண்டே வீரமுத்து வருகிறார்.]

வீர: அம்மா என்ன சொன்னீங்க?

தங்: சொல்றதா? செய்யறதையும் செஞ்சுட்டுக் கேள்வி வேறக் கேக்கரீங்களா கேள்வி? நாங்க இங்கே தானத்துக்கு வந்தோமா? வீட்லே கிடந்த ஓடசலை எங்க தலையிலே கட்டிட்டுச் சீதனம் கொடுத்தாச்சுன்னு பேர் வாங்கலாம்னு பாத்தீங்களா? கொடுக்க கதி இல்லாட்டா மொதல்லியே இல்லேன்னு சொல்லியிருக்கணும். எதுக்கு இந்த பித்தலாட்டம்? ஏன் இந்த வெட்டி ஜம்பம்?

வீர: அம்மா! நீங்க அளவுக்கு மீறிப் பேசுரீங்க. நான் அன்னிக்கே விளக்கமா சொன்னேன். நாங்க ஏழைங்கதான், அதிகமா எதுவும் எதிர்பார்க்க வேண்டாம்னு. என்ன வக்கீல் சார், ஏன் பேசாமெ இருக்கீங்க? சொல்லுங்க.

வக்: ஆமாம், சொன்னீங்க. உங்க பட்ஜெட் இவ்வளவு மோசமா இருக்கும்னு நான் கண்டேனா.

வீர: அதுக்கு நானா பொறுப்பு?

தங்: இந்த லட்சணம் தெரிஞ்சிருந்தா உங்க வாசலை மிதிச்சிருக்கவே மாட்டோம்.

வீர: இப்படியும் பேசுவீங்கன்னு தெரிஞ்சிருந்தா என் பொண்ணைக் கொடுத்திருக்கவே மாட்டேன்.

தங்: அப்படின்னா உங்க பொண்ணை உங்க வீட்டிலேயே வெச்சுக்கோங்க. இப்படி ஒரு கல்யாணமே நடக்கல்லேன்னு நெனைச்சுக்கங்க.

அருணா பிலிம்ஸ்
பொம்மை கல்யாணம்
டைரக்ஷன்
R.M. கிருஷ்ணசாமி

வீர: அது எப்படியம்மா முடியும்? கட்டின மாங்கல்யம்...

தங்: அவசியமில்லேன்னு அறுத்துப் போடச் சொல்லுங்க.

வீர: என்ன!

ராதா: அப்பா!

வீர: (அலுப்புடன்) கடவுளே! போதும் இந்தச் சோதனை! ஏழையாயிருக்கலாம். ஆனால் ஒரு பெண் குழந்தைக்குத் தகப்பனாயிருக்கும் தண்டனை மட்டும் எனக்கு வேண்டாம். எந்த ஜன்மத்திலும் வேண்டாம்.

[கண்ணனைப் பார்த்து]

தங்: இன்னும் ஏண்டாப்பா பாத்துக்கிட்டிருக்கே? புறப்படு போகலாம். இந்தப் பொண்ணு போனா, ஆயிரம் பொண்ணு, காத்துக்கிட்டிருக்கு! ஆயிரம் பொண்ணு உம்!

கண்: முடியாத காரியம் அம்மா!

தங்: ஓகோ! பத்து மாசம் சுமந்து பெத்த அம்மாவைவிட இன்னிக்கு வந்தவ உனக்கு ஒசத்தி ஆயிட்டாளா?

கண்: மன்னிக்கணும் அம்மா. என்னைப் பெற்று வளர்த்த உங்களுக்கு ஆயுள் பூராவும் கடமைப் பட்டிருக்கேன். கல்யாணம் ஆயிரங் காலத்துப் பயிர், எதிர்காலத்தின் வழி காட்டி. என் மனைவியை நான் காப்பாற்றியே ஆகவேண்டும்.

தங்: இதுதான் உன் முடிவா?

கண்: வேறென்னம்மா, யோசித்துப் பாருங்கள். உங்களுக்கு ஒரு பெண் இருந்து, அதன் கல்யாணப் பந்தலிலே இப்படி ஒரு ஆபாசம் நடந்தால் உங்கள் மனம் எவ்வளவு கஷ்டப்படும்? பணத்தாசை குடும்ப வாழ்வை அழிக்கும் ஒரு நாச கருவி அம்மா. அதற்கு நாம் அடிமையாக வேண்டாம்!

[மண அறைக்குள்]

கண்: ராதா! பேசு. காலைப் பார்த்து பேசறதைவிடக் கண்ணைப் பார்த்துப் பேசினா, ஒவ்வொரு வார்த்தையும் மனசுலே நல்லாப் பதியும். பேசு.

ராதா: நீங்க ரொம்ப நல்லவங்க.

கண்: ஒண்ணு,

ராதா: ஒங்க பெருந்தன்மையை மறக்கவே முடியாது.

கண்: ரெண்டு.

ராதா: எங்க குடும்ப கௌரவத்தே காப்பாத்தினீங்க.

கண்: மூணு.

ராதா: பத்து பேர் மத்தியிலே எங்க மரியாதையெ பாதுகாத்துப் பெரிய தியாகமே செய்தீங்க.

கண்: ஸ்டாப்! ஸ்டாப்! நான் என்ன அவ்வளவு பெரிய தியாகம் செய்துட்டேன். சாதாரண மனுஷன் செய்ய வேண்டிய கடமையைச் செய்தேன்.

ராதா: நீங்க செய்த தியாகத்துக்கு நன்றி செலுத்த எனக்கு இந்த ஒரு ஜென்மம் போதாது.

[சில நாட்களுக்குப் பிறகு வக்கீல் வீட்டில் பிடிக்காத நாட்டுப்பெண் ராதாவை தங்கம் ஏசிக்கொண்டிருக்கிறாள். ஒருநாள் கண்ணம்மாவுக்கு ராதா இங்கிலீஷ் கற்றுக்கொடுக்கும் போது தகராறு முற்றிவிடுகிறது. கண்ணன் வருகிறான்.]

கண்: எல்லாம் தெரியும். நீங்க எதுக்காக இப்படி ரகளை பண்றீங்கன்னு அம்மா. உங்களுக்குப் பிடிக்காத பொண்ணை நான் கல்யாணம் செய்துகிட்டதுக்காக அவளை எதுக்கு அனாவசியமாக் கொடுமைப் படுத்துறீங்க? நாங்க இருக்கிறது உங்களுக்குப் பிடிக்கல்லேன்னா இப்பவே வெளியே போயிடுறோம். இந்த வீட்லே நீங்களே சுகமா இருங்க. ராதா, வா போகலாம்.

(வக்கீல் வருகிறார்)

வக்: என்னடா இது ரகளை?

கண்: இனிமே அவ்வளவு தாம்பா. எங்களாலே யாருக்கும் தொந்தரவு வேண்டாம். நாங்க எங்கேயாவது போயிடுறோம்.

தங்: நீங்க ஏண்டா போறீங்க? நான் தொலஞ்சு போறேன்.

வக்: அடடா, இது என்ன கர்மம்! அப்பப்பா......

(துவண்டு விழுந்துவிடுகிறார்.)

[ராதா துளசி மடத்திற்கு முன்னால் நின்றுகொண்டே]

ராதா: தாயே, என்னால் இந்த வீட்டில் சண்டை சச்சரவு ஏற்படாமே அமைதி நிலவச் செய்யம்மா. நான் ஒரு வேலைக்காரியாகவாவது இருந்து இந்த வீட்லேயே வாழக் கிருபை செய் தாயே!

★ ★ ★

[வீரமுத்துவின் வீடு. வேலைக்காரி வள்ளி மூலம் ராதா புக்ககத்தில் பல

வரதட்சணைக் கொடுமையை
சித்தரிக்கும் இப்படம் தமிழ்
நாடெங்கும் வெற்றிகரமாக
நடைபெற்று வருகிறது.

" இப்பொழுது நீ கதாநாயகி! மறந்து போய் நடனமாடத் தொடங்கிவிடாதே'' என்று ஈ. வி. சரோஜாவிடம் பாலாஜி கைநீட்டி வேண்டிக் கொள்கிருர?—'சுமங்கலியில்'.

விதமாகக் கஷ்டப்படும் செய்தியை அறிகிருர் வீரமுத்து. தங்கள் குடும்பத்தைப் பற்றி அங்கு கேவலமாகப் பேசப்படும் செய்தியும் எட்டுகிறது அவருக்கு.]

வீர: அவ்வளவு தூரத்துக்கு ஆயிட்டதா? என் உயிர் இருக்கறபோது என் பொண் கஷ்டப்படறதா? முடியாது. இப்பவே போறேன். என்னன்னு விசாரிச்சுகிட்டு வரேன்.

மர: கொஞ்சம் பொறுமையா இருங்க. பண்டிகை நாளும் அதுவுமா அவங்க கிட்டே எதுக்கு வீண்வம்பு?

வீர: நீ பேசாமே இரு. என் பொண்ணு அங்கே கண்கலங்கி இருக்க நான் பொறுக்கமாட்டேன்.

★ ★ ★

[வீரமுத்து சம்பந்தி வீட்டிற்குச் சென்று சண்டையிடுகிருர். அவர்களின் ஏச்சுப் பொறுக்காமல் பெண் ராதாவைத் தன்னேடு கூட்டிவந்து விடுகிருர் கண்ணன் வீட்டிலில்லாத பொழுது. கண்ணன் வீட்டிற்கு வந்ததும்]

கண்: ராதா எங்கே?

தங்: அவள் இங்கே ஏன் இருக்கப் போறு? அவங்க அப்பன் பின்னடியே போயிட்டா.

கண்: ஹா! எங்கிட்டே சொல்லாமலா?

[கண்ணன் வெறுப்போடு மாடிக்குச் செல்லுகிருன். தங்கம் புன்முறுவல் பூக்கிருள்.]

[வீரமுத்துவின் வீடு. ராதாவை அழைத்துச் செல்லும் நோக்கத்துடன் கண்ணன் வருகிருன்.]

★ ★ ★

வீர: எந்த முகத்தோடெ என்னைப் பார்க்க வந்தே? உங்க அம்மா செஞ்ச அவமான மெல்லாம் போதாதா? இன்னும் ஏதாவது பாக்கி இருக்கா?

கண்: மாமா! பெரியவங்களே இப்படிப் பேசின எப்படி?

வீர : வீணுப் பேசி வயத்தெரிச்சலேக் கிளப்பாதே. பணக்காரங்கங்கிற திமிரிலே என் பொண்ணெ படாதபாடு படுத்திப் பட்டினி போட்டுக் கொல் றீங்களா?

கண் : இதெல்லாம் எனக்கு இப்பத் தான் தெரியும். இனிமே இப்படி எதுவும் நடக்காமே பார்த்துக்கிறேன்.

வீர : பாத்துக்குவே, என்ன பாத்துக் குவே? அம்மா சொல்றபடி ஆட்ற விளேயாட்டுப் பிள்ளை நீ. இதோ பாரு முடிவாச் சொல்லுறேன். உங்க அம்மா அந்த வீட்டில் இருக்கறவரைக்கும் என் பொண்ணு அங்க வாசப்படியை மிதிக் காது. இந்த சுபேதார் வீரமுத்து உயிரோடு இருக்கர வரைக்கும் அது நடக்காது போ.

[கண்ணன் மன்ருடியும் பயனற்றுப் போகவே போய்விடுகிருன்.]

ராதா : (அழுதுகொண்டே) அம்மா!

★ ★ ★

[வக்கீல் வீடு. கண்ணன் சரிவரச் சாப்பிடாமல் துயரத்தோடு காணப்படு கிருன். அவன் மனதை மாற்ற தங்கம் பலவித முயற்சிகள் செய்கிருள்.]

தங் : வேண்டான்னு உதறித்தள் ளிட்டு ஓடின அவளே நினெச்சு நீ ஏண்டா இப்படி இடிஞ்சுபோயி உக் காந்திருக்கே? பொம்பளேக்கு அவ்வ ளவு வீராப்பு இருக்கும்பொழுது ஆம் புளே நீ எதுக்காகக் கவலேப்படணும்? கண்ணு, என் பேச்சைக் கேட்டு கண் ணம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கோ.

கண் : கட்டின மனேவிக்கு துரோகம் செய்வது மகா பாபம்மா.

தங் : போறுண்டா உன் வேதாந்தம்! உன்னேச் சொல்லி என்னடா பிரயோ சனம்? எல்லாம் என் தலேவிதி. உங் கப்பா இருந்தால் இப்படி எதிர்த்துப் பேசுவியா? அவருக்குக் கொடுத்த வாக்கைக்கூட மறந்துட்டியா?

குரல்: தாய் சொல் தட்டாதே. அவள் மனதை புண்படுத்தாதே

கண் : அப்பப்பா, ஏம்மா என் உயிரை வாங்கறீங்க? என்ன வேணுமின்னுலும் செய்யுங்க.

★ ★ ★

அச்சடிப்பவர்களுக்கும், இதர உபயோகங்களுக்கும் ஏற்ற எல்லா விதமான காகிதங்களும், பித்தளே தாமிர வில்லேகளும், இதர உலோகத் தகடுகளும் கம்பிகளும் எம்மிடம் கிடைக்கும்.

பி. எஸ். என். எஸ்.

அம்பலவாண செட்டியார் & கோ., லிமிடெட்

(Prop: SRI RAM ROLLING MILLS)

தங்கசாலே தெரு, சென்னே-3

Telegrams: "BRACOMETAL" Telephone: 55106 (Factory: 55104)

இத்துடன் இணேக்கப்பட்ட ஸ்தாபனம்:

பி. எஸ். என். எஸ். அம்பலவாண செட்டியார்

மட்டஞ்சேரி - - - - கொச்சி.

[கண்ணனிடமிருந்து கடிதம் வருகிறது. அதில் இரண்டாம் கல்யாணம் நிச்சயமாகிவிட்டது என்ற செய்தி அடங்கி இருக்கிறது. 'உனக்கும் இந்த வீட்டிற்கும் இனி எவ்வித சம்பந்தமும் கிடையாது' என்றும் எழுதப்பட்டிருக்கிறது.]

மர: ராதா, உன் தலைவிதி இப்படியா வந்து முடியணும்? இதுக்காகவா என் வயத்திலே பொண்ணைப் பிறந்தே!

ரா: அழாதீங்க அம்மா. நல்ல காரியத்துக்கு நாம் அழலாமா? என்னைக் கல்யாணம் செய்துகொண்டு அவர் பட்ட கஷ்டம் போதும். என் விதி அப்படி. அவராவது நிம்மதியாக இருக்க ஆண்டவன் துணை செய்யட்டும். இனி அவர் இன்பம்தான், என் துன்பத்திற்கு ஆறுதல் தரமுடியும். நீங்களும் மனப்பூர்வமாக வாழ்த்துங்கள் அம்மா.

★ ★ ★

[கண்ணனுக்கு இரண்டாவது கல்யாணம் நடத்தஏற்பாடாகி இருக்கிறது. முகூர்த்த நேரத்திலே கண்ணன் மாடியிலிருந்து விழுந்து மண்டை உடைந்துவிட்டதாக ராதாவுக்குச் செய்தி வருகிறது. செய்தி கேட்டுத் தன் கணவனைக் காணத் துடிக்கிறாள் ராதா. வீரமுத்து போகக்கூடாதெனத் தடுக்கிறார். 'மறுபடியும் அங்கேபோய் மானம் கெட்டு வரப்போகிறாயா' என்று கேட்கிறார்.]

ரா: அடித்தாலும் வெறுத்தாலும் அவர்தானே அப்பா எனக்கு எல்லாம். அதுதான் அப்பா என் சொர்க்கம். வேண்டாம் என்பதால் விட்டுப் போகுமா என் உறவு?

வீர: மறுபடியும் உள்ளே வரக்கூடாதுன்னு அவுங்க விரட்டினா என்ன செய்வே? அவங்க கால்லே விழுந்து கெஞ்சப்போறே. இல்லேன்னா அனாதை மாதிரி தெருவிலே நின்னு தீண்டாடப் போறே, அவ்வளவுதானே?

ரா: இல்லை. அங்கே நரகவேதனை அனுபவித்தாலும் என் உரிமைக்காகப் போராடுவேன். பொறுமையின் எல்லை கண்ட ஒரு பெண் எப்படி உறுதியோடு வாழ முடியும் என்பதை நிரூபிப்பேன். ஸத்யத்தின் பலத்தோடு தர்மத்தின் துணையோடு நான் போகிறேன். இப்பெருமையை நிலைநாட்டிடுவேன். உங்கள் கௌரவத்தைக் காப்பாற்றுவேன். உத்தரவு கொடுங்கள் அப்பா.

வீர: சபாஷ் – சபாஷ். இன்னிக்குத் தாம்மா நீ சுபேதார் வீரமுத்துவின் செல்வ மகள்.

[கட்டுண்ட தலையுடன் கிடக்கும் கண்ணனின் படுக்கைக்கு அருகே ஓடி வந்த ராதா]

ரா: வந்துட்டேன் அத்தான். வந்துட்டேன்.

கண்: வந்துவிட்டாயா ராதா. இனி எனக்கு எதுவும் வேண்டாம். நீ இங்கேயே இருந்தால் என் துன்பமெல்லாம் தீர்ந்துவிடும். ராதா. இத்தனை நாளா உன்னை விட்டுப் பிரிந்திருந்தேன், நான் துர்ப்பாக்யசாலி.

ரா: அப்படிச் சொல்லாதீங்க அத்தான், உங்களுக்குப் பணிவிடை செய்ய முடியாமல் பிரிந்திருந்த நான்

ரூபாய் 6/- க்கு ஒரு கடிகாரம்

சங்கிலித் தொடர்பு முறையில் ரூ. 6/-க்கு ஒரு கடிகாரத்தைப் பெறுங்கள். 15 ஜுவல்கள் கொண்ட இக்கடிகாரம் 5 வருஷ உத்திரவாதமுள்ளது. தபால் செலவு 1-25 நயாபைசே தனி. எங்களுடைய பாரடைஸ் சென்டைப் பிரபலப் படுத்தவே, இதை ஆரம்பித்திருக்கிறோம். நீங்கள் விரும்பாவிட்டால் பணம் வாபஸ்.

American Trading Company,

(Watch Suppliers)

(W-1) JULLUNDER CITY.

தான் பாபம் செய்தவள். அத்தே, அந்த மருந்தை இப்படிக் கொடுங்க.

கண் : ராதா, இனிமேல் நீ என்னை விட்டுப் பிரியவே கூடாது. அம்மா என்ன சொன்னாலும் சரி, இங்கிருந்து போகாதே.

ரா: இல்லே அத்தான், போக மாட்டேன். என் உயிருள்ளவரை உங்களைவிட்டுப்போகமாட்டேன். இந்த உலகில் எவருமே நம்மைப் பிரிக்க முடியாது அத்தான். அத்தான் மரணத்தால்கூட நம்மைப் பிரிக்க முடியாது.

சீர் வரிசையைக் கண்டு சீறி நிற்கிற சாந்த குமாரிக்கு, சுந்தரிபாய் தூபம் போடுகிறார்!
—"பொம்மை கல்யாணத்தில்"

கண் : ஆம் ராதா! நம் உயிர் ஒன்று உடல்தான் இரண்டு. இனி எவரும் நம்மைப் பிரிக்க முடியாது.

[வீரமுத்து வீடு]

வீர: பணத்துக்காக என் பொண்ணு வாழ்க்கை நாசமாகக் கூடாது.

மர: என்னங்க இது?

வீர: பார் மரகதம் பார். என் பொண்ணுக்கு வேண்டிய சீர் வரிசையை எவ்வளவு சிறப்பா செய்ய றேன் பாரு. இந்த ஊரே ஆச்சரியப் படும்படி செய்யறேன்.

மர: இப்ப எப்படிச் செய்யப் போறீங்க?

வீர: இந்த வீடு பென்ஷன் எல்லாத்தையும் வித்துடப் போறேன்.

மர: என்ன கடைசீ காலத்திலே நிழல் கொடுக்கிற வீடு, அரை வயத்து சாப்பாடு போடற பென்ஷன் ரெண்டையுமா வித்துடப் போறீங்க.

வீர: ஆமா விக்கத்தான் போறேன். ஏழைகளுக்கு உசிரைவிட மானம் தான் பெரிசு என்கிறதை நிரூபிச்சுக் காட்றேன்.

[கண்ணனுக்கு அருகே இருக்கும் ராதையை கண்ணம்மாவின் பேச்சைக் கேட்டுக்கொண்டு வெளியே விரட்ட முயற்சிக்கிறாள் தங்கம்.]

தங்: போடி வெளியே, உம்.

ரா: உஸ். சத்தம் போடாதீங்க! அவர் தூங்கறார்.

தங்: அவராவது சுவராவது, போடின்னா, அவனுக்கும் உனக்கும் ஒருவித சம்பந்தமும் கிடையாது, போ வெளியே.

ரா: நீங்க கிடையாதுன்னு சொல்லிட்டா தீர்ந்து போயிடுமா இந்த சம்பந்தம். ஆண்டவன் ஒன்று சேர்த்த அன்பின் உறவு சாகும்வரையில் விட்டுப் போகாது எங்கள் உறவு.

தங்: அப்படின்னா இப்பவே செத்துத் தொலை.

ரா: செத்தாலும் அவர் காலடியில் சாவேனே தவிர இங்கிருந்து மட்டும் போகமாட்டேன்.

[ராதாவை பலாத்காரமாக வீட்டை விட்டு வெளியேற்ற ஏற்பாடுசெய்கிறாள் தங்கம். போக மறுத்து விம்மி அழுகிறாள் ராதா. அப்போது ஏகப்பட்ட சீர் வரிசைகளுடன் வீரமுத்து உள்ளே வருகிறார்.]

வீர: எல்லாரும் அப்படியே நில்லுங்க டேய் பொன்னு தட்டை இப்படிக் கொண்டா. அம்மா ராதா வாம்மா.



சமீபத்தில் பிரபல ஆந்திர ஹாஸ்ய நடிகர் ரேலங்கி தம் மகன் சத்திய நாராயண பாபுவின் திருமணத்தை விஜயா கார்டனில் சிறந்த முறையில் நடத்தினார். மணமகள் குசும குமாரி. ரேலங்கி தம்பதியும்–புதிய தம்பதியும்.

உன் மாமியாரையும் கூப்பிடு. சீர் வரிசைன்னு பொலம்பிக்கிட்டிருந்தாளே, வந்து பார்க்கச் சொல்லு

[வீரமுத்து அப்படியே திரும்பிப் பார்க்கிறார். கதவு உடைந்து காயமுற்றுக் கிடக்கிறாள் தங்கம்.]

வீர: ஆ என்னம்மா அது என்ன் நடந்தது?

தங்: எல்லாம் நியாயமாகத்தான் நடந்திருக்கு. நான் செய்த பாபத்திற்குத் தகுந்த தண்டனை. இதை நான் அனுபவித்தே ஆகணும். நல்லா வாழவேண்டிய குடும்பத்தை நாசமாக்க நினைச்சேன். பரிசுத்தமான மனசைப் பாழ்படுத்த நெனச்சேன். கடவுள் என்னைத் தண்டித்து விட்டார். அம்மா ராதா! உன்னைச் சித்ரவதை செய்து படாதபாடு படுத்தினேன். நீ பொறுமையாயிருந்து உன் புருஷனைக் காப்பாற்றினாய். பிறந்த இடத்திற்கும் புகுந்த இடத்திற்கும் பெருமை தேடின புண்யவதி நீ. என்னை மன்னிச்சுடு அம்மா.

ரா: அத்தே.

தங்: கண்ணு நீயும் என்னை மன்னிச்சுடு, பாழும் பணத்தின்மேலிருந்த பாசங்கூட பெத்த பிள்ளையின்மீது இல்லாத பாவியாயிட்டேன்.

கண்: அம்மா.

தங்: அழாதேப்பா. நான் செய்த பாபம் உன் அழுகையால் தீர்ந்து போவதல்ல. என்னை மறந்துவிடப்பா. ஆண்டவன் கிருபையால் நீங்கள் நீடுழி காலம் ஆனந்தமாக வாழுங்கள்.

[தோட்டத்திலே ராதாவும் கண்ணனும் 'இன்பமே, பொங்குக' என்று பாடுகிறார்கள்.]

சுபம்.

Printed by K. Ganapathiraman at the Vadapalani Press, Madras-26 and Published by K. Radhakrishnan, 6 Conronsmith Road, Madras-6 for M/s. Nataraja Publications. Managing Editor : K. Radhakrishnan.

மே 3வ முதல்

தென்னுடெங்கும் மகத்தான ஆரம்பம்

அருணு பிலிம்ஸ்

பொம்மை கல்யாணம்

டைரக்ஷன்:
R.M.கிருஷ்ணஸ்வாமி

தயாரிப்பாளர்கள்
M.ராதாகிருஷ்ணன்
R.M.கிருஷ்ணஸ்வாமி

விநியோகஸ்தர்கள் : சென்னை நகரம் & சேலம் : சுப்பு & கோ. லிட்., மதராஸ்-17. வட ஆற்காடு, தென் ஆற்காடு & செங்கல்பட்டு : கீதா பிக்சர்ஸ், குடியாத்தம் (N. A.) மதுரை, ராமநாதபுரம் & திருநெல்வேலி : இந்தியா டாக்கீஸ் & டிஸ்ட்ரிப்யூஷன் கம்பெனி லிட்., திருநெல்வேலி. கேரளா ஸ்டேட் : அஸோஸியேடட் பிக்சர்ஸ் லிட்., எர்ணுகுளம்-1. கோயமுத்தூர் & நீலகிரி : ஆனந்தா பிலிம்ஸ், கோயமுத்தூர், மைசூர் ஸ்டேட் : விஜயா டாக்கி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ், பெங்களூர்-9.

உரிமை பெற்றவர்கள் : திருச்சி, தஞ்சாவூர் : வீயார் பிலிம்ஸ் லிட்., புதுக்கோட்டை, எப். எம். எஸ். : ஷா பிரதர்ஸ் லிட்., சிங்கப்பூர். ஸிலோன் : ஸினிமாஸ் லிட்., கொழும்பு.

இலங்கையில் கிடைக்கும் இடம்: A. V. R. A. LTD., Colombo.
ரேடியோ ஸிலோன் 41-72 மீட்டரில் 'இசை விருந்து'—
வெள்ளிக்கிழமை தோறும், மாலை 6-30 முதல் 6-45 வரை.